பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 10 ஞாயிற்றுக்கிழமை (24.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 179

### அகதிகளுக்கு உதவ தொண்டர் அமைப்புகளுக்குத் தடை விதிக்கக் கூடாது

# உகந்த அரசியல் தீர்வு காணாவிடில் முந்திய வரலாறு மீண்டும் திரும்பும்!



## ஐ.நா. பொதுச்செயலாளர் மூன் எச்சரிக்கிறார்



கண்டி, மே 24

இலங்கையில் வாழும் சிறுபான்மையின மக்களின் பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு காணப்படவேண்டும். அதன் மூலம் அவர்களிடம் நம்பிக்கையை கட்டி எழுப்ப வேண்டும் .இல்லையேல் இந்த நாட்டில் முந்திய வரலாறு மீண்டும் வரும் நிலையே உருவாகும்.

இவ்வாறு எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டிருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன்.

போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் செல்வதற்கு எந்தவித தடையும் விதிக்கக்கூடாது; அனுமதி வழங்க வேண்டும் என்றும் செயலாளர் நாயகம் வற்புறுத்தினார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம்-மே,24

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை திங்கட்கிழமை இடம்பெறும் என்று யாழ் சிவில் நிர்வாகஅலுவலகம் நேற்றிரவு அறிவித்துள்ளது. காலநிலை சீரில்லாத காரணத்தால் இன்று சேவை இடம்பெறமாட்டாது என்றும் நாளை முதல் வழமை போல் சேவை இடம்பெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மனிக் பாம் முகாமில் அகதிகள் படும் அவலங்கள் கண்டு அதிர்ந்து போனதாகக் கூறினார் ஐ.நாவின் செயலர்

கொழும்பு, மே 24

இந்த முகாமை பார்வையிட்ட பின்னர் நான் மிகவும் அதிர்ந்து போனேன். போரில் காயமுற்ற பலரை அங்கு காணமுடிந்தது. முகாமில் காண நேர்ந்த காட்சிகள் மக்கள் படும் அவலங்கள் என்னை மிகுந்த துயரடையச் செய்தன, மனம் கூனிக்குறுகியது.

வவுனியாவில் உள்ள மனிக்பாமில் உள்ள முகாமைச் சென்று பார்வையிட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் இவ்வாறு தம்முடன் சென்ற வெளிநாட்டு செய்தியாளரிடம் கூறினார் என்று லண்டன் டெய்லி கிராப் பத்திரிகையின் செய்தியாளர் தமது அறிக்கையில் தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச்செயலாளருடன் சென்ற பி.பி.ஸி செய்தியாளர் தெரிவிப்பதாவது:- (20 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை அரசமைப்பின் கீழான

## அதிகாரப் பரவலாக்கலே உகந்த தீர்வு; இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் சொல்கிறார்

புதுடில்லி, மே 24

இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு அந்த நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரத்தைப் பரவலாக்குவதே சிறந்த, உகந்த தீர்வாகூ அமையும். அவ்வாறு செய்வதன் மூலம் அந்த நாட்டில் நிலவும் இனப்பிரச் சினையின் மூலகாரணங்களைக் கிள்ளி எறிய முடியும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா.

அமைச்சர் பதவியை ஏற்றபின்னர் முதலாவது செய்தியாளர் மாநாட்டை அவர் நேற்று நடத்தினார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## அரசில் சேர்வது குறித்து தி.மு.க. முடிவு செய்யும்

புதுடில்லி, மே 24

இந்திய மத்திய அமைச்சரவையில் இடம்பெறுவது தொடர்பாக தி.மு.க. தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருவதாக தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

இரண்டொரு நாள்களில் இந்த விடயம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அமைச்சரவையில் ஐந்து அமைச்சர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்று சேர்க்கப்பட்டுள்ள எமது நாட்டை எந்தவகையிலும் இரண்டாகப் பிளவுபட அனுமதியோம்

### தலதா மாளிகை விருது வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி சங்கற்பம்

கண்டி, மே 24

இப்போது ஒன்று சேர்க்கப்பட்டுள்ள எமது நாடு, இனிமேல் எந்த வகையிலும் இரண்டாகப் பிளவுபடுவதற்கு இடமளிக்கபடமாட்டாது- என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் தமக்கு அளிக்கப்பட்ட விருது வழங்கும் நிகழ் வில், நன்றியுரை ஆற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## பறந்தார்; பார்த்தார்; மனம் நொந்தார் பான்!

கொழும்பு, மே 24

மோதல்களில் முற்றாக அழிந்த வீடுகளும் எரிந்து எலும்புக் கூடுகளாக இருக்கும் வாகனங்களும் வேரோடு பிடுங்கப்பட்டிருக்கும் மரங்களும் குண்டுத் தாக்குதல்களால் குண்டும் குழியுமாகக் காணப்படும் நிலங்களும் மக்களால் கைவிடப்பட்ட நிலையில் கூடாரங்களும் மனித நடமாட்டமே இல்லாத மயான அமைதியுமே அங்கு காணப்படுகின்றது.

மோதல் நடைபெற்ற போர் பிரதேசத்தை ஹெலிகொப்டரில் இருந்து பார்த்த பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு மனம்நொந்து கூறினார் (20 ஆம் பக்கம் பார்க்க)



இப்போது டயலொக் CDMA யாழ்ப்பாணத்திலும்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு
ரூ 5999/- மட்டுமே

- இலவச IDD இணைப்பு
- செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்
- ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை
- ரீலோட் செய்யும் வசதி

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பருத்தித்துறை, தும்பளை, நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்த வெளிமடைப் பொங்கல் 2009

மேற்படி பொங்கல் 2009.05.29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடங்கி மறுநாள் சனிக்கிழமை வரை நடைபெற உள்ளது. காவடி, கரகம், பாற்செம்பு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் அடியார்கள் வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு முன்னர் பூர்த்தி செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மடைப்பண்டம் வெள்ளிக்கிழமை மாலை பூசையுடன் (4 மணி) எடுக்கப்படும்.

ஆ. நவரத்தினசாமி, தலைவர் — ச. வீரகத்திப்பிள்ளை, செயலாளர்.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபை.



யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

## பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் :- கல்லூரி மண்டபம்
காலம் :- 07.06.2009 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை 9.30 மணி

பெற்றோர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு - பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கு அறிக்கையை பாடசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

திரு.T.கிருஸ்ணமூர்த்தி, செயலாளர். — திருமதி சீ.சண்முகநாதன் தலைவர்(அதிபர்).


## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றும் சிவரூபன் (ரூபன்) அவர்களின் அன்புத் தந்தை

### சின்னத்துரை சதாசிவம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவீன சந்தை, யாழ்ப்பாணம். — உரிமையாளர், ஊழியர்கள், ரதி பான்சி கவுஸ்.

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்துரை சதாசிவம்
(மணிக்கூடு திருத்துபவர்)

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சதாசிவம் நேற்று (23.05.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- முத்தம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் சிவரூபன் (ரதி பான்சி), சாந்தரூபன் (டுபாய்), வாசுகி (மாணவி ATI) விஜயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் (தேவர்) சகோதரனும், செல்வரூபன், கிருஷாந், கீர்த்தனா, கிந்துசா ஆகியோரின் பெரிய தந்தையும் காலஞ்சென்ற ராஜ குமாரி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம், ஜெயக்குமாரி (பிரான்ஸ்), குசலகுமாரி, சிவகுமாரி (கனடா), வசந்தகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

519,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி வினாசி செல்லம்

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் 21, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வினாசி செல்லம் நேற்று(23.05.2009) சனிக்கிழமை காலமானார்

அன்னார் பாலசுந்தரம்(சுவிஸ்), திருமதி இந்திராதேவி (ஜேர்மனி), திருமதி ரஞ்சினி(சுவிஸ்), திருமதி சந்திரா, திருமதி நிர்மலா (ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி), பாலமோகன், காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் தவமலர்(சுவிஸ்), சிவராசா(ஜேர்மனி), மரியதாஸ்(சுவிஸ்) ஆகி யோரின் அன்பு மாமியும் துஜிதா, கெவின்(சுவிஸ்), கஸ்தூரி (சுவிஸ்),மீனுஜா(சுவிஸ்), வித்தகி, தோத்திரறூபன், காலஞ் சென்றவர்களான பிரதீபன், பிரகாந்த் ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

21,பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை. யாழ்.

தகவல்:
தவரத்தினம்
மோகனச்செல்வன்(மருமகன்)

## வலி.கிழக்கில் விவசாயிகள் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது

இணுவில்,மே 24

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வென்றெடுக்கும் நோக்கில் வலி.கிழக்குப் பகுதியில் புதிய விவசாயிகள் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உரரும்பிராய் திருக்குமரன் சனசமூக நிலையத்தில் வலி.கிழக்குப் பிரதேச உரும்பிராய் உப அலுவலக உத்தியோகத்தர் எஸ்.இராசையா தலைமையில் கோப்பாய், புத்தூர், சிறுப்பிட்டி, உரும்பிராய், அச்சுவேலி போன்ற பிரதேசங்களிலிருந்து வருகை தந்த சுமார் 250 விவசாயிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் இச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

உரும்பிராயைச் சேர்ந்த கணேசலிங்கம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். மேலும் 15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (1-45)

## நீரிறைக்கும் இயந்திரம் இரவுநேரம் திருட்டு

மட்டுவில், சந்திரபுரம் பகுதி தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் இரவோடிரவாக திருட்டுப் போயுள்ளது.

இது சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இந்நபரை ஜூன் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (1-207)

## ஆக்கத்திறன் போட்டி

தென்மராட்சி பிரதேச எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து இவ்வருடத்திற்கான (2009) ஆக்கத்திறன் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினரால் கவிதை, கட்டுரை, சிறுகதை, குறும்பட ஆக்கம் ஆகிய போட்டிகள் பிரதேச ரீதியல் திறந்த போட்டியாக நடத்தப்படவுள்ளன.

தேசிய மரபுரிமை சிறுவர்களுக்கானது என்னும் கருப்பொருளில் ஆக்கங்கள் அமைய வேண்டும்.

பிர்தேச கலாசாரப் பிரிவில் உரிய படிவத்தினைப் பெற்று ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைக் கையளிக் குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## காரைநகர் பெற்றோருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 24

தீவக வலயத்தில் காரைநகர் பிரதேச பெற்றோர்களுக்கான விசேட கல்வி விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை திங்கட் கிழமை யாழ்ரன் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வு பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் எனவும் காரைநகர் பிரதேசத்திலுள்ள பெற்றோர் கலந்துகொள்ள வேண்டும் எனவும் தீவக வலயக் கல் விப் பணிப்பாளர் சி.ரி.இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார். (1-267)

## தீவக வலயத்தில் ஆங்கில தின போட்டி

யாழ்ப்பாணம், மே 24

தீவகவலயப் பாடசாலைகளிடையே ஆங்கில மொழித்திறன் போட்டிகள் நாளை திங்கட்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியர் கல்லூரியில் நடைபெறும்.

நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் உரிய பாடசாலைகள் நேரத்திற்கு வரவேண்டும் எனவும் ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.கதிரேசபிள்ளை அறிவித்துள்ளார். (1-267)

## விளையாட்டு விழா

இணுவில், மே 24

திருநெல்வேலி 'சிமாட் கிட்ஸ்' மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் எம்.ஜே.சாந்தசீலன் கலந்து கொள்கிறார். மழலைகளுக்கான பரிசில்களை திருமதி அஞ்சலி சாந்தசீலன் வழங்குவார். (1-7-45)


### ஆள் தேவை

பெண்களுக்கான ஆடை தைக்கத் தெரிந்தவர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

அஜோஸ் தையலகம்,
தொ.பே. 0779486465


## சாரதி அனுமதிப்பத்திர செயன்முறைப் பரீட்சை செவ்வாயன்று செயலகத்தில் இடம்பெறும்

யாழ்ப்பாணம், மே 24

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பித்து செயன்முறைப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை செயன்முறைப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ்.செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பழைய நடைமுறையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்து கடந்த ஆறுமாத காலத்துக்குள் வீதி ஒழுங்குகள் சம்பந்தமான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து இதுவரை செயன் முறைப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாதவர்களுக்குமான மீள் செயன்முறைப் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இறுதிச் சந்தர்ப்பமாக நடத்தப்படவுள்ளது.

ஆகவே நாளை திங்கட்கிழமையன்று அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் விண்ணப்பத்திலுள்ள குறைபாடுகளை சீர்செய்து இப்பரீட்சையில் தோற்றுவதற்கான இறுதி வாய்பினை பயன் படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளுகின்றேன் - என்றுள்ளது. (1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னமணி சபாபதி



(நிர்வாகஸ்தர், மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபை)

திருமதி சின்னமணி சபாபதி நேற்று (23.05.2009) சனிக்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் கணபதி - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் மு.சபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் க.இராசா, இ.அன்னம்மா, க.விசுவலிங்கம், சுப்பிரமணியம், காலஞ்சென்ற க.கந்தசாமி, காலஞ்சென்ற க.வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திச.பாலசிங்கம் (ஹொலண்ட்),கலைவாணி(லண்டன்), ச.பரமேஸ்வரன் (லண்டன்), தனலட்சுமி (இந்தியா), திருமதி த.லீலா, திருமதி செ.சரோஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், இ.தவராசா, செல்லக்கண்டு விமலதாஸ்(லண்டன்), இ.நாதன்(இந்தியா), தவமணி (ஹொலண்ட்), குமுதினி(லண்டன்) ஆகியோரின் மாமியாரும் கௌசிகன், பானுஷன், துவாரகா, சாலினி, ஜெனிஸ்ரன், யனிஸ்ரன், சுஜித், ஜெனித்தா, சுதர்சன், ஜெயப்பிரதா, விஜிதரன், மகிந்தன், ஜெகதீபன், ஜெகனி, திருக்குமரன், அஸ்வனா, லயதீபன், கிரிஜா, விமல்ராஜ், அனுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பகல் 12 மணியளவில் வழுக்கையாறு இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாட்டம் தோட்டம்,
வட்டு. தெற்கு,வட்டுக்கோட்டை

தகவல்:-
குடும்பத்தினர்

### கதிரேசன்பிள்ளை சுப்பிரமணியம் நடராஜன்



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், கொண்ட கதிரேசன்பிள்ளை சுப்பிரமணியம் நடராஜன் நேற்று 23.05.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகாமசுந்தரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மங்கையர்க்கரசி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூமணி மற்றும் கனகராஜா (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் குமணன் (ஆசிரியர்- மூளாய் அ.மி.த.க. பாடசாலை ), உதயணன் (கொழும்பு), Dr.ஜெனகன் (அமெரிக்கா), Dr.சுகன்யா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிகௌரி (மூளாய்- சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜெயந்தி (கொழும்பு), பாமதி (அமெரிக்கா), முரளிதரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌரிசங்கர், ஆதிசங்கர், அர்ஜின், ஹரிசன், நிருசன், அபிசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 27.05.2009 புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-48, இராஜசிங்காவீதி,
வெள்ளவத்தை,கொழும்பு,
0112360199

தகவல்
ந.குமணன்(மகன்)
பிள்ளையார் கோவிலடி,மூளாய்
T.P-0771346438

### திருமதி செல்லத்துரை மகேஸ்வரி

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமான திருமதி செல்லத்துரை மகேஸ்வரி பிரான்ஸில் 15.05.2009 அன்று காலமானார்.

அன்னார் பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் சரவணமுத்து செல்லத்துரையின் அன்பு மனைவியும் விவேகானந்தனின் (கண்ணன் -பிரான்ஸ்) பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சொக்கலிங்கம், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்,புகையிரத திணைக்களம்), துரைராசா (வவுனியா), காலஞ்சென்ற பூமணி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.05.2009) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

அன்றைய தினம் சுழிபுரம் கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்
உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதிகளைச் சரியாக அனுசரிப்பதோடு யதார்த்த நிலையையும் புரிந்து செயற்பட வேண்டும்

மனிதனின் அபிவிருத்திக்கும், வாழ்வின் இயக்கத்திற்கும், சமூக ஊடாட்டத்திற்கும் போக்குவரத்து என்பது இன்றியமையாத ஒன்றாகும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையிலும் போரின் நிர்ப்பந்தத்தால் போக்குவரத்து நடைமுறைகள் ஒரு சில வருடங்களாக உரிய முறையில் கடைப் பிடிக்கப்படவில்லை. இதனால் வீதிவிபத்துக்களும், முறையற்ற போக்குவரத்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களும் நாளுக்குநாள் அதிகரித்தன. எனினும்

இதனைப்பற்றி நன்கு தெரிந்தும் தமது சாரத்தியம் மீது கொண்ட அபரிமிதமான நம்பிக்கையால் தொடர்ந்தும் போக்குவரத்து விதிகளை இளைஞர்களும் ஏனையவர்களும் அசட்டை செய்தே வருகின்றனர்.

மோட்டார் சைக்கிள்கள் மட்டுமன்றி ஏனைய வாகனங்களைச் செலுத்துவோரும் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பது குறைவாகவே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக தனியார் பஸ் வண்டிகள் போக்குவரத்து விதிகளை

செலுத்துகின்றனர். பொருளாதார ரீதியில் இது இலாபத்தை ஈட்ட வைத்தாலும் வீதிவிபத்துகளுக்கும் இது காரணியாகி விடுகின்றது. பொது வாகவே வீதி வளைவுகளில் பிற வாகனங்களை முந்திச் செல்லக்கூடாது என்பது அடிப்படையான போக்குவரத்து விதி. ஆனால் இந்த விதியை போட்டிக்கு ஓடுகின்ற தனியார் பஸ் வண்டிகள் புறந்தள்ளுவதாலேயே பல வீதி விபத் துக்கள் நிகழ்ந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதைவிடத் தனியார் பஸ் வண்டி களின் உள்ளே உச்சஸ்தாயியில் தமிழ் சினிமாப் பாடல்களும் ஒலிக்க விடப்படுகின்றன. இதனால் பல பயணிகள் தாம் இறங்க வேண்டிய இடத்தை பலமுறை கூவியும் அது நடத்துனரின் காதில் விழுவதில்லை. எனவே தனியார் பஸ் வண்டிகள் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களைத் தாண்டி-பயணிகள் இறங்க வேண்டிய இடத்தைக் கடந்து-திடீரென 'பிறேக்' போட்டு, பஸ் வண்டிகளை நிறுத்துவதும் வீதி விபத்துகளுக்கு வழி கோலுகின்றது. சில நேரங்களில் பயணிகளே நடத்துனரிடம் பாடலை ஒலிக்க, விடுமாறு கேட்கின்ற நிகழ்வுகளும் அரங்கேறவே செய்கிறது.

குடாநாட்டில் ஓடித்திரிகின்ற பல்வேறு வகையான வாகனங்களும் உரிய தரத்தினைக் கொண்டிருப்பதில்லை. அதிகளவான புகையினை வெளித்தள்ளுதல், பொருத்தமான உதிரிப்பாகங்கள் அற்ற நிலையில் பஸ் வண்டிகளை இயக்குதல், வாகனத்தின் முகப்பு விளக்குகள், சமிக்ஞை விளக்குகள் உரிய வகையில் இயங்காதிருத்தல் என்பன போன்ற ஏகப்பட்ட குறைகளோடு தான் தனியார் பஸ் வண்டிகள் சேடமிழுத்தபடி போட்டி

பயணிகளின் எண்ணிக்கை காரணமாக பஸ் வண்டிகள் குடை சாய்வதும் உண்டு.

இத்தகைய போக்குவரத்து விதிகளை மறுதலிக்கும் செயற்பாடுகள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலே நிலைமையை சமாளிக்க முடியும் எனும் நிலை கடந்த சில வருடங்களாக உண்டாகியிருந்தது. இதனால் போக்கு வரத்து விதிகளை இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் இருந்து தீவிரமான முறையில் பொலிசார் நடைமுறைப்படுத்த ஆரம்பித்தனர். இதன்போது தலைக்கவசம் அணியாமை, உரிய ஆவணங்கள் இன்றி வாகனத்தைச் செலுத்துதல் போன்றவை கண்டு பிடிக்கப்பட்டு அவ்விடத்திலேயே குற்றப்பணமும் விதிக்கப்படும் சம்பவங்கள் நிகழ்ந்தன. இதன்மூலம் குடா நாட்டில் விபத்துகள் நிகழ்கின்ற விகிதம் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றது.

எனினும் தனியே ஆவணங்களைப் பரிசோதித்தலும், தலைக்கவசம் அணி யாதவை கண்டித்தலும் மட்டுமே பொலிசாரினால் அதிகமாக மேற்கொள்ளப்படுகின்றன. அதிக பயணிகளை ஏற்றிச் செல்லுதல், அதிவேகமாகச் செல்லுதல், போக்குவரத்துக்கு தரமற்ற வாகனங்களை இயக்குதல் போன்ற பல போக்குவரத்து விதிமுறைகளை மீறும் செயல்களை பொலிசார் கவனிப்பது குறைவாகவே உள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை பொலிசார் தீவிரமாகக் கண்காணிப்பதன் மூலம் வீதிவிபத்துக்களை தடுக்க முடியும் என்பதோடு சீரான முறையில் அனைவரும் பயணத்தை மேற்கொள்ளவும் இலகு வானதாக அமையும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனினும் அவசியமாக



இந்நிலையை தொடரவிடாது வீதிப்போக்குவரத்து நடைமுறைகளை இறுக்கமான முறையில் கண்காணிக்கும் பணியில் போக்குவரத்துப் பொலிசார் அண்மைக்காலமாக ஈடுபடத் தொடங் கியுள்ளனர்.

ஏறி மிதித்துக்கொண்டே தம் பயணத்தை நிகழ்த்தி வருகின்றன. இலங்கை வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகளை மட்டும் வைத்துக் கொண்டு

# விபத்துக்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைவதற்கு வாகனச் சாரதிகளிடமும் மக்களிடமும் விழிப்புணர்வு தேவை

யாழ். குடாநாட்டில் இளைஞர்களின் 'உத்தியோகபூர்வ' வாகனமாக மோட்டார் சைக்கிள் மாறியுள்ளது. முன்னர் எல்லாம் தொழில் புரியும் இடத்திற்கும் அத்தியவசியமான தேவைகளுக்கும் சென்றுவரவே மோட்டார் சைக்கிள்கள் பயன்பட்டன. எனினும் இன்று அது ஒரு ஆடம்பரப்பொருளாக மட்டுமன்றி இளைஞர்களின் குணாதிசயத்தை அடையாளப்படுத்தும் ஒன்றாகவும் மாறிவிட்டது. தனியே போக்குவரத்துக்கு மட்டுமே தமது மோட்டார் சைக்கிள்களை இளைஞர்கள் பயன்படுத்தும் காலம் மாறிவிட்டது. பன்முகப்பட்ட பாவனைகளை தமது வாகனங்கள் மூலம் அடைய இன்றைய இளைஞர்கள் எத்தனிக்கின்றனர்.

தமது வீரத்தை அல்லது திறமையை தமது நண்பர்களுக்கு வெளிப் படுத்துவதாக நினைத்துக் கொண்டு பல்வேறு சாகசங்களை குண்டுங் குழியுமாக உள்ள யாழ்ப்பாணத்து வீதிகளில் நிகழ்த்த நினைக்கின்றனர். மின்னல் வேகத்தில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துதல், குறுகலான சந்துகளில் திடீரென வெட்டித்திருப்புதல், பிறமோட்டார் சைக்கிள்களோடு ஏட்டிக்குப் போட்டியாக சவாரி செய்தல், ஒன்றுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் வீதியை நிறைத்தவாறு சமாந்தரமாகப் பவனி வருதல், கைத் தொலைபேசியில் கதைத்தபடியே மோட்டார் சைக்கிளைச் செலுத்துதல் என இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை வைத்துக் கொண்டு செய்கின்ற சாகசங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். அப்பப்பா! என்னென்று எழுதுவது, வர்ணிப்பது...!

இவையெல்லாம் கணநேர மகிழ்வினை குறித்த இளைஞர்களுக்கு ஊட்டலாம். ஆயினும் அதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை. இத்தகைய அஜாக்கிரதையான செயற்பாடுகளே வீதிவிபத்துகளுக்கு வித்திடுகின்றன.

யாழ். குடாநாட்டின் போக்குவரத்துத் தேவையை நிறை வேற்றுவது என்பது முயற்கொம்பான காரியம். எனவே மக்களின் அவசர தேவைகளுக்கு உதவும் உற்ற நண்பனாக விளங்குவது தனியார் வாகன சேவை தான். எனினும் குடாநாட்டில் ஓடித்திரிகின்ற தனியார் பஸ் வண்டிகள் எல்லாமே பொதுமக்களின் போக்குவரத்துக்காகவே பயணிக்கின்றன என்பதை மறந்து

போட்டுக் கொண்டு ஓடுகின்றன. இவையும் வீதிவிபத் துகளுக்கும், போக்குவரத்து நெருக்கடி களுக்கும் காரணிகளாக மாறிவிடுகின்றன.

அத்தோடு தனியார் பஸ் வண்டிகளின் கொள்ளளவையும் மீறிய வகையில் அதிகளவான பயணிகள் ஏற்றப்படுவது வழமையானதொன்றாக மாறிவிட்டது. பஸ் வண்டியின் மிதிபலகையிலேயே பத்துக்கு மேற்பட்ட பயணிகள் தொற்றிக்



ஏதோ பந்தயத்தில் பங்கேற்பதுபோல பறக்கவே செய்கின்றன. வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளை முந்திச் சென்று பஸ்தரிப்பு நிலையங்களில் காத்திருக்கும் பயணி களை தமது பஸ்களில் ஏற்றவே இவ்வாறு புயல்வேகத்தில் தனியார் பஸ் வண்டிகளை அதன் சாரதிகள்

கொண்டு செல்வது சர்வசாதாரணமான காட்சிதான். இவ்வாறு அதிகளவான பயணிகளை அடைந்து கொண்டு செல்கின்ற தனியார் பஸ்வண்டிகள் எதிர்பாராத விதமாக விபத்தொன்றில் சிக்கும்போது ஏற்படும் இழப்புகளும் வழமையைவிட அதிகரித்ததாக மாறி விடுகிறது. மேலும் அதிகளவான

கவனிக்க வேண்டிய சில விடயங்களை பொலிசார் அலட்சியப்படுத்திவிட்டு, தலைக்கவசம் அணியாதவர்களையும் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்க ளையும் பரிசோதித்து குற்றப்பணம் அற விடுவதை மட்டுமே செய்வது சரியாகத் தோன்றவில்லை.

அதேவேளை கடைகளில் போதியளவு தலைக்கவசம் இல்லாமை, வாகனங் களுக்குரிய உதிரிப்பாகங்கள் கிடைக்காமை, உரிய ஆவணங்களைப் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் போன்றவை காரணமாக பொலிசாரிடம் சிக்கி குற்றப் பணத்தைச்செலுத்த வேண்டியிருப்பதாக பொதுமக்கள் சிலர் ஆதங்கப்டுவதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. போக்குவரத்து விதிகளை இறுக்கமாக நடை முறைப்படுத்தும்போது யதார்த்த நிலை யையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும், பொதுமக்களுக்கு

**ஒவண்யன்**

பொதுவான முறையில் போக்குவரத்து நெருக்கடிகளை உண்டு பண்ணும் விடயங்கள் மீதும் பொலிஸார் தமது கவனத்தைத் திருப்ப வேண்டும் எனவும் இவர்கள் கருதுகின்றனர்.

மொத்தத்தில் விபத்துக்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அதுகுறித்த விழிப்புணர்பு சார்திகளிடமும் மக்களிடமும் தேவை. வாகனங்கள் மக்களுக்கு உதவும் சேவகர்கள் - நண்பர்கள் என்ற நிலையில் இருந்து அவர்களுக்குத் தீங்கு செய்வனவாக மாறாதிருப்பதை மக்களே உருவாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை மாறிப் பறக்கிறது தி.மு.கவின் தமிழ் இன உணர்வு!

நேற்றைய 'தினமணி' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் இங்கு பிரசுரமாகிறது.

மத்தியில் புதிய அமைச்சரவை அமையும் போதெல்லாம் இந்தியா முழுவதும் தமிழகத்தைக் கூர்ந்து பார்க்க நேர்வது வழக்கமாகி விட்டது.

2004ஆம் ஆண்டு, காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க. கேட்ட அமைச்சர் பதவிகள் ஒதுக்கப்படவில்லை என்பதில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு, முன்னதாகவே காங்கிரஸ் அளித்த உறுதி மொழிப் பத்திரத்தைக் காட்டி எல்லோரையும் பிரமிக்க வைத்தார் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி.

இப்போதும் அதேபோன்று அமைச்சர் பதவி கேட்பதில் கருத்து வேறுபாடு கொண்டு, அதை ஒரு நாள் முழுவதும் ஊடகங்கள் பெரிதாகப் பேசிமுடித்த பிறகு, டில்லியை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டார் தமிழக முதல்வர்.

பல்வேறு கட்சிகளும் நிபந்தனையற்ற ஆதரவை தாமாகவே அளித்துள்ள நிலையில், ஆட்சி நடத்தத் தேவையான எண்ணிக்கைப் பலம் காங்கிரஸிடம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி கொடுப்பதை ஏற்றுக்கொள்வது அல்லது வெளியிலிருந்து ஆதரிப்பது என்பதைத் தவிர தி.மு.கவுக்கு வேறு வழி கிடையாது. காங்கிரசுடன் உறவை முறித்துக்கொண்டால் மத்திய அரசுக்கு எந்த இழப்பும் இல்லை. மாறாக, தமிழகத்தில் பெரும்பான்மை இல்லாத தி.மு.க. அரசுக்குத்தான் இழப்பு.

எண்ணிக்கை பலத்தால் மட்டுமே தற்போது தி.மு.கவின் கோரிக்கையை காங்கிரஸ் மறுக்கிறது எனச் சொல்வதற்கில்லை. சென்ற ஆட்சிக் காலத்தில் கூட்டணிக் கட்சிகளால் காங்கிரஸ் கட்சி சந்திக்க நேர்ந்த தர்மசங்கடங்கள் ஏராளம். அதில் முக்கியமான இரண்டு நிகழ்வுகள் தி.மு.க. அமைச்சர்களால் நேர்ந்தவை.

முதலாவதாக, சேது சமுத்திரத் திட்டத்தில் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சரான டி.ஆர். பாலு காட்டிய அவசரம். இதனால் தமிழக அரசே ஒரு நாள் வேலை நிறுத்தம் அறிவித்து, அதை அடையாள உண்ணாவிரதமாக மாற்றியது. சேது சமுத்திரத்திட்டச் செலவும், அதன்பிறகு கிடைக்கும் குறைந்த வருவாயும், கால்வாயைத் தொடர்ந்து தூர்வாரும் பணிக்கான தொடர் செலவினமும், பவளப்பாறை அழிவு மற்றும் ராமர் பாலம் சிதைவு என எல்லா பிரச்சினைகளும் சேர்ந்து கொண்டதால்தான் இத்திட்டத்தை பிரதமர் மன் மோகன்சிங் கொஞ்சம் தாமதப்படுத்த நேர்ந்தது. ஆனால் மத்திய அரசைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியது தி.மு.க. அடுத் தது ரூ. 60,000 கோடி 'ஸ்பெக்ட்ரம்' முறைகேட்டில் அமைச்சர் ராசா மீதான புகார். ஆகவே, கூட்டணிக் கட்சிகளுக்கு எத்தகைய அமைச்சர் பதவி அளிக்க வேண்டும் என்பதில் காங்கிரஸ் அதிக கறாராக இருப்பதைக் குறையாகச் சொல்ல முடியாது.

கடந்தகாலங்களில் காங்கிரஸ் கட்சி யின் நடவடிக்கைகளை வைத்துப் பார்க்கும்போது, தி.மு.க. கேட்பதைக் கொடுத்து சமாதானம் செய்துகொள்ளும் முடிவைத் தான் பிரதமர் மன்மோகன் சிங்கும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் மேற் கொண்டுள்ளனர். ஆட்சியை அமைக்கும் போது நிலையற்ற தன்மையை விரும்ப மாட்டார்கள். உத்தரப் பிரதேசம் போல தமிழ் நாட்டிலும் காங்கிரஸ் சுயபலத்துடன் வளர்க்கத் தமிழக காங்கிரஸார் விரும்பினாலும் அவர்கள் தன்மானத்துடன் செயல்படுவதைக் காங்கிரஸ் தலைமை விரும்பாது.

தற்போது தி.மு.க. எத்தனை அமைச் சர் பதவிகளைக் கேட்டது, எத்தனை பெற் றது, அல்லது பெற்றுக்கொள்ள மறுத்தது என்பது முக்கியமே அல்ல. அதற்கான நேரம் இதுவா? என்பதுதான் முக்கியமான கேள்வி.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மறைந்ததாக கூறப்பட்டதன் பின், ஈழத் தமிழர்கள் 2.8 லட்சம் பேர் கதியற்று, காப்பார் இன்றி, கவலையிலும் பீதியிலும் பட்டினியாலும் நொந்து கிடக்கும்போது, அவர்களது வாழ்வு மற்றும் பாதுகாப்புக் குத் தமிழர் குழுக்களை அனுப்ப வேண்டிய அவசியம் இருக்கும்போது, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளை அனுப்ப தமிழர்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்களா; நிவாரணம் முழுவதுமாக கிடைக்கிறதா என்று கண்காணிப்புக் குழுக்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டிய தமிழக முதல்வர், டில்லியில் அமைச்சர் பதவிக்காக பேரம் பேசிக் கொண்டிருந்தால்.... இது தகுமோ, இது முறையோ, இது தருமம் தானோ!

உலக நாடுகளும், ஐ.நா. சபையும் தமிழருக்கு உதவிட ராணுவத்தின் கட்டுப்பாடு பெரும் தடையாக இருக்கிறது என்றும், கட்டுப்பாடுகளை நீக்கினால்தான் மறுவாழ்வுப் பணிகளைத் தொடங்க முடியும், உதவிகள் வழங்க முடியும் என்றும் வலியுறுத்திக் கொண்டிருக்கையில், தமிழக அரசின் செயல்பாடு என்ன?

ரோம் நகரம் பற்றி எரிந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந் தான் என்று ஒரு சொல்லடை உண்டு. தென்னிலங்கையில் தமிழினம் அழிந்து கொண்டிருக்க, டில்லியில் பதவி பேரம் பேசினார் ஒரு தமிழினத் தலைவர் என்ற பேச்சு வரலாற்றில் இடம்பெறுவது சரியா?

இன்னின்ன அமைச்சர் பதவி வேண்டும் என்று குறிப்பிட்டுக் கேட்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, சூழ்நிலை அவசி யம் கருதி, ஈழத் தமிழர் நலன் மற்றும் நிவாரணப் பணிகளைக் கண்காணிக்க வும் அங்கே அரசியல் தீர்வும் அதிகாரப் பகிர்வும் நியாயமாகவும் முறையாகவும் நடைபெறவும் ஓர் அமைச்சர் பதவியை தி.மு.கவுக்கு ஒதுக்கக் கோரியிருந்தாலும் கூட, அதற்காக அவரைப் பாராட்டலாம். ஆனால் நிலைமை அதுவாக இல்லை.

தி.மு.க. தலைவர் மீது மிகுந்த மரி யாதை வைத்திருப்பதாகவும், இப்பிரச்சி னைக்குத் தீர்வுகாண அவர் வந்தால் மகிழ்ச் சியுடன் வரவேற்பேன் என்றும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ முன்பு சொன்னதனால், இப்போது தமிழக முதல்வர் கருணாநிதி பயணப்பட்டிருக்க வேண்டிய இடம் கொழும்புதானே தவிர, டில்லி அல்ல.

திசை மாறிப் பறக்கிறது தி.மு.கவின் தமிழ் இன உணர்வு! ************





ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் அண்மையில் மரம் நடுகை விழாவை நடத்தியது. இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பியின் தீவகப் பிரதேசப் பொறுப்பாளர் எஸ்.ஜெயக்காந்தன் மங்கள விளக்கேற்றுவதையும் தீவகம் வடக்குப் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் அருகில் நிற்பதையும் முதலாவது படத்திலும் சங்கத் தலைவர் தி.சுந்தரலிங்கம் பயனாளி ஒருவருக்கு மரக்கன்று வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.


## ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

எமது பாடசாலைச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களது இன்ப துன்பங்களிலும், தனிப்பட்ட முறையிலும், அமைப்பு ரீதியிலும் பங்களிப்புச் செய்யும் ஆசிரியர்
திரு.ஐ.குமாரதாசன் அவர்களின் தாய்
**அமரர் ஐயாத்துரை மகாலெட்சுமி**
அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (24.05.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதையொட்டி அன்னாரது ஆத்மசாந்திக்காக நாம் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம். (85539) யா/ஆனைப்பந்தி மெ.மி.வி.


## மரண அறிவித்தல்கள்



### திருமதி அரியகுட்டி பூரணம்

சுழிபுரம் தெற்கைச் சேர்ந்த அரியகுட்டி பூரணம் (22.05.2009) வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.05.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு திருகோணமலை அன்புவழிபுரம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.ஜெஜீவன் (மகன்), நா.குணம் (மைத்துனர்).
சுழிபுரம். (85535)

### செல்வி நடராசா காந்தகௌரி

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த நடராசா காந்தகௌரி நேற்றுமுன்தினம் (22.05.2009) வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

அன்னார் நடராசா - இரதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காந்தரூபன், காந்தகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.05.2009) அன்று பிற்பகல் சுழிபுரம் இந்து மயானத்தில் நடை பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிரவேலு நடராசா (தந்தை)
(ஓய்வுபெற்ற கணித பாட ஆசிரிய ஆலோசகர்)
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். (85543)


## தவறிவிட்டது

யாழ்.நவீன சந்தைக்கும், பஸ்தரிப்பிடத்திற்கும் இடையில் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 071 2827373 (85541)

## காணவில்லை

நுணாவில் மேற்குப் பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்பட்ட கறுப்பு நிற 'ஆ' என்னும் குறியிடப்பட்ட பசுமாட்டை 20.05.2009 முதல் காணவில்லை. இதைக் கண்டவர்கள் ராசாகடை, நுணாவில் மேற்கு என்னும் முகவரியுடன் அல்லது 077 6435532 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.


## இலவச வெளியீடு

சுழிபுரம், மே 24

சுழிபுரம் பஜனைச் சபையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய பாடல்கள் மறு பிரசுரம் செய்து இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலினைத் தபாலில் பெற விரும்புவோர் செயலாளர், பஜனைச் சபை, சுழிபுரம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-28)

## காளை தாக்கி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் மே 24

காளை மாடு தாக்கி தூக்கி வீசியதால் குடும்பஸ்தர் காயமடைந்தார்.

இச்சம்பவம் மந்துவிலில் இடம்பெற்றது.

மாட்டுக்குத் தண்ணீர் வைத்துவிட்டு வேறுஇடத்தில்மேய்ச்சலுக்கு விடுவதற்காக மரத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றினை அவிழ்த்த போது கொம்பினால் தாக்கி தூக்கி வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தலையில் காயமடைந்த இந்நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203 - 207)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 09 ★ 05 ★ 1947
விண்ணில் 26 ★ 05 ★ 2006



**கோவிந்தபிள்ளை பராராஜசிங்கம்**
(பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)

திதி: அமாவாசை

மூன்றாண்டுகள் முடிவடைந்தாலும் - எம்
மூச்சுள்ளவரை நீங்கள் இருப்பீர்கள் அப்பா!
மூன்று தலைமுறையானாலும் உங்களைப் போல் பாசமாக
மூவுலகில் யாரிருப்பார் அப்பாவே!

நாகர் கோயில் தெற்கு,
நாகர்கோயில். (சி/85338) குடும்பத்தினர்.

## கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்

A/L மாணவர்கள், HNDA, CIMA, AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கற்கைநெறி உலகின் முன்னணி கணக்கியல் மென்பொருள் கரூடாக.

Tally ies 9.0 The qualification for success
Duration 2 months
QUICKBOOKS

**Certified Computer Accountant**

Course Contents
Principles of Accounting, Vouchers, Ledgers, Inventory, Billing, Budgets, Cost Centres, Salary Sheet (Pay Roll), VAT, Bank Reconciliation, Stock, Trial Balance, Balance Sheet, P & L Account, Cash Flow, Fund Flow, Consolidation of Accounts, Loan Manager, Graphical Analysis & Reports.

Tally Software - Accredited by The Institute of Chartered Accountants

யாழ் மாவட்டத்திலே Tally நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், பாட நூல், மற்றும் மென்பொருள் எமது நிலையத்தால் மட்டுமே வழங்கப்படுகின்றது.

Registered with Ministry of Tertiary & Vocational Education Commission

ASIAN- CSC COMPUTER EDUCATION



அன்று கல்விக்கு ஏற்ற வேலை.
இன்று வேலைக்கு ஏற்ற கல்வி...

யாழ்ப்பாணம்
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel :021 222 5677

கிளை :
நெல்லியடி
கொடிகாமம் வீதி, நெல்லியடி
Tel :077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுத பீதி!



பாகிஸ்தான் துரிதமாகத் தனது அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றது என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இரகசியமாக தெரிவிக்கப்பட்ட தகவல்கள், இராணுவ உதவியாக அமெரிக்கா வழங்கிய பல மில்லியன் டொலர் நிதியை பாகிஸ்தான் தனது அணு ஆயுதத்திட்டத்துக்கு பயன்படுத்தியுள்ளதா என சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.


அமெரிக்க செனட்டுக்கு சாட்சியம் அளித்த முக்கிய



அதிகாரி ஒருவர் வாஷிங்டன் கொண்டுள்ள அச்சத்தை உறுதிப்படுத்தியுள்ளார். பாகிஸ்தான் தனது அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சான்றுகள் உள்ளனவா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு ஆம் என அவர் பதிலளித்துள்ளார்.

ஒபாமா நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள் பலர் புதிய அணு ஆயுதங்களுக்காக இஸ்லாமாபாத் பெருமளவு நிதியைச் செலவிடுவது குறித்து தாங்கள் கவலை அடைந்துள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பாகிஸ்தானில் 100 இற்கும் குறைவான அணு ஆயுதங்களே உள்ளதை உறுதி செய்வதற்கு தாம் முயற்சி செய்து வரும் தருணத்தில்



இந்த தகவல்கள் வெளியாவது குறித்து அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அணு ஆயுதங்கள் இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுக்களின் கைகளில் விழுவதைத் தடுப்பதற்காக நாங்கள் பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்களை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எண்ணிக்கை தெரியாத அளவு யுரேனியத்தை பாகிஸ்தான் உற்பத்தி செய்வது ஒபாமா நிர்வாகத்துக்கு மேலும் நெருக்கடிகளை கொடுத்துள்ளது. இது மேலும் பல அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு உதவியாக அமைத்து விடும் என வாஷிங்டன் அஞ்சுகின்றது.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமானதாக விளங்கும் பொருட்களை உற்பத்தி செய்வதை அனைத்து நாடுகளும் தடைசெய்யும் உடன்படிக்கை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஒபாமா அரசு ஈடுபட்டுள்ளது. எனினும், பாகிஸ்தானின் செயற்பாடுகள் பற்றி பகிரங்கமாக எதனையும் தெரிவிக்கவில்லை.

ஆப்கான், பாகிஸ்தான் குறித்த அமெரிக்காவின் புதிய தந்திரோபாயத்தை வடிவமைத்த ஆய்வாளர் ஒருவர் ஒபாமா நிர்வாகம் இது குறித்து கவலை கொண்டுள்ளது எனத் தெரிவிக்கிறார். பாகிஸ்தானிலேயே ஒரு சதுர கிலோமீற்றருக்கு அதிக அளவு பயங்கரவாதிகள் காணப்படுகின்றனர். உலகில் எந்தப் பகுதியையும் விட இங்கேயே பயங்கரவாதிகள் அதிகம். அதேவேளை பாகிஸ்தானில் தான் அணு ஆயுதங்கள் மிக வேகமாக உற்பத்தியாகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை நிதி உதவி சரியான நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறு அமெரிக்கா காங்கிரஸிடம் கேட்டுள்ளதாக ஒபாமா நிர்வாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், சமீபத்தில் செனட்டுக்கு அட்மிரல் மூலன் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்துக்கள், நிதி உதவியை பாகிஸ்தான் தவறாகப் பயன்படுத்துகின்றது என்ற சந்தேகத்தை உறுதி செய்கின்றன. இதன் காரணமாக பாகிஸ்தானுக்கான நிதி உதவி தாமதமடையலாம் அல்லது குறைக்க ப்படலாம்.


சமீபத்தில் அமெரிக்க காங்கிரஸ் பாகிஸ்தானுக்கு மூன்று மில்லியன் டொலர்களை வழங்குவது குறித்து ஆராய்ந்தது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பாகிஸ்தானுக்கு பயிற்சி அளிப்பது மற்றும் சாதனங்களை வழங்குவதற்காக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

அமெரிக்கா இதுவரை பாகிஸ்தானில் அணு ஆயுதத் திட்டங்களுக்காக எந்த உதவியையும் வழங்கியது கிடையாது.

இஸ்லாமாபாத்தின் அணு ஆயுதங்களை இஸ்லாமிய தீவிரவாதிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக மாத்திரமே நூறு மில்லியன் டொலர்களை அமெரிக்கா செலவிட்டு இருந்தது. இது மிகவும் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

எனினும், தற்போது தாங்கள் வழங்க உள்ள நிதி பாகிஸ்தானின் அணு ஆயுத உட்கட்டமைப்புக்கு துணை போகலாம் என அமெரிக்க அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தனது அணு ஆயுதத் திட்டம் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது என பாகிஸ்தான் வெளிப்படையாக தெரிவிப்பதை சுட்டிக் காட்டும் அதிகாரிகள் அமெரிக்காவின் புதிய நிதி உதவியை பாகிஸ்தான் இதற்கு பயன்படுத்தலாம் என்கின்றனர்.



பாகிஸ்தான் கள்ளச் சந்தையில் அணு ஆயுதப் பொருட்களை கொள்வனவு செய்ய முயன்றதையும் பாகிஸ்தான் இராணுவம் தலிபானுடன் தற்போது மோதலில் ஈடுபட்டுள்ள பகுதியில் இருந்து 100 மைல் தொலைவில் புதிய இரு அணு உலைகளை உருவாகியுள்ளதையும் உறுதிப்படுத்தும் சர்வதேச பாதுகாப்பு அமைப்பு, அணு ஆயுதத் திட்டங்களை பாகிஸ்தான் தீவிரப்படுத்தியதை புஷ் நிர்வாகம் அலட்சியம் செய்தது என தெரிவிக்கிறது. எனினும், கடும் அழுத்தங்கள் காரணமாக இதனை தடுத்து நிறுத்தலாம் எனவும் அந்த அமைப்பு குறிப்பிடுகிறது.

பாகிஸ்தானில் இந்த நடவடிக்கைகள் ஒபாமா நிருவாகத்துக்கு புதிய தலையிடியை உருவாக்கியுள்ளது.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமான பொருள்களை தடை செய்யுவதற்கு ஒபாமா நிர்வாகம் தீவிரமாக முயல்கின்றது. எனினும், பாகிஸ்தான் இதற்கு இதுவரை உடன்படவில்லை. அமெரிக்காவின் நேச நாடுகளான இஸ்ரேலும் இந்தியாவும் இதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இதனால், ஒபாமாவின் முயற்சி எவ்வளவு தூரம் வெற்றி அளிக்கும் என்ற கேள்வி உள்ளது. மற்றையது பாகிஸ்தான், ஆப்கான் அரசுகளை ஸ்திரப்படுத்துவதற்காக ஒபாமா நிருவாகம் கடன் உதவியை வழங்க திட்டமிட்டுள்ளது. எனினும் வேறு நோக்கங்களுக்கு பயன்படலாம்.

நிதி உதவியை மரபு வழி சாராத இராணுவ திட்டங்களுக்கு பயன்படுத்தப் போவதில்லை என்ற உறுதி மொழியை பாகிஸ்தான் வழங்க வேண்டும் என ஒபாமா நிர்வாகம் அழுத்தங்கள் கொடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை விடுக்கத் தொடக்கியுள்ளனர்.

**-ரஜீவன்-**

அமெரிக்காவின் நிதி உதவி சரியான நோக்கங்களுக்கு பயன்படும் என்பதை உறுதி செய்யும் கட்டுப்பாடுகள் ஏதாவது உள்ளதா என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அமெரிக்கா வழங்குகின்ற நிதி பயங்கரவாதத்திற்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றது என்பதை சொல்லிலும் செயலிலும் பாகிஸ்தான் நிரூபிக்க வேண்டும். தமது எதிர்காலத்துக்காகவும் அவர்கள் இதனை செய்ய வேண்டும். இல்லாவிடின் அமெரிக்காவின் எந்த உதவியும் பயனற்றுப் போய்விடும் என காங்கிரஸ் உறுப்பினர்கள் கடுமையாக எச்சரிக்கின்றனர்.

அமெரிக்க மத்திய புலனாய்வு பணியகம் (சிஐஏ) பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் எங்கு இருக்கின்றன என்பது தெரியாது எனினும் அவை பாதுகாப்பாக இருக்கின்றன என குறிப்பிடுகின்றது. ரஷ்யாவில் உள்ள அணு ஆயுதங்களை விட அவை பாதுக்காப்பாக உள்ளன என்றும் சிஐஏ தெரிவிக்கின்றது.

பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் எங்கு இருக்கின்றன என்பதை கண்டு பிடிக்க நாங்கள் முயலவில்லை புல னாய்வுத் தகவல்களும்இல்லை. எனினும் அவை பாதுகாப்பாக இருக்கின்றன என கருதுகின்றோம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை பாகிஸ்தானில் அணு ஆயுதங்களை கைப்பற்ற தலிபான் முயன்றால் அமெரிக்கா தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என பென்டகன் எச்சரித்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களின் நல்லாயன்


## அருட்தந்தை மரியாம்பிள்ளை ததேயுஸ் சறத்ஜீவன்

## உள்ளத்தால் பேசுகிறேன்

சறா!
உன்னுடைய நட்புக்கு நன்றி.
நீ பார்ப்பதற்குப் பெரிய மனிதன்.
பழகுவதற்கு இனிமையானவன்.
உன்னோடு 1980 இன் ஆரம்பங்களிலிருந்து பழகினேன்.
புனித மரியாள் பேராலயத்தில் பீடப்பணியாளனாக அறிமுகமானாய்.
உன்னிடமிருந்த பொறுப்புணர்வையும் ஈடுபாட்டையும் கண்டு வியந்தேன்.
இளைஞர் உருவாக்கல் இயக்கத்திலும் உன்னைக் கண்டேன்.
உன்னை நீ தேடுவதை நான் உணர்ந்தேன்.
உனது ஆற்றல்களையும் திறமைகளையும்
நீ இனம் கண்டுவிட்டாய் என்பதையும் நான் அறிந்தேன்.
புனித மடுத்தீனாரின் சிறிய குருமடத்திலும் உன்னைச் சந்தித்தேன்.
உனது வாழ்க்கை வளர்ச்சிப் பாதையில் செல்கிறது
என்பதை நான் அவதானிக்கத் தவறவில்லை.
கல்வியில் நீ காட்டிய ஆர்வம்
உனது வாழ்க்கை வெற்றிப்படிகளில் என்பதை அன்றே உணர்த்தியது.
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியில்
உன்னைக் கண்டு மகிழ்ந்தேன்.
உன்னோடு அருகிருந்து பயணித்தேன்.
உன்னுடைய வயதும், வளர்ந்து
வந்த பாதையின் அனுபவமும்
உன்னுடைய முதிர்ச்சியுடன் ஒத்து
நின்றன.
உன்னுடைய சிந்தனைகள்,
உன்னுடைய ஆக்கங்கள்,
உன்னுடைய ஈடுபாடுகள்,
உன்னுடைய தீர்மானங்கள்,
உன்னுடைய உறவுத் தொடர்புகள்
அனைத்துமே வளரும் காலத்து
நம்பிக்கைகளாக வெளிப்பட்டன.
நீ குருவானாய். எமது இணைந்த
பயணம் தொடர்ந்தது. பணி
எதுவாக இருந்தாலும் நல்ல
மனத்துடன் ஏற்றாய். வன்னி உன்
பணியின் உச்சம். உனது
ஆளுமை முழுமையாக
வெளிப்பட்டது. இறைத்தந்தையில்
உனது நம்பிக்கை மக்களை
உனது பணியில்
முன்னுரிமைப்படுத்த உதவியது.
ஆழிப்பேரலை எழுந்த போதிலும்
சரி வன்னிப்போரிலும் சரி உனது
ஆன்ம பலத்தை எண்ணி
வியந்தேன். இறுதி மூச்சு இருந்த
வரை உறுதி தழும்பாது
உயர்ந்துவிட்டாய்.
"விழுமியங்களின் மனிதன்" நீ.
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
உன்னைக் கேட்டுத்தான்.
இறை உறவு உனக்கு எப்போதும்
முன்னுரிமையானது.
உண்மையை விரும்பி வாழ்ந்தாய்.
நீதியின் வழி அனைத்தும்
அமைய வேண்டுமென
விரும்பினாய்.
குழும உறவை மதித்தாய்.
குழுமமாகவே செயற்பட
விரும்பினாய்.
நல்லது எதையும் முன்னின்று
வழிநடத்த நீ தயங்கியதில்லை.
ஏழைகளின் நண்பன். கரிசனை
உனக்கு கைவந்த கலை.
உனக்கு பகைவர் என்று யாரும்
இல்லை.
வாழ்க்கையிலும் சரி பணிகளிலும்
சரி எதனை முன்னுரிமைப்படுத்த
வேண்டும் என்பதில் தெளிவு
உன்னிடம் உறுதியாக இருந்தது.
உன்னுடைய வாழ்க்கையிலே
வெற்றிக்கு வித்திட்டவர் யார்?
உன்னுடைய குடும்பம்தான் என்று
உறுதியாக சொன்னால் அதில்
தவறிருக்காது.

அமரத்துவமடைந்த உன்னுடைய
அப்பா,
அன்புள்ளம் கொண்ட அம்மா,
பாசம் நிறைந்த உன்னுடைய
சகோதரர்கள், சகோதரிகள்,
நீ மனிதனாக வளர்வதற்கும்,
இறை பணியாளனாக
மலர்வதற்கும்
கற்றுத்தந்தவர்கள், களம்
அமைத்துத் தந்தவர்கள்.
உன் முன்னிலையிலும்
உன் குடும்ப உறவுகள்
முன்னிலையிலும்
நன்றியோடு பணிகின்றோம்.
சறா!
இன்று நீ என்னோடு இல்லை,
கவலகிறேன்.
இன்று நீ எம்மோடு இல்லை,
பரிதவிக்கிறோம்.
உன்னை
இன்று நீ இல்லை
என்று நினைப்பதைவிட
உன்னிடம் இருந்ததை
உன்னிடம் இருந்து
நீ கொடுத்ததை
உன்னையே நீ கொடுத்ததை
நினைக்கும் போது...
இந்த நினைவே
பிரிவால் துயருறும்
ஒவ்வொருவரையும்
ஆற்றுப்படுத்தும் என்பது
எனது நம்பிக்கை.

ஜெறிஹரன்



மலர்வு : 13.05.1968
இறைபணியில் : 14.05.2003
உதிர்வு : 18.05.2009

## இதயக் கண்ணீருடன்

இறை பணியில்
இறுதிவரை – தனை
கரைத்து - இன்று
இறுதி மூச்சையும்
பணியில் உரமாக்கிய
அருட்பணி
சறத் ஜீவன் அடிகளாருக்காக
இதயம் நிறைந்து அஞ்சலித்துப்
பிரார்த்திக்கின்றோம்

*கனத்த நெஞ்சங்களுடன்*
*மடுத்தீனார் குழுமம*

## ஓராயிரம் வடுக்கள் சுமந்தவரே!

கொதிக்கும்
எரிமலைக்குழம்பின்
நடுவே
கொழுந்து விட்டெரிந்த
வேள்வித் தீயே!

உடல் வலுவென்ற
மனப்பலத்தால்
உலகையே வென்று
உயர்ந்தவரே!

ஆத்மீக தாகத்தால்
துடித்த மந்தைக்கு
ஆருயிரைத் தண்ணீராக்கி
ஊற்றியோனே !

கொதிக்கும் வெம்பாலையிலே
ஆடுகளுக்காய்
சோரைப்புல் தேடிய
மேய்ப்பனே !

ஓயாது நடந்த
அண்மைப் போரில்
ஓராயிரம் வடுக்கள் சுமந்தவரே!
இறுதி மூச்சையும் பணியில்
உரமாக்கி
அர்ப்பண வாழ்வின்
அர்த்தம் கொடுத்தவரே !

இரத்தம் பாய்ந்த
மந்தையின் இதயவொலி
கேட்டதாலோ
இதயம் இயங்கிட மறுத்தது?
பிரசவ வலி தாங்கிய
பிதாமகனே
பிறை நிலவே
சரத் ஜீவன் அடிகளாரே!

ஆயனாய் வாழ்ந்தீர்
அப்படியே இறந்தீர்
ஆண்டவரில் அமைதியாவீர்
நல்லாயன் பரிசோடு!

*சிந்து*

## புறமுதுகு காட்டாத புதல்வன்

இறைநெறியில் தடம் பதித்த கொடியில் பூத்து
மறை மொழியைப் பறைசாற்றி மனிதம் காத்து
நிறைவாழ்வின் திருவடியை அடைந்த சறா!
நினைவாலே கோயில் கட்டிப் புலம்புகின்றோம்!

இறுதிவரை மக்களுடன் இருப்பேன் என்ற
உறுதிமொழி காத்து உயிர் நீத்த மைந்தா!
அலைகள் செய்த அழிவினிலும் அரணாகி நீ
கொலை மலிந்த போரினிலும் விளக்காகினாய்!

மனிதத்தின் குன்றாய் யாழ் குருவாகினாய்
புனிதத்தின் அருள் ஈந்து பணியாற்றினாய்
பருவத்தின் பற்றெல்லாம் பதிக்காக்கினாய்
உருவத்தின் பொலிவையன்புச் சுடராகினாய்!

புறமுதுகு காட்டாத புதல்வா சறா!
அறமெதுவும் இல்லையடா அறிவாய் இன்று
மதவெறியும் இனவெறியும் அழிந்துபோக
மலரட்டும் புதுவாழ்வுன் மறைவின் பேறாய்!

*நீ.மரிய சேவியர்*

## கெத்சமனி அனுபவித்த இறை ஊழியன்

எம் பாசத் தந்தையே,
இதழ் பிரிக்காமல் குரல் எழுப்பாமல்
இமைகள் உதிர
விழிகள் காய - உறவின்
நிழல் கொண்டு
பாலைவனத் தாகமாய் - உம்
பாசத்தை பிரசவிக்க - நாம்
கதறிடும் குரல்மொழி

உயிர்கள் பிரிய அவயவங்கள் கருகிட
கால் பதித்த இடங்கள் புதைகுழியாகிட
பசியும், அழுகுரல்களும்
மலர்வளையமாகிட
சுவாசக்காற்றாய் இரத்தவாடை வீசிட
யாவையும் நெஞ்சக் கூட்டில் சுமந்து
மக்களுக்காய் இதயம் துடித்து- பல
கெத்சமனி அனுபவித்த இறை
ஊழியனே - இன்று
உந்தன் இதயத் துடிப்புத்தான் உயிர்
குடித்ததோ
துடிக்கின்றோம் உம் பிரிவால்
தொழுகின்றோம் இறைபாதம்
தாவுகின்றோம்
கண்ணீர்ப் பூமாலை

சவேரியார் குழுமம்

## எப்படி உன்னால் முடிந்தது?

நல்ல ஆயன் நானே,
நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன், என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்.

யோவான் 10:14-15

சறா!

எப்படி உன்னால் முடிந்தது?



இறைவனின் வார்த்தையை
இறுதிப் புள்ளிவரை வாழ்ந்து பணிபுரிய
**எப்படி உன்னால் முடிந்தது?**
எப்பணியென்றாலும்
அப்பணியில் முழுமையாய் அர்ப்பணிக்க
**எப்படி உன்னால் முடிந்தது?**
பேராழி அனர்த்தத்தால்
பெருந்தொகையாய் இறந்தவரை அடக்கம்செய்ய,
இழந்தவரை அருகிருந்து தேற்றி பணிபுரிய
**எப்படி உன்னால் முடிந்தது?**
சமூகப்பணி தொடர்பாக
வெளிநாடு செல்ல அனுமதி கிடைக்காததை
நிறைகுடமாய் ஏற்று தொடர்ந்து பணிபுரிய
**எப்படி உன்னால் முடிந்தது?**
போர் நடந்த இடம்விட்டு
வெளியேற அழைக்கப்பட்டும்
மக்களே உனது முன்னுரிமை என்று
இறுதிமூச்சு இருந்தவரை உடல் உருகி பணிபுரிய
**எப்படி உன்னால் முடிந்தது?**



எம் உள்ளத்தில் நீங்காது நிற்பது:
இறைத்தந்தை உனக்கு எப்போதும் நல்ல ஆயன்.
நீயும் அடுத்தவர்க்கு நல்லாயனானாய்.
உன் ஆழமான ஆன்மீகம் எமக்கு ஒரு வழிகாட்டி.
இறைவன் திருவடியில் நீ சாந்தி பெறுவதும் உறுதி.

நன்றியுடனும் பெருமையுடனும்,
குருத்துவத்தில் உன் நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வாழும் வெளி



1970களின் நடுப்பகுதியில் இலங்கைத் தமிழ் புனைக்கதைத் துறையில் கால்தடம் பதித்தவர், த.ஆனந்தமயில். தரமான பல கவிதைகளும் படைத்துள்ளார். அரச சேவையின் எழுதுவினைஞராகப் பணிபுரிந்தவர். சிறுகதைப் போட்டிகளில் இவரது கதைகள் பரிசில்கள் பெற்றுள்ளன. இலங்கையின் முன்னணிப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் இவரது சிறுகதைகள் வெளியாகியுள்ளன.

''ஓர் எழுதுவினைஞனின் டயறி' என்ற தலைப்பிலான இவரது சிறுகதைத் தொகுதி கடந்த வருடம் வெளியாகியது. வடமராட்சி பொலிகண்டியைச் சேர்ந்தவர். அவரது 'வாழும் வெளி' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

மினிபஸ் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தது. பஸ் நிலையத்தில் ஏறியதால் றைவரின் வரிசையில் இடம் கிடைத்திருந்தது.

பின் வரிசையில் சிறுவன் இருந்தான். அவன் வெண் சோகையால் பீடிக்கப்பட்டிருந்தான். அவனுக்குத் தமையன் இரத்தம் கொடுத்தே மீட்க வேண்டியிருந்தது. இரும்புச் சத்தும் ஏற்ற வேண்டியிருந்தது. பாடசாலையில் அவனுக்கு நல்ல பெயர் இருந்தது. அங்கிருந்தும் பார்ப்பதற்குச் சிறுவர் வந்திருந்தனர். நோயிலிருந்து மீண்டு வீட்டுக்கு வரும் மகிழ்ச்சியில் திழைத்திருந்தான்.

சனங்கள் நிறைந்திருந்தார்கள். றைவரின் வலது பக்கத்தில் ஒருவர் அமர்ந்திருந்தார். மிதிப்பலகையில் பலர் நின்றனர்.

''ஆச்சி என்ர காலில் நிக்கிறாயெணை, ஐயோ காலை விடணை'' இளம் பெண்ணின் குரல்.

''உள்ளை போணை''. நடத்துனரின் குரல்.

''இழவு, எங்கை இனிப் போறது'' ஆச்சி அவதியுடன் சொன்னாள். ''எல்லோரும் போகவேணும் தானே'' றைவர் கண்ணாடியூடாகப் பார்த்துச் சொன்னார்.

''பத்து வருடத்திற்கு முந்தி, இரண்டு ரூபாயுடன் புத்தகம் வாசித்துப் போகும் அளவில் விட்டு விசாலடியாக இருந்து போவினம்''. இளமை துள்ளும் இருவரிடையே ஒலித்த பேச்சு அது.

''நோக்காடு இல்லாமல் குழந்தை பெறும் கதை'' ஒருவரின் ஆக்ரோசக்குரல்.

''முப்பத்தைந்தைக் கொடுத்தும் மூச்சுவிட முடியாத பயணம்'' ஒரு முதியவரின் வாயிலிருந்து வந்தவை.

''வெள்ளைச் சல்லிக்குப் பல்லி மிட்டாய் வாங்கின கதையிது'' மறுதலிக்கும் ஒரு மூதியவரின் பேச்சு.

பஸ் இழுபட்டு நின்றது. கிழவர் ஒருவர் இறங்கினார்.

''பதினைந்து காணாது. இன்னும் ஐந்து ரூபாய் தா அப்பு'' என்று நடத்துனர் சொன்னார்.

''வேறை இல்லை மோனை''.

''என்னனை எங்கடை வீட்டை எண்ணெய்க் கிணறு கிடக்கெண்டு நினைக்கிறாயோ? இதுகளும் வெளிக்கிட்டு இருக்குதுகள்.'' மினிபஸ் மிதிபலகை நிலத்தில் முட்டியும் முட்டாமலும் இருக்க முன்னே வரும் மிதி வண்டிகளைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. 'கௌபோய்' தொப்பி, துடுப்பாட்டத் தொப்பி, கடவுள் தந்த கறுத்த நிறத் தொப்பிகளுடன் அவர்கள் வந்தனர். தங்கள் பிரயாணத்தை முடிக்கப் பிரயாசைப்பட்டனர். மிதி வண்டியின் பின்னே ஒருவர் தலை குனிந்திருந்து ஓட்டினார். ஒருவர் தாயையும் குழந்தையையும் வைத்து ஓட்டிச் சென்றார். விறகுச் சுமையுடன் 'மக்காட்' இல்லாத மிதி வண்டிகள் சிலவற்றைச் செலுத்திச் சென்றனர் சிலர். தொடராக மிதி வண்டிகள் கடந்து சென்றன. இடது பக்கத்தில் முதன்மை வாத்தியார் ஒருவர் அமர்ந்திருந்தார். பழக்கமானவர்.

''இன்றைக்கு வகுப்புப் போலை''- பேச்சைத் தொடங்கினேன்.

''உயர்தர வகுப்பின் செயலமர்வு ஒன்றிலிருந்து'' என்றார்.

சிறுவனைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது. அவனைப் பெரிய கல்லூரியில் சேர்க்க முடியவில்லை என்றேன். எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி அப்பிடித்தான். ரியூசனில்தான் படிப்பு என்றார்.

சில மாணவர் பாடசாலைகளில் இருந்து மட்டும் முக்கிய நெறிகளுக்குப் பல்கலைக்கழகம் போகநேர்ந்த வருடங்களைக் குறிப்பிட்டார். செயலமர்வின் போதனையாளர் தாமும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவருமே என்றார். பாதையைப் பார்த்துக் கோயில்களைக் கண்டு கை எடுத்து வழிபடும் பாலனைப் பார்த்து, புன்முறுவல் பூத்தார்.

சன நெருக்கடியும் றோட்டின் குன்று குழிகளும் பிரயாணத்தைத் தாமதப்படுத்தின. சந்திப்புக்களில் வைக்கப்பட்டிருக்கும் இழந்துவிட்ட இளமையின் தோற்றங்கள் துன்பத்தைத் தந்தன. பறக்கும் 'அவ்றோ' விமானம் பக்க வாட்டில் தெரிந்தது. வாழைத் தோட்டங்கள் களையிழந்து கிடந்தன. சந்திக்குச் சந்தி போத்தல், பிளாஸ்ரிக் கொள்கலன்களுடன் மண்ணெண்ணெய்க் கடைகள் போடப்பட்டிருந்தன.

புகைக்கும் ஓட்டோ வண்டி செல்கிறது. மோட்டார் சைக்கிள் ஒன்று பறக்கிறது. பிரயாணிகள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய பாரத்தைச் சுமப்பதாக உணர்கின்றனர்.

வல்லை வெளி அண்மித்தது. றோட்டும் ஆறும் தூரத்தே வளைந்து கிடக்கின்றன. மிதிவண்டிகளின் சங்கிலித் தொடர் இருபக்கமும் வளைந்து நீண்டு கிடந்தது. அவ்விதத்திலும் அழகிருந்தது. உன்மத்தமாக உடைத்தெறியப் பிரயோகிக்கப்பட்ட குண்டுகளினால் சிதைந்து, ஒருவிதமாகப் பலகைகளால் பொருத்தப்பட்ட பாலப்பகுதியில் வாகனம் ஊர்ந்து சென்றது.

பாலச் சுவரில் இருவர் தூண்டில் கம்புகளுடன் நின்றனர். கிழக்கே சிலர் கரப்பு வைத்த கண்டிகளில் மீன் வேவித்தனர். பாலத்தின் மேற்கே சிலர் வீச்சுவலை எறிந்தனர். நீண்ட கொக்குகள் வடக்கு நோக்கிப் பறந்தன. பிரயாணிகள் மினிபஸ்ஸின் சத்தத்திற்கு அப்பால் ஹெலி விமானச் சத்தங்களைக் கேட்க முயன்று, அப்படி எதுவும் கேட்கவில்லை என்று திருப்திப்படுத்திக் கொண்டனர். எனினும் அங்கே ஒருவித பயம் இருந்தது. கூடிய விரைவில் வெளியைக் கடப்பதற்கு விரும்பினர்.

எதிரில் வருவோர் வினாவ அவதியிலும் தரித்து, வல்லைப் பிள்ளையாரை வணங்கியே புறப்பட்டனர். காடு வளர்ப்பை ஊக்குவிக்கும் வாசகப் பலகைகள் நிற்கின்றன. பாதை இரு மருங்கும் மட்டைக் கூடுகளில் முளைக்கும் மரக்கன்றுகள் பச்சையாய் தலை தூக்கிக் கொண்டிருந்தன. நெருப்பு வெயில் தகித்தது. வாகனத்துள் காற்றுப் புகுந்தது. பிரயாணிகளை ஆசுவாசப்படுத்தியது. எங்கோ நடந்த கரைச் சம்பவத்தை சித்திரிக்கும் முகமாக கொண்டு வந்திருந்த படகு ஒன்றின் நீள் பாதி நீர்க்கரையில் கிடந்தது. வயலில் வெட்டிய நெல்லின் வைக்கோல் கட்டைகள் தெரிந்தன.

வெளியின் முதற் பனங்கூடலை மினிபஸ் நெருங்கி வந்தது. எதிரே வந்த சில மிதிவண்டிக்காரர் மினிபஸ் முன், மேலே எதனையோ சுட்டிக்காட்டி அந்தரப்பட்டுக் கடந்தனர். முன் இருக்கையிலிருந்த எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒருவக அவதியை உணர முடிந்தது. றைவர் வேகத்தைக் குறைத்து வந்தான். மிதி பலகையில் நின்ற பலர் குதித்து முன் பக்கமாக ஓடினர்.

யாரோ ''பொம்பர்'' என்றார். இப்போது பொம்பர் சத்தம் தெளிவாகக் கேட்டது.

''பஸ்ஸை நிப்பாட்டு'' என்றனர் சிலர்.

''ஒருவரும் இறங்க வேண்டாம், இறங்க வேண்டாம்'' றைவர் கத்தினார்.

''பஸ்ஸை நிப்பாட்டு'' என்று யாரோ கட்டாயப்படுத்தினர்.

மேலே அந்தச் சத்தம் எங்களை நோக்கி வந்த வண்ணம் ஸ்தம்பித்தது. பத்திரிகையில் படங்கள் போட்டு எங்கோ நிகழ்ந்த இழப்பின் சிதைவுக் கொடூரம் மனதில் பளிச்சிட்டது. எல்லோரிலும் அவஸ்தைத் துடிப்பு.

சிறுவனைத் திரும்பிப் பார்த்தேன். முகம் கடும் சுகயீனத்தின்போது இருந்ததைப் போல வெளிறி இருந்தது. கண்களில் பீதி தெரிந்தது. எமது வாழ்வு சில நொடிப் பொழுதில் முடியப் போகிறது. பஸ்ஸின் முன் புறத்தே சில மீற்றர் ஓடிப் போன சிலர் மேலே பார்த்துப் பார்த்து, இன்னும் ஓடித் தாவினர். ''அவ்வளவுதான்..... பொம்பர் குத்துகிறது'' என்றனர். விரைந்து வெளியேற முடியவில்லை. றைவர் கதவைத் திறந்து குதித்தான். அதனூடாக சிறுவனுக்கும் சைகை காட்டி இறங்க, அவனும் பின்னே இறங்க குத்திவரும் பொம்பர் தெரிகிறது. அது சூரிய ஒளியில் பளபளக்கிறது. இங்கு ஒரு பெரும் கொடூரம் நிகழ்ந்ததாகத் தப்பியிருக்கும் மற்றையவர் பின்னர் பார்ப்பர். எனக்கும் சிறுவனுக்கும் றைவரின் கதவடியின் கீழ் இறங்கிக் கால் வைக்கும் அளவுக்கு அவகாசம் கிடைத்தது. பாதிப்பேருக்கு மேல் வாகனத்தை விட்டு இறங்க முடியவில்லை. சாவு அமைதி. எங்கள் அடுத்த கண ஆசையில் எண்ணத் தொடர்கள் அறுந்துவிட்டிருந்தன. வரண்டு தொண்டை அடைத்தது. வாழ்க்கைப் பயணம் முடிவுற ஒரு கணம்தான் இருந்தது.

அதென்ன.......! பனை உச்சியளவுக்குக் குத்திவந்த பொம்பர், நிமிர்ந்து, எழுந்து மேற்கு நோக்கிப் போகத் தொடங்கியது. நாவில் நீர்ப்பிடிப்பு வந்தது. கண்கள் மின்னித் தெளிந்தன.

''ஆள்கள் இறங்கி ஓடினது நல்லது. சனங்களைக் கண்டு தான் குண்டு போடாமல் போறான்''. ஒருவர் சொன்னார்.

''அவன் நல்லவன் போலை...... எல்லோருக்கும் ஆயுள் இன்னும் இருக்குப் போலை'' ஒரு மனிஷன் சொன்னான்.

''சரி சரி எல்லோரும் ஏறுங்கோ. அவன் திரும்பி வருவான்'' என்று மினிபஸ்ஸை றைவர் இயக்கினான். இறங்கியவர்கள் அடித்து விழுந்து ஏறினர். ஓட, ஓட ஏறினர்..... சிறுவனைப் பார்க்கிறேன்- அவன் முகத்தில் வாழும் ஆசை எவ்வளவாய்க் குவிந்து கிடக்கிறது! ✱✱✱

(நன்றி: 'ஓர் எழுதுவினைஞரின் டயறி ' - சிறுகதைத் தொகுதி)

# பணியாளர் இன்றித் தனது குடும்ப நிர்வாகத்தை தாய் ஆற்றும்போது அன்பும் அறிவும் வளர்கின்றன

அத்திரி முனிவரின் மனைவி அனுசூயை அம்மையார். திருவும் தெளிவும் அமைந்த நற்குடும்பத்திற் பிறந்தவர். பெண்ணுக்குரிய நற்பண்புகள் நிறைந்தவர். இத்திருமகள் அத்திரி முனிவரின் தர்ம பத்தினியானதும் தன் அலங்காரங்கள் அனைத்தையும் மூடைகட்டினார். தவக்கோலம் பூண்டார்; கணவனுக்கேற்ற மனைவியாக வாழ்ந்தார். வனத்திலே வானப்பிரஸ்த வாழ்வில் இவர் திளைத்த போது சீதாப்பிராட்டியாருடன் இராம இலக்குவர் ஆசீர்வாதம் பெறவந்தனர். அழகும், இளமையும், ஒளி முகமும் கொண்ட சீதாபிராட்டியை அனுசூயை கண்டதும் அவளின் அழகைக் காண விழைந்து தான் மூடை கட்டி வைத்திருந்த ஆடை, அணிகளைப் பிராட்டியாருக்கு அணிந்து அக மகிழ்ந்தார். அந்த அணிகலன்களே பின்பு சீதாபிராட்டியாரைக் கண்டறிய உதவின. அனுசூயையின் நல்லுள்ளம் நல்லதையே செய்ததை இதனால் நாம் அறியலாம்.

கண்பார்வையற்ற திருதராஷ்டிரனுக்கு காந்தாரியை மண முடித்தனர். கணவனைப் போலத் தானும் கண்பார்வையற்ற பெண்மணியாக இருத்தல் வேண்டித் தன் கண்களைக் கறுப்புத் துணியாற் கட்டி மறைத்துக் கொண்டாள் காந்தாரி. மேலும் இராமபிரான் மரவுரிதரித்து தவக்கோலம் பூண்டு வனத்திற்குப் புறப்பட்டபோது இராமன் இருக்குமிடமே அயோத்தியென்றெண்ணிச் சீதாபிராட்டியும் தவக்கோலம் பூண்டார். காட்டுக்குச் சென்றார் என்பது இராமாயண வரலாறு. வேதங்கள் மறையலாம்; இதிகாசங்கள் விடைபெறலாம்; ஆனால் சீதை, சாவித்திரி ஆகியோரின் சரித்திரம் என்றும் எம்மவர் உள்ளத்தில் நின்று நிலவக் கூடியவை.

கணவனைக் கண்ணாகக் கொண்டு வாழ்பவளே உயர்ந்த மனைவி. கணவன் எத்திறத்தனோ அத்திறத்திலே தன்னையும் ஆக்கிக் கொள்ளும் பெண்மணியே குடும்ப நலம்பேணும் பெண்ணாவாள்.

## இல்லந்தோறும் முழுமையான குடும்ப வாழ்வு கண்டது எமது பிரதேசம்

''ஆசை வளருமுள்ளம் பெண்; அறிவு வளருமுள்ளம் ஆண்'' இது பண்டையோர் கருத்து. போதும் என்ற மனமே பூங்காவனம்! ஆதலின் தன் குடும்பத்துக்குக் குளிர் நிழலைத் தருபவளே உத்தம மனைவியாகிறாள். கணவன் வழிக்கு எதிர் நீச்சலிடாது பருந்தும் நிழலும் போல் பிரியாது வாழ்தலே நல்ல வாழ்வு. கணவன் வழி மனைவி தன்னை ஆக்கிக் கொள்ளல் தமிழர் அறம். 'ஈசன் எத்திறம் ஈசுவரியும் அத்திறம்' என்ற சித்தாந்தப் பொருள் வாழ்வாங்கு வாழும் இந்த இல்லறத்தினின்றே தோன்றியது. அனுசூயை, சாவித்திரி, சீதை, காந்தாரி முதலிய பெண்கள் இதற்குச் சான்றாக உள்ளனர்.

பழைமை இருந்த நிலைப்பண்பானது. புதுமைக்கும் [illegible] தான். அனுபவத்தால் விளைந்த கோதில்லா மாணிக்கம் பழைமை. இந்தப் பழைமையிலே விளைந்த பெண்மணிகளே புராண, இதிகாச இலக்கியப் பெண்மணிகள். புராண, இதிகாசங்கள் எதிர் மறைப் பெண்களைப் படைத்து உயர் நிலைப் பெண்மணிகளின் மேலாந்தரத்தை உள்ளத்தில் பதியுமாறு உணர்த்துவன. சுவைத்தலுக்காக இந்நூல்கள் ஆக்கப்படவில்லை. மக்கள் பண்பு மேலும் மேலும் வளர்ந்தோங்குவதற்காகவே இலக்கியங்கள் எழுகின்றன. இலக்கியம் என்பது இலட்சியத்தை அடையும்படி நெறிப்படுத்துவது என்பதை நாம் உணர வேண்டும். இலட்சியம் இல்லாதவன் வாழ்வு வானத்தில் எய்த பாணம் போல் வீணாகும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒவ்வொரு குடும்பமும் முழுமையான வாழ்வை மேற்கொண்டது. ஏவலாளர் இன்றி குடும்ப உறுப்பினர் அனைவரும் ஒன்றாக ஒன்றியிருந்து உழைத்தனர். அதனால் சிக்கன வாழ்வும், சிறந்த வாழ்க்கை அனுபவமும், பொறுப்புணர்ச்சியும் வளர்ந்தன. குடும்பமும் பெருக்கம் இன்றி சுருங்கியிருந்தது. புதல்வர்களை நற்பாங்கில் வளர்க்கச் சிறிய குடும்பமே ஏற்றது. வருவாய் சுருங்கினாலும் வளமான வாழ்வு அமைய இது உதவும். குழந்தை பிறந்து ஐந்து வயது வரை தாயை ஒட்டியே வளருகின்றது. தாயாரின் நற்குண, நற்செயல்கள் குழந்தையின் உள்ளத்தில் பதிகின்றன.

நல்லாள் என்றொரு பொருள் பொதிந்த சொல் பெண்ணைக் குறித்து இலக்கியங்களில் வருகின்றது. நல்லார் என்றுங் கூடுவர். நல்ல செயல்களைச் செய்பவர் என்பது பொருள். பணியாளர் இன்றி ஒரு தாயானவள் தன் குடும்ப நிர்வாகத்தை ஆற்றும் பொழுது அறிவும், அன்பும், பண்பும் வளருகின்றன. சிக்கனம் சிறப்பைத் தருகின்றது. ஒழுக்கம் விழுப்பமுறுகிறது. பெரியோர்களின் வாழ்வில் இதனைக் காண்கிறோம். காந்தியடிகள் வாழ்வில் கஸ்தூரிபாய் எல்லாக் காரியங்களையும் தானே செய்தார். காந்தியடிகளும் தன் காரியங்களைத் தானே செய்தார். இதனால் அவர்கள் வாழ்வு பண்பிலே வளர்ந்தது. பாரத நாட்டின் பண்பூட்டினை மேலும் வளர்த்தது.

பெண்களுக்கு உடலழகும் தேவைதான். அந்த அழகு தெய்வ மணத்தில் மலர்ந்தால் எல்லா உயிரும் கைகூப்பித் தொழும். புறத்தழகோடு அகத்தழகும் பிரகாசிக்க வேண்டும். பெண்களுக்கு அகத்தழகு நாணம். நாணம் என்பது கூசும் ஓர் உணர்ச்சி. ஆண்களோடு நெருங்காத ஓர் ஒதுங்குகின்ற இயற்கைப் பண்பு அது. உள்ளத்தில் உள்ளது, மனித வளர்ச்சியில் படிப்படியாய் மெருகேறிய நல்ல பண்பு நாணம். காலமாறுபாட்டால் இப் பண்பு குறைந்திருப்பது போலக் காணப்படினும் இல்லறவாழ்விற்கு அருந்துணையாய் நிற்பது இந்தத் திருநுதலார் நாணமே. மங்கையருக்கு நாணம் விலைமதிப்பில்லா நாணயம். (14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவில் - நாதஸ்வரக் கலை தமிழர்கள் மத்தியில் இன்றும் தெய்வீகக் கலையாகவே போற்றப்படுகிறது



இசைத்துறையில் நாதஸ்வரக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுக்காக நாதஸ்வரக் கலைஞர் **செல்லையா சிவசாமி**க்கு கடந்த ஆண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் கௌரவிக்கப்பட்ட கலாபூஷணம் செ. சிவசாமி, நல்லூர் சங்கிலியன் வீதியைச் சேர்ந்தவர். அவருடனான பேட்டி கீழே தரப்படுகிறது.

**கேள்வி:-** நாதஸ்வரக் கலையின் மீது உங்களுக்கு எப்படி ஈர்ப்பு வந்தது?

**பதில்:-** நாங்கள் ஸ்வரக்கலையைக் கொண்ட பரம்பரைக் குடும்பத்தினர். எனது சகோதரர் மைத்துனர் எல்லோருமே நாதஸ்வரம் வாசிக்கும்போது எனக்கும் இந்த இசையின் தெய்வீகத்தன்மையும் இனிமையும் மிகவும் பிடித்துப்போனதால் அதை ஆர்வத்துடன் அவர்கள் மூலமாகவே கற்க ஆரம்பித்தேன்.

**கே:-** உங்களுக்கு இத்துறையில் குருவாக இருந்து பயிற்றுவித்தவர்கள் பற்றி கூறமுடியுமா?

**ப:-** எமது குடும்பம் தவில் நாதஸ்வரக்கலையில் ஊறிய பரம்பரையினர் என்பதால் சகோதரர் சண்முகசுந்தரம் மைத்துனர் அப்புலிங்கம் இருவரும் மிகவும் திறமைமிக்கவர்களாக விளங்கினார்கள். இசையின் நுணுக்கங்களையும் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். இதனால் அவர்களிடம் பயின்றதில் இந்தக் கலைபற்றி நன்கு தெரிந்து கொண்டு, சிறப்பான முறையில் நான் தேர்ச்சி பெற்றவனாகவும் உருவாக முடிந்தது.

**கே:-** வேறு யாரேனும் உங்களுடைய கலைத்துறை வளர்ச்சியிலும் பயிற்சியிலும் பங்கு கொண்டுள்ளார்களா?

**ப:-** 16 வயதில் எனது பயிற்சியைத் தொடங்கினேன். 18 ஆவது வயதில் தமிழகத்திற்குப் பயிற்சிக்காகச் சென்றேன். இரண்டு வருடங்கள் அங்கு பயின்றேன். நாதஸ்வரக்கலையில் நான் இதுவரை அறிந்திராத நுணுக்கங்களையும், மேலதிகமாக சிறந்த பயிற்சியையும் பெற வேண்டும் என்பதற்காக எனது மைத்துனர்கள் இருவரும் தமிழ் நாட்டின் ஐயம்பேட்டை வேணுகோபால் என்ற நாதஸ்வர வித்துவானிடம் பயிற்சிபெற ஏற்பாடுகள் செய்து தந்தனர். அவரிடம் இரண்டு வருடங்கள் பயின்றேன். நான் இன்று ஒரு சிறந்த நாதஸ்வரக் கலைஞனாக வருவதற்கு இந்த மூவருமே காரணம்.

**கே:-** நீங்கள் நாதஸ்வரக் கலையைப் பரவலாக்குவதற்கு எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டீர்கள்?

**ப:-** நான் நாதஸ்வரக்கலையில் ஓரளவு தேர்ச்சி பெற்றவன் என்பதால் இந்தக் கலையை வளர்ப்பதில் இளம் சந்ததிக்கு உதவ விரும்பினேன். என்னிடம் சுமார் 10-15 மாணவர்கள் இக்கலையைப் பயின்று, இன்று மலேசியா உட்பட வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். அந்த நாடுகளில் இந்தக் கலைச் சேவையில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சியாக இருக்கிறது. இங்கும் பாலமுருகன், விநாயகமூர்த்தி, காளிதாஸ் போன்றவர்கள் முன்னணிக் கலைஞர்களாக இருக்கிறார்கள். அது எனக்குப் பெருமையாகவே உள்ளது.

**கே:-** உங்களுடைய இசைத்திறமைக்கு மதிப்பளித்து வழங்கப்பட்ட விருதுகள், பட்டங்கள் என்பவற்றை வரிசைப்படுத்த முடியுமா?

**ப:-** அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ காஸ்தாபீடம் 'இசைக்கலாபமணி' பட்டத்தையும் வவுனியா கந்தசுவாமி கோவில் 'கலாசூரி' பட்டமும் கலைமாமணி பட்டத்தை வவுனியா ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானமும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

**கே:-** பொதுவாகவே இசைக் கலைஞர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்று தமது திறமையைநிரூபிப்பதுண்டு. அத்தகைய அனுபவங்கள் உங்களுக்கு உண்டா?

**ப:-** கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் பிரபல தவில் வித்துவான்களுடன் இணைந்து நாதஸ்வரக் கச்சேரிகளில் கலந்து கொண்டுள்ளேன். இலங்கை வானொலியிலும் எனது இசை நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. அவர்களது தேர்வுகளில் நாதஸ்வரக் கலைக்கான சான்றிதழும் கிடைத்துள்ளது.

நான் இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும்தான் கச்சேரிகளில் கலந்துள்ளேன். அப்போதெல்லாம் வெளிநாடுகளில் இருந்து அழைப்புக்கள் வருவதில்லை. ஏ-9 வீதி மூடப்பட்ட பின்னர் இலங்கையின் தென் பகுதிகளுக்குச் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

**கே:-** நாதஸ்வரத்துறையைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியான வருவாய் நிலை எப்படி உள்ளது?

**ப:-** இந்தத் தொழிலின் மூலம் பங்குனி-ஆவணி வரை ஆறு மாதங்களுக்கு மிகவும் கூடிய வருமானம் கிடைக்கும். ஏனைய காலங்களில் அது மிகவும் அருமையாகத்தான் கிடைக்கும். வாழ்க்கைக்குப் போதிய அளவுக்கு இந்தக் காலங்களில் வருமானத்தைப் பெறமுடியும்.

**கே:-** இன்றைய நவீனத்துவத்தின் தாக்கம் மிகுந்துள்ள சூழலில் நாதஸ்வரக் கலையின் நிலை என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**ப:-** தவில் நாதஸ்வரக்கலை வளர்ச்சியடைவதாகவே நினைக்கிறேன். 'இசை வேளாளர் சங்கம் ,இசைக்கலைஞர் மன்றம்' போன்றவை இளம் தலை முறையினருக்கு நல்ல பயிற்சி வழங்கி வருகிறது. இது ஒரு தெய்வீகக்கலை, இது மென்மேலும் வளர்ச்சிபெற வேண்டும். இப்பொழுதும்கூட ஒருசில மாணவர்களுக்குத் தினமும் நாதஸ்வரக் கலையைப் பயிற்றுவித்து வருகின்றேன். எனக்கு 84 வயதாகிவிட்டது. எனது மருமகன் சண்முகநாதனுடன்தான் இருக்கிறேன். அவரும் மகளும் என்னை ஓய்வாக இருக்கும்படி வற்புறுத்தி வருகிறார்கள். அதனால் முன்புபோல் எதிலும் பங்குபற்றுவது இல்லை. வீட்டில் வைத்துத்தான் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். அதற்காக அவர்களிடம் பணம் வாங்குவதில்லை.

சந்திப்பும் படமும்:
**ஒளண்யன், லக்ஸ்மன்.**

**கே:-** கலாபூஷணம் விருது உங்களுக்குக் கிடைத்துள்ளமை பற்றி உங்கள் உணர்வுகளை இங்கு பகிர முடியுமா?

**ப:-** இசைத்துறையில் நாதஸ்வரத்திற்காக கலாபூஷணம் விருது கிடைத்துள்ளது. உரியவர்களை இனங்கண்டு அரச அதிபர் எடுத்த முயற்சிகள் இந்த விருதைப் பெறக்கூடிய வாய்ப்புக்களை கலைஞர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இது போன்று சிறந்த கலைஞர்களுக்கு கலாபூஷணம் விருது வழங்குவது கலை உலகிற்கு அளிக்கும் மதிப்பும் கௌரவமும் என்பதே எனது கருத்து. இத்தகைய நல்ல பணி கலைஞர்களை ஊக்குவிக்கவும் தோற்றுவிக்கவும் உதவும். ***

# யுத்த அனர்த்தத்தினால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் எமது சமுகத்தில் நீண்டகாலத் தாக்கங்களை உண்டாக்கும்

யுத்த அனர்த்தம் சிறுவர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கின்றது. அவர்களுக்கேற்ற உதவி செய்தால் இந்தப் பாதிப்புக்களின் நீண்டகால விளைவுகளை முடிந்த அளவுக்குக் குறைக்கலாம்.

உளநெருக்கீடு மனதிலும் சிந்தனையிலும் அளவுக்கு மீறிய சுமையை ஏற்படுத்துகிறது. இதன் விளைவை உடனடியாகவோ தாமதமாகவோ உணரக்கூடியதாக இருக்கும். சிறுவர்கள், தமது சிந்திக்கும் திறன் சீர் குலைந்த நிலையில் எதிர்பாராத சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாதவர்களாக இருப்பர். ஆபத்து ஏற்பட்ட இடத்தை விட்டுவருவதற்குத் தயங்குவர். அங்கேயே அடைபட்டு இருப்பதைப்போல உணர்வர் அல்லது தம்முடு அபத்தினைச் சந்தித்தவர்களுடன் இணைந்து கொள்வர்.

மனிதனுக்கு உலகத்தைக் குறித்து ஒரு கற்பனை அல்லது கருத்து உண்டு. அநேகர் உலகம் நல்லது என்றும் அர்த்தமுள்ளது என்றும் நினைக்கின்றனர். ஆனால், அனர்த்தம் ஏற்பட்ட பின்பு அவர்களின் கற்பனை உலகம் நொருங்கிப்போய் விடுகிறது. அவர்கள் ஒன்றும் செய்யமுடியாதவர்களாக உதவியற்றவர்களாக மாறி விடுகின்றனர்.

பெரிய வன்தாக்கங்களால் பயம், உதவியற்ற நிலை, இழப்பு, சோகம், அதிர்ச்சி என்பன ஏற்படுகின்றன.

தாய், தந்தையை இழந்தோர், தாயை இழந்தோர், தந்தையை இழந்தோர், சகோதரர்களை இழந்தோர், நண்பர்களை இழந்தோர் எனச் சிறுவர்கள் இழப்புக் குறித்து வேதனை அடைவர்.

பொதுவான உணர்வு வெளிப்பாடுகளாக அனர்த்தத்தினைத் தவிர்த்திருக்கலாம் என்ற உணர்வு காணப்படும். இதில்

அனர்த்தம் அவ்வாறு நடவாது இருந்திருந்தால்;
ஏன் இப்படி நடந்தது?
என்ற எண்ணங்கள் தோன்றும்.

அடுத்து உறுதியான நிலைமை இழத்தல் ஏற்படும். அதாவது அனர்த்தம் வாழ்க்கையின் ஒழுங்கு முறைகளைச் சீர்குலையச் செய்யும். உறுதியான நிலை இல்லாததால் அச்சம் ஏற்படும். இது நம்பிக்கையை இழக்கச் செய்யும். இதனால் எங்களுக்கு எதுவும் ஏற்படலாம் என்ற எண்ணம் ஏற்படும்.

தமது பாதுகாப்புக் குறித்த பயம் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களில் காணப்படும்.

தங்களுக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்ற பயம் மிகக்கடுமையாகக் காணப்படும். சிறுவர்கள் மற்றையவர்களுடைய தேவை, தங்களின் தேவையைவிட முக்கியமானது என சிந்திப்பதற்கு சிரமப்படுவர். எனவே அனர்த்த விளைவுகளில் இருந்தும் அவர்களின் சொந்தப் பாதுகாப்புப் பற்றியும் சிறுவர்களுக்குத் தொடர்ந்தும் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும். பொதுவாக அனர்த்தத்தின் பின் சிறுவர் மனதில் எழும் கேள்விகள்

*இது ஏன் நிகழ்ந்தது?*
*நான் எங்கே செல்வேன்?*
*இது மீண்டும் நிகழுமா?*
*இது எனக்கு நிகழுமா?*
என்பனவாகும்.

பெற்றோர்களும் பாதுகாப்பு நல்குபவர்களும் வேதனையை அனுபவிக்கும்போது பிள்ளைகளுக்குத் தேவையான ஆறுதலைக் கூறமுடியாது இருக்கின்றனர். இது பிள்ளைகளின் பிரச்சினைகளை மேலும் கடினமாக்கி விடுகின்றது. பிள்ளைகள் வேதனைப் படுகின்றார்கள் என்பதைப் பெற்றோர்கள் உணர்வதில்லை. பிள்ளைகளும் தங்கள் வேதனைகளை எடுத்துக்கூற முடியாதவர்களாக இருக்கின்றனர். இத்தகைய வேதனையாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்ட பிள்ளைகள் தங்களது அன்றாடக் கடமைகளைச் செய்ய முடியாதவர்களாக இருப்பர்.

இவர்களிடம் வாந்தி எடுக்க வேண்டும் என்ற உணர்வு, வயிற்றுவலி, பேசமுடியாமை, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படலாம். எளிதில் கோபப்படல், அமைதியற்ற நிலை, மனோதிடம் அற்ற நிலை என்பன அவர்களது நடத்தையில் காணப்படலாம்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதிப்பு சில வேளைகளில் ஏனைய இழப்புகளினால் அல்லது வேதனையினால் தவிப்பவர்களின் பிரதி பலிப்புக்கு ஒப்பானதாக அமையும். அவையாவன:- மறுதலித்தல், கோபம், மனச்சோர்வு, பேரம்செய்வதும் சம்பாதித்தலும் என்பனவாகும். எல்லாப் பிள்ளைகளும் வளர்ந்தவர்களும் மேற்கூறிய உணர்வுகளை அனுபவிப்பதில்லை. மேலும் மேற்கூறிய ஒழுங்கின்படியும் அவர்களுக்கு ஏற்படுவ தில்லை. ஒருபிள்ளை கோபப்படலாம், பின் சோர்வடையலாம், திரும்பவும் கோபம் கொள்ளலாம். உணர்வுகளை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்கள் என்பது சிறுவர்களின் வயதுக்கேற்ற விதத்தில் அமையும்.

மிகவும் வயது குறைந்த பிள்ளை சம்பவம் குறித்துப்பேச மறுப்பதன் மூலம் மறுதலித்தல் என்ற பிரதிபலிப்பினை வெளிப்படுத்தும் அல்லது மற்றவர்கள் சம்பவத்தினைப் பற்றி கூறும்போது அந்த பிள்ளை மற்றவர்களைச் சிரிப்பூட்டும் செய்கையில் ஈடுபடும். பெரிய பிள்ளைகள் மற்றவர்களுடன் சேராது தனித்து இருப்பார்கள்.

கோபத்தினை ஆதாரம் இல்லாத மன எழுச்சி மூலம் காண்பிக்கும் பெரிய பிள்ளைகள் பெற்றோரிடம் எரிந்து விழுவார்கள்.

பாலர் வகுப்பைச் சேர்ந்த சிறுவர்கள் விரல் சூப்புதல், படுக்கையில் சிறுநீர் கழித்தல், பெற்றோரைக் கட்டிப்பிடித்தல், நித்திரைக் குழப்பம், பசியின்மை, இருட்டினைக்கண்டு பயப்படல், சிறுநீர் கழிப்பது குறைவு, நண்பர்களிலிருந்து விலகி இருத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவர்.

ஆரம்ப வகுப்பு மாணவர்களில் எளிதில் கோபப்படல், ஆக்கிரமிக்கும் தன்மை, ஒட்டிக் கொள்வது, பயங்கரக்கனவு, பாடசாலை செல்வதைத் தவிர்த்தல், சிந்திக்கும் தன்மை குறைதல், நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுவது குறைதல், சகோதரர்களுடன் சண்டையிடல் என்பன காணப்படும்.

வயதுவந்த பிள்ளைகளில் நித்திரைக குழப்பம், பசியின்மை, படிப்பில் திறமை குறைதல், உடல் நோக்கள், பெற்றோரிடம் சண்டையிடல், நண்பர்களிடம் இருந்து விலகல் போன்றவை காணப்படும்.

யௌவனப்பருவத்தினரிடம் உணவு உண்பதில் நாட்டமின்மை, நித்திரையின்மை, அதிர்ச்சி, உடற்பலவீனம், உடல்நோக்கள், கிரகிக்க முடியாமை, ஆத்திர உணர்வு என்பன காணப்படும்.

எனவே யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குச் சமூக உள ஆதரவு கிரமமாகத் தேவை. பத்திரிகைகளில் வரும் புகைப்படங்கள், யுத்தம் சிறுவர்களை எவ்வளவு பாதித்துள்ளது என்பதனைப் புரிய வைத்துள்ளது. இச்சிறுவர்கள் சாதாரண சூழலில் இருந்து பிரிக்கப்பட்டு முகாம் வாழ்வு வாழ்தல் தவறானதாகும். இது பிற்காலத்தில் பல சமூகப் பிறழ்வுகளுக்கு வழிவகுக்கும்.

வன்னியில் உள்ள குடும்பங்களில் பெரும்பாலானவை விவசாயம் செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றவர்களும், சமாதானத்திற்கான யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்றவர்களுமே ஆவார்கள். அவர்களது உறவுகள் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். மேலும் பலருக்கு யாழ்ப்பாணத்தில் வீடு வளவுகள் உள்ளன. எனவே 2 இலட்சம் மக்களை அகதிகளாகப் பார்க்காது அவர்களது சொந்த இடங்களுக்குச் சென்று வாழவிடும் போது அகதியாக உள்ள மக்களின் எண்ணிக்கை குறையும். மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் 40 வீதம் பாடசாலைகளில் 20 இற்குக் குறைவான மாணவர்களே ஒரு வகுப்பில் கல்வி கற்கின்றனர். எனவே சிறுவர்களை உளப்பாதிப்பிலிருந்து விடுபடவும் சிறந்த கல்வி ஊட்டவும் இயங்கும் சமூகத்துடன் இணைத்தல் வேண்டும். அதன் பின் இவர்களுக்கு நாடக சிகிச்சை, சித்திர சிகிச்சை, களிமண் விளையாட்டுக்கள், குழு வேலைகள், விளையாட்டுக்கள் மூலம் உளத் தாக்கத்தில் இருந்து மீட்கலாம். மாறாக சமூக நிறுவனங்கள் கிடுகுகளைக் கொண்டு போய் பற்றை வெளிகளில் குடியிருப்புக்களை அமைத்தலோ உண்டியலில் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தலோ நிவாரணமாக அமையாது.

**யுத்த அனர்த்தமும் ஆன்மீகமும்**

யுத்த அனர்த்தம் பல உயிரிழப்புக்களுக்கும் உடல் காயங்களுக்கும் பொருள் சேதங்களுக்கும் சாட்சியமாக அமைய இருப்பதால் பாதிக்கப்பட்டவர்கள் விரக்தி நிலையை அடைவர். இந்நிலையில் இறை நம்பிக்கை குறைந்து காணப்படலாம். சிலவேளைகளில் உயிர்தப்பியதைநினைத்து இறைநம்பிக்கை அதிகரிக்கலாம்.

துன்பப்படும்போது அல்லது ஒருவரால் இயலாத காரியம் நடைபெற விரும்பும்போது அதுகுறித்து கடவுளிடம் கேட்கும் வழக்கம் பொதுவானது. எல்லாம் கடவுள் செயல். இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இதன்போது எழும். இதனால் பதகளிப்புக் குறைந்து மனம் சாந்தியடையும். மேலும் வைத்தியர்கள்கூட நோயாளிக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளையும் செய்துவிட்டு கடவுள்தான் இனிக்காப்பாற்ற வேண்டும் என நோயாளியின் உறவினர்களிடம் கூறுவார்கள். அதன் அர்த்தம் உறவினர்கள் நோயாளிக்கு ஏற்படக்கூடிய எந்த முடிவையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையை அடைய வேண்டும் என்பதேயாகும். அதேபோல் எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள பாரிய சமூக உள நெருக்கடியிலும் இறை நம்பிக்கையை ஏற்படுத்துவதால் மக்களது மனம் பதகளிக்காது சாந்தியடைந்து மனம் அமைதியடைதல் சுலபமாகும். இதற்காக கலாசாரத்துக்கேற்ற நேர்த்திகள், பிரார்த்தனைகள், அர்ச்சனைகள், பூஜைகள், வழிபாடுகள் செய்யலாம். இதனால் பாரிய சமூக உளநெருக்கடியினை ஏற்படுத்திய வன்முறைகள், குடும்ப, தனி மனித வன்மமாக மாறாது காப்பாற்றலாம்.

*******

# எதிர்காலத் தமிழர் சந்ததியின் மனவலு நலிவடையும் ஆபத்து



**டாக்டர் சி. யமுனாநந்தா (MBBS, DTCD)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிதாசனின் நினைவு தினம் கடந்த இருபத்தோராம் திகதியாகும். அவரை நினைவு கூருகிறார் அவரது அபிமானச் சீடரான புலவர். ம.பார்வதிநாதசிவம்

# தமிழையே தனது தெய்வமாக வழிபட்டவர் பாரதிதாசன்
# மகாகவி பாரதி மீது பக்தி மிகுந்த கவிதை மாமன்னன்



பாரதிதாசன் அப்போது இளைஞன். இருபது வயது இருக்கலாம். அந்த வயதிலேயே இலக்கண, இலக்கியங்களைக் கற்றிருந்தார். கவிதை எழுதும் ஆற்றலும் மிக்கவராக விளங்கினார்.

அக்காலத்தில் பாரதியார் புதுச் சேரியில் தங்கியிருந்தார். பாரதியார் அடிக்கடி அரவிந்தரைச் சந்திப்பது வ்ழக்கம். ஒ்ருநாள் அரவிந்தரும் பாரதியாரும் உரையாடிக் கொண்டு ஆச்சிரம வாசலுக்கு வரும்போது, பாரதிதாசன் தன்னை ஒத்த நண்பர் களுடன் பலத்த சத்தமாக உரையாடிக் கொண்டிருந்தார். இதனைக் கவனித்த அரவிந்தர் ''யாரது சுப்புரத்தினமா'' என்று கேட்டார். அப்போது பாரதி தாசனின் சுப்புரத்தினம் என்ற பெயரே எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

அதற்குப் பாரதியார்-

''ஆமாம்! சுப்புரத்தினம்தான் எல்லார் கூட்டத்திலும் இருப்பான். ஆனால் பெரியபுலவன்'' என்றார்.

இதனைக்கேட்ட பாரதி தாசனுக்குப் பாரதியாரில் இருந்த பற்று பன்மடங்காகியது. மாபெருங் கவிஞராகிய பாரதியார் இருபது வயது இளை ஞனைப் ''பெரிய புலவன்'' என்று பாராட்டுவதானால் அந்தப் பாராட்டை வழங்கிய பாரதியாரின் உள்ளம் எவ்வளவு உயர்ந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் பாரதிதாசன், தான் எழுதிய இசைப் பாடல் ஒன்றை புதுச்சேரியில் பாரதியார் வீட்டில் நண்பர்கள் சிலருக்குப் பாடிக் காட்டினார். பாரதிதாசன் சங்கீதம் தெரிந்த வராதலால் இனிமையான குரலில் இசை பிசகாது பாடிக் காட்டினார். மாடியில் இருந்த பாரதியார் பாட்டு முடியும் வரை மாடியில் இருந்து கேட்டு விட்டுக் கீழே வந்து ''சுப்புரத்தினம், உன் பாட்டிலே நிறைய விஷயம் இருக்கிறது'' என்று பாராட்டினார்.

இயல்பிலேயேதனது புலமை யிலும் தனது கவித்துவத்திலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த பாரதிதாசனுக்கு, பாரதியாரின் பாராட்டுக்கள் மேலும் ஊக்கம் கொடுத்தன. அவையே ஆசி மொழியாகவும் அமைந்தன.

தம்மை ஊக்கப்படுத்தியும் நெறிப்படுத்தியும் கவிதை உலகில் பிரகாசிக்கச் செய்த பாரதியாரை, பாரதிதாசன் என்றும் போற்றத் தவறியதில்லை.

பாரதியாரைப் பாராட்டிப்பாடும் பாரதிதாசன்-

''தமிழகம் தமிழுக்குத் தரும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித்தவம் கிடக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.
பைந்தமிழ்த் தேர்ப்பாகன்! அவனொரு
செந்தமிழ்த்தேனீ! சிந்துக்குத் தந்தை!''

- என்று பாராட்டியுள்ளார்.

பாரதியாரின் புகழ் பரவத் தொடங்கிய காலத்தில், பாரதியாரின் பெருமையைப் பாரதிதாசன் அறிந்த அளவுக்கு மற்றவர் எவரும் அறிந்திருக்கவில்லை எனலாம்.

## ஒருவரை ஒருவர் போற்றிப் போற்றிப் புகழ்ந்த ஒப்புவமை இல்லா குருவும் சிஷ்யனும் அவர்கள்

அப்போது கல்கி கிருஷ்ணமூர்த்தி ஆனந்தவிகடனில் ஆசிரியராக இருந்தார். பாரதியார் உலக கவி அல்லர் என்று ஆனந்தவிகடனில் கட்டுரை ஒன்றை அவர் எழுதியிருந்தார்.

இதைப்படித்த பாரதிதாசன் வெகுண்டெழுந்தார்.

''பாரதியார் உலக கவி அகத்தில் அன்பும்
பரந்துபார்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்''

என்று கல்கி கிருஷ்ணமூர்த்திக்கு மறுமடல் எழுதினார். பாரதியார் உலக கவி என்பதை உலகறியச் செய்தார். பாரதியார் தமிழுக்குச் செய்த தொண்டினையும் அப்பாடலில் குறிப்பிட்டார்.

பாரதியார் காலத்தின் தேவை அறிந்தவர். அவர் காலத்துக்கேற்ற இலகு நடையைத் தமிழ் மொழிக்கு வழங்கியவர். அவர் கவிதைகள் வடிவத்திலும் கருத்திலும் தனித்துவம் உடையவை. பழமை தழுவியவை அல்ல என்பதை -

''பழைய நடை பழங்கவிதை பழந்தமிழ் நூல்
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தாரில்லை
பொழிந்திடு செவ்விய உள்ளம் கவிதை உள்ளம்
பூண்டிருந்த பாரதியாராலே இந்நாள்
அழுந்தியிருந்திட்ட தமிழ் எழுந்ததென்றே
ஆணையிட்டுச் சொல்லிடுவோம் அன்னைநீதில்
அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவி என்றால் புவிமேற்குற்றம்''

- என்று பாடினார்.

பாரதி-பாரதிதாசன் என்ற குரு சிஷ்யர் இருவருமே தமிழ்ப் பற்றும் தமிழ் இனப்பற்றும் மிக்கவர்கள். தன்மான உணர்வின் உச்சியில் நின்றவர்கள்- சிறுமை கண்டு பொங்கும் பெருமை கொண்டவர்கள். கருத்துச் சுதந்திரம் அவசியம் என்பதை வற்புறுத்தும் இருவரிடமும் சில வேற்றுமைகளும் இருந்தன.

பாரதியார் ஆத்திகர். முதலில் தெய்வத்தையும் அடுத்துத் தமிழையும் வழிபடுபவர். பாரதிதாசன் நாத்திகர். தமிழையே தெய்வமாக வழிபட்டவர்.

பாரதியார் பாரதத்தின் ஒருமைப் பாட்டை விரும்பியவர். பாரதிதாசன் ''திராவிடப் பொன்னாடே'' என்று திராவிட நாடு விரும்பியவர்.

பாரதியார் சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து என்று தெலுங்கிசையைப் பாராட்டியவர். பாரதிதாசன் தனித் தமிழ் இசையே தமிழனுக்கு வேண்டுமெனக் கூறியதுடன் தனித தமிழ் இசைக் கல்லூரி அமைத்த அண்ணாமலைச் செட்டியாரைப் பாராட்டியவர்.



குருபக்தி மிக்க பாரதிதாசனும் சிஷ்யனைப் போற்றும் பாரதியாரும் கவிதை உலகின் இருபெரும் மன்னர்கள். ❋❋❋

புலவர் ம.பார்வதிநாதசிவம்

---

# பாரம்பரியம் நிறைந்த ஒரு பாடசாலையை எடுத்தேன், கவிழ்த்தேன் என்று மூடலாமா?

அமைதியான கடலோரக் கிராமம். அந்த மக்களின்நீண்டகாலப் பிரச்சினை ஊருக்குக் குறுக்கே அணை ஒன்று கட்டப்படல் வேண்டும். மக்கள் எல்லோரும் சேர்ந்து மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கொடுக்கின்றனர். ஆனால் மேற்படி மனு கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அங்கே அணை ஒன்று கட்டப்பட்டு அதற்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்பட்ட நிலையே அந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காணப்படுகின்றது.

விடயம் வெளியே வர அந்த மக்கள் அந்த ஊழலிற்கெதிராக கிளர்ந்தெழுகின்றனர். அதன் விளைவாக அந்த மக்களை அதில்

## ஓலைக் கோலங்கள்

சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கொன்றொழிப்பதுடன், அந்த அத்திப்பட்டிக் கிராமத்தையே அந்தத் தேசத்தின் வரை படத்திலிருந்து அகற்றி விடுகின்றனர். அதில் தப்பிய இளைஞன் ஒருவன் சிற்றிசன் என்ற பெயரோடு அந்த அதிகாரிகளைக் கடத்தித் தண்டித்து இந்த அநியாயத்தை வெளிக்கொணர்கின்றான். இது முழுக்க முழுக்க கற்பனையான உண்மை கலக்காத தென்னிந்தியத் திரைப்படக் கதையொன்றாகும்.

அத்திரைப்படத்தைப் பார்த்த அநேகர் நடைமுறைக்குச் சாத்தியமற்ற தொன்றாகவே இதனைக் கொள்ளக் கூடிய நிலையயிலிருந்திருப்பர்.. ஆனால் இதே பாணியில் எம்மூரில் ஒரு அநியாயம் நிகழ்ந்துள்ளது என்றால் யாரும் நம்புவீர்களா?

நிறைவான கல்விப் பாரம்பரியம் உள்ள ஒரு பாடசாலை எடுத்தோம்; கவிழ்த்தோம் என்கிற தோரணையில் மூடப்பட்டிருக்கிறது. இதன் பின்னணி பற்றிய தேடல்கள் பல திரைமறைவு விடயங்களை வெளிக்கொணர்ந்தன.

குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயம் தற்காலிகமாக இயங்கி வந்த குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் இடம்பெற்ற சில முறைகேடுகள் அண்மைக்காலத்தில் வெளிப்பட்டிருந்தன. இத்தகைய முறைகேடுகளை வெட்ட வெளிச்சமாக்கியதில், பொன் பரமானந்த வித்தியாலய அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் பங்கிருக்கக் கூடும் என சம்பந்தப்பட்டவர்கள் எண்ணியதன் விளைவாகவே ஒரு பாடசாலையின் மூச்சு சத்தமின்றி அடக்கப்பட்டிருக்கின்றது என்று அரசல் புரசல்களாகத் தகவல்கள் வெளிக்கிளம்பியுள்ளன.

நமது கல்விப் பாரம்பரியத்தில் பாடசாலையொன்றின் உருவாக்கமும், அதனூடாக விளைகின்ற சமூகப் பயன்களும் பெறுமதிமிக்கவை. எனவே ஒருசிலரின் தனிப்பட்ட நலன்களையும், பழிவாங்கும் மனோநிலையையும் கணக்கிலெடுத்து பாடசாலை ஒன்றின் அழிவிற்கு வித்திடுவது சரிதானா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

யாழ்ப்பாணத்து வலிகாமம் மண்ணின் குரும்பசிட்டியில் 1900 களில் ஆரம்பிக்கப்பட்டதே பொன்பரமானந்தர் மகாவித்தியாலயம் ஆகும். இதில் வசாவிளான், பலாலி, கட்டுவன், குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்விகற்று வந்தனர்.

1986 இல் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையால் அந்தப்பகுதியிலிருந்த சில பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் இப்பாடசாலை இடம்பெயர்ந்து 1987 இல் ஏழாலை மகாவித்தியாலயத்திலும் 1988 இல் மீண்டும் சொந்தக் கட்டடத்திலும் விக்கினேஸ்வராவிலும் 1989 இல் மீண்டும் சொந்தக் கட்டடத்திலும் 1991-1992 மீண்டும் இடம்பெயர்ந்து மயிலணி சைவ மகாவித்தியாலயத்திலும் 1992-1995 யூனியன் கல்லூரியுடன் இணைந்ததாகவும் 1995-1996 மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில் 2002 மீண்டும் தெல்லிப்பளையில் ஓர் பிரபல கல்லூரியுடன் இணைந்ததாக சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தது. இந்தளவு சோதனைகளுக்கும் மத்தியில் 2005 இல் 10 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றிய பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் வலயமட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் முதலாம் இடம் பெற்றுள்ளது. அத்தோடு 2007 இல் கணிதத்தில் 100 வீத சித்தி; ஆறு மாணவர்கள் தோற்றி 6 பேரும் சித்தியடைந்துள்ளனர். இதனால் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளரால் மேற்படி பாடசாலை எழுத்து மூலமாகப் பாராட்டப்பட்டமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். பழைய மாணவர் சங்கம் சில காலத்திற்கு

சத்தியன்

முன்னர் ஆரம்பிக்கப்பட்டு அதற்கு வெளிநாடுகளிலிருந்து போதுமான நிதி வந்து கொண்டிருக்கின்றது. அதிபரும் இரண்டு ஆசிரியர்களும் கடமையாற்றி வந்துள்ளனர். 15 மாணவர்கள் கல்வி கற்று வந்துள்ளனர். இவர்கள் இணைந்திருந்த பாடசாலை அதிபரே இவர்களது நிர்வாகப் பொறுப்புக்களையும் கவனித்து வந்துள்ளார். அண்மையில் திடீரென மேற்படி இரண்டு ஆசிரியர்களுக்கும் கடமை நேர சூசி வழங்கப்படவில்லை. அதிபருக்குக் கோட்டத்திற்கு இடமாற்ற உத்தரவு என எல்லாம் அதிரடியாக நடந்தேறின. திடீரென 109 வருடங்கள் பழமைவாய்ந்த, எங்கெல்லாமோ இடம்பெயர்ந்து தனது சொந்த இடத்தில் சிறப்புற இயங்கிய நேரத்தில் இவ்வாறு மூடும் நிலை தோன்றியது ஏன்? அதுவும் வெளியில் எவருக்கும் எதுவும் தெரியவரவிடாது காதும் காதும் வைத்தாற்போல எல்லாம் நடநதேறியுள்ளன. ❋❋❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்புக் கேட்டார் மக்கலம்



ஐ.பி.எல். தொடரில் நடுவரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்த கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணித்தலைவர் மக் கலம், மன்னிப்பு கேட்டார். தென்னாபிரிக்காவில் 2 ஆவது ஐ.பி.எல்.'ருவென்ரி - 20' தொடர் வெற்றிகரமாக நடக்கிறது. இதில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட அணி ஷாருக்கான் உரிமை யாளராக இருக்கும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ்.


பயிற்சியாளர் புக்கானனின் கடைசி நேர குழப்பத்தால் இப் போது அந்த அணி மீழ முடியாத தோல்வியில் சிக்கித் தவிக்கிறது. இதுவரை பங்கேற்ற 12 போட்டிகளில் 10 இல் தோல்வியடைந்து, புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் பரிதாபமாக உள்ளது.

கடந்த 16 ஆம் திகதி நடந்த டெக்கான் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா மோதியது. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியின் கடைசி ஓவரில் டெக்கான் அணியின் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

இந்நிலையில் அணித்தலைவர் மக்கலம் களத்தடுப்பாளர்களை முறையாக நிறுத்த வில்லை. இதனால் மொர்டசா வீசிய முதல் பந்தை நடுவர் முறையற்ற பந்து என அறிவித்தார். இதை எதிர்த்து நடுவரிடம் அணித்தலைவர் மக்கலம் வாதிட்டார். இதற்கு ஐ.பி.எல். கடும் கண்டனம் தெரிவித்தது.

இது குறித்து மக்கலம் கூறுகையில்,''கடைசி நேரத்தில் வெற்றி பறிபோவதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. ஆர்வமிகுதியால் நடுவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு விட்டேன். இதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்,'' என்றார்.

# மைக்கல் பெல்ப்ஸ் அதிர்ச்சித் தோல்வி



அமெரிக்காவின் சார்லோட்டில் நடைபெற்ற அல்ட்ராஸ்விம் சர்வதேச நீச்சல் போட்டியில் சக நாட்டு வீரர் ஆரோன் பியர்சல்லிடம் தோற்றுப் போனார் அமெரிக்காவைச் சேர்ந்த நட்சத்திர வீரர் மைக்கல் பெல்ப்ஸ்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 100 மீற்றர் 'பேக் ஸ்டிரோக்' போட்டியில் 53.32 விநாடிகளில் இலக்கை எட்டி, பெல்ப்ஸை இரண்டாம் இடத்துக்குத் தள்ளினார் பியர்சல்.

53.79 விநாடிகளில் இலக்கை எட்டிய பெல்ப்ஸுக்கு வெள்ளிப் பதக்கமே கிடைத்தது.

'யாருடன் போட்டியிடுகிறேன் என்பது பிரச்சினையல்ல. ஆனால் யாரிடமும் தோல்வியுறுவதை வெறுக்கிறேன். தற்போது என்னை விட்டுச் சென்ற பதக்கம் திரும்பவும் என்னிடம் வரும்' என தோல்விக்குப் பின்னர் குறிப்பிட்டார் 23 வயதாகும் பெல்ப்ஸ்.

பெல்ப்ஸுக்கு பரமவைரியாகத் திகழ்ந்து வருபவர் பியர்சல். கடந்த ஆண்டு மே 17-ஆம் திகதி சான்டா கிளாராவில் நடந்த 200 மீற்றர் 'பேக் ஸ்டிரோக்' போட்டியில் அவரிடம் பெல்ப்ஸ் தோற்றார். ஓர் ஆண்டுக்குப் பிறகு தற்போது அவரிடமே தோல்வியுற்றுள்ளார்.

கடந்த ஓகஸ்டில் பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 8 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றி உலக சாதனை படைத்தவர் பெல்ப்ஸ். இவர், தோல்வியுற்றது உலக நீச்சல் வட்டாரத்தில் பெரும் பேச்சாகியுள்ளது.

# வீரர்களை விடுவிக்க ஐ.சி.எல்.இணக்கம்

இந்தியக் கிரிக்கெட் சபைக்கு போட்டியான கிரிக்கெட் அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் கிரிக்கெட் லீக் அமைப்பு 50 வீரர்களை தங்களது ஒப்பந்தங்களிலிருந்து விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளது. சுமார் 50 வீரர்களை முதலில் விடுவிக்க முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

இதில் நியூஸிலாந்தின் ஷேன் பொண்ட், பாகிஸ்தானின் இம்ரான் நசீர், நவேத்-உல்-ஹஸன், பங்களாதேஷின் ஹபிபுல் பஷர், தீப் தாஸ் குப்தா, அபிஷேக் ஜுன்ஜுன்வாலா மற்றும் ஹேமங் பதானி ஆகியோர் இந்த விடுவிப்புப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இது ஐ.சி.எல். கிரிக்கெட்டுக்கு ஒரு பின்னடைவல்லவா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த ஐ.சி.எல். வர்த்தகப் பிரிவுத் தலைவர் ஹிமான்ஷு மோடி, ''இது பின்னடைவு அல்ல, மாறாக லீக்கை இன்னும் சீராக மாற்ற முடிவதற்கான திட்டம் இது. வரும் ஒக்ரோபரில் 'ருவென்ரி - 20' கிரிக்கெட் நடை பெறும். மேலும் முன்னேறுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது'' என்று கூறிறார்.

இது குறித்து ஐ.சி.எல். நிர்வாகக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், ''ஐ.சி.எல். கிரிக்கெட் அமைப்பு இளம் வீரர்களை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. சில வீரர்கள் அதிகார பூர்வ கிரிக்கெட் அமைப்பிற்குச் செல்ல விரும்புகின்றனர், அவர்களுடைய கனவுகளை எங்களது ஒப்பந்த ரீதியான கட்டுப்பாடுகளை விதித்துத் தகர்க்க ஐ.சி.எல். ஒரு போதும் விரும்பவில்லை.

பல உள்நாட்டு வீரர்கள் ஐ.சி.எல். கிரிக்கெட்டில் சர்வதேச வீரர்களுடன் விளையாடும் வாய்ப்பை பெற்றனர், தொடர்ந்து ஐ.சி.எல். இளம் வீரர்களின் திறமைகளை வளர்த்தெடுக்கும் பணியை செய்யும்.

அதிகார பூர்வ கிரிக்கெட்டுக்குச் செல்லும் அந்த வீரர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். இவர்கள் பலிகடாவாக்கப்பட மாட்டார்கள் என்று நம்புகிறோம்'' என்று கூறப்பட்டுள்ளது.

# மீண்டும் சர்ச்சையில் அக்தர்



சர்ச்சைகளுக்குப் பெயர் போன பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் மீண்டும் ஒரு புதிய சர்ச்சையில் சிக்கியுள்ளார். இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பரிசீலித்து வருகிறது.

புர்பானில் நடைபெற்ற பாகிஸ்தான் அணியின் உடல் தகுதி முகாமில் பங்கேற்க முடியாத அக்தர், தனக்குக் காயம் ஏற்பட்டதால் அதில் பங்கேற்க முடியவில்லை என்று தனியார் மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொண்ட அறிக்கையைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் சமர்ப்பித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் வீரர்கள் ஒப் பந்தத்தில் இடம்பெற்றிருக்கும் இவர் கிரிக்கெட் சபை யின் மருத்துவக் குழுவிடம் முதலில் ஆலோசிக்க வேண் டும் என்பது விதிமுறை. ஆனால் அவர் தனியார் மருத்துவரிடம் சபையின் அனுமதியின்றி ஆலோசனை செய்துள்ளார்.

இந்நிலையில் மே மாதம் 21 ஆம் திகதி முதல் நடைபெறும் பயிற்சி ஆட்டங் களுக்குத் தான் தயார் என அவரே அறி வித்துள்ளார்.அவரது இந்த செயற்பாட் டினால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் இஜாஸ் பட் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.

எனவே, அவர்மீது மேலும் ஒரு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படலாம் என்று நம்பத் தகுந்த பாகிஸ்தான் கிரிக்கட் சபை தக வல்கள் தெரிவிக்கின்றன.

# வெற்றியுடன் திரும்பினார் ஷரபோவா



முன்னாள் முதல் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா காயத்திற்கு பின்னர் வெற்றியுடன் ரெனிஸ் களத்திற்கு திரும்பினார்.தோள்பட்டை காயம் காரணமாக 10 மாத காலமாக ரெனிஸ் அரங்கில் விளையாடாமல் இருந்த ஷரபோவா கடந்த 17 ஆம் திகதி போலந்தில் நடைபெற்றுவரும் வார்சோ ஓபன் போட்டியில் முதல் முறையாக களமிறங்கினார். இதில் அவர் இத்தாலியின் 68 ஆம் நிலை வீராங்கனை ததியானா கார்பன்னுடன் மோதினார். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் ஷரபோவா 61, 67, 63 என்ற செற் கணக்கில் போராடி வெற்றியீட்டினார்.

இதுவரை மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஷரபோவா தற்போது உலக தரவரிசையில் 126 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைச் சுடர்



# பெயர் மாறியது



இயக்குநராக இருந்து நாயகனாக அவதாரமெடுத்தவர் ராஜ்கிரண். ஒரு காலத்தில் தமிழ் திரையுலகில் அதிகூடிய சம்பளம் பெறுபவராகவும் இவரே இருந்தார். எனினும் சில காலத்தின் பின்னர் இவரின் செல்வாக்குச் சரிந்தது. மீளவும் பாலாவின் 'நந்தா' திரைப்படம் மூலம் குணச்சித்திர நடிகராக உள்நுழைந்தார். அதன் பின்னர் பல படங்களில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். இந்நிலையில் மீண்டும் தானே இயக்கும் ஒரு படத்தில் நாயகனாக நடிக்கவுள்ளதாக அறிவித்தார். இப் படத்துக்கு முதலில் 'மலைக் கள்ளன்' என்று பெயரிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. எனினும் சில நாள்களின் பின்னர் படத்தின் பெயர் 'சிந்தாமணி' என மாற்றப்பட்டது. இப்போது இந்தப் பெயரும் மாற்றத்துக்குள்ளாகி 'திருமங்கலத்தில் யானை' என்று புதிதாகப் பெயரிடப்பட்டுள்ளது.

# வீடு தேவை

'கந்தசாமி', 'தோரணை' ஆகிய திரைப்படங்கள் மூலம் ஒரு திருப்புமுனை ஏற்பட்டு தமிழில் முதல் நிலை நாயகியாக மாறுவேன் என்று ஸ்ரேயா சொல்லிவருகிறார். அதனால் மும்பையில் உள்ள வீட்டை காலி செய்துவிட்டு, நிரந்தரமாக சென்னையிலேயே தங்கவும் முடிவு செய்திருக்கிறார். இதனால் ஸ்ரேயாவின் வசதிக்கேற்ற வகையில் வீடு தேடும் படலம் சென்னையில் நடந்தேறிவருகின்றது. இதேவேளை "தொடர்ந்தும் பிறமொழிப் படங்களிலும் நடிப்பேன். எனினும் தமிழ் மொழியிலேயே கூடுதலாகக் கவனம் செலுத்தவுள்ளேன். அதற்காகவே தனது குடியிருப்பை சென்னைக்கு மாற்ற இருக்கிறேன்" என்றும் ஸ்ரேயா கூறி வருகிறார்.

# அடுத்தது யார்?




இயக்குநர் பாலாவின் அடுத்த படத்தில் கதாநாயகனாக ஜீவா நடிப்பது உறுதியாகிவிட்டது. 'ராம்' படத்தில் அற்புதமான நடிப்பை வெளிப்படுத்திய ஜீவாவை தன்னுடைய படத்தில் இன்னும் செழுமையாக்கிக் காட்ட பாலா முடிவு செய்துள்ளார். எனினும் பாலாவின் அடுத்த படம் 'பிதா மகன்' போல இரண்டு நாயகர்களை மையமாக வைத்து உருவாக்கப்படவுள்ளது. எனவே ஜீவாவோடு இணைந்து நடிக்கவுள்ள அடுத்த நாயகன் யார் என்பது இப்போதுள்ள கேள்வியாகும். ஜீவாவின் அண்ணனான ரமேஷ், தனுஷ் ஆகியோரின் பெயர்கள் பாலாவின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்தது யார் என்பது இன்னும் சில நாள்களில் தெரிந்துவிடும்.

# திரைவிமர்சனம்

## குங்குமப் பூவும் கொஞ்சும் புறாவும்



தமிழ் திரையுலகில் வித்தியாசமான கதையம்சங்களுடன் கூடிய திரைப்படங்களின் வருகை அதிகரித்திருப்பதை நிரூபிப்பது போல முற்றிலும் புது முகங்கள் நடித்த 'குங்குமப் பூவும் கொஞ்சும் புறாவும்' திரைப்படம் வெளிவந்துள்ளது.

ராஜாமோகன் என்பவரின் இயக்கத்தில் புதுமுகங்களான ராமகிருஷ்ணன், தனன்யா ஆகியோரின் நடிப்பில், சித்தார்த்தின் ஒளிப்பதிவில், யுவன் சங்கர்ராஜாவின் இசையில் இப்படம் உருவாகியுள்ளது.

கடலோரக் கிராமமான முட்டம் என்னும் இடத்திற்கு தன் பாட்டியோடு தனன்யா வருகிறார். யாருமற்ற அவருக்கு நாயகனின் அன்பு பாடசாலையில் கிடைக்கிறது. அதுவே பின்னர் காதலாக உருவெடுக்கிறது. எனினும் இவர்களின் காதலுக்கு எதிரியாக நாயகனின் தாய் மாறுகிறார். சூழ்நிலைகளால் நாயகனைப் பிரிந்து வேறொருவரின் மனைவியாகி இன்னொரு கிராமத்துக்குச் செல்கிறார் தனன்யா.

அங்கு ஒரு குற்றச் செயலில் சம்பந்தப்பட்டதால் தனன்யாவின் கணவர் சிறை செல்கிறார். இதனால் மீண்டும் முட்டம் பகுதிக்கே தனன்யா வருகின்றார். அங்கு மீண்டும் நாயகனைக் காண்கிறார். காதலன், கணவன் ஆகியோரில் யார் மீது அன்பு வைப்பதென்று தெரியாமல் தடுமாறுகிறார். இந்தத் தடுமாற்றத்தின் முடிவு என்ன என்பதை 'குங்குமப் புறாவும் கொஞ்சும் புறாவும்' படம் சொல்கிறது.

படம் முழுவதும் சோகமே இழையோடுவது போல திரைக்கதையை அமைத்திருக்கிறார் இயக்குநர். பாடல்கள் எல்லாமே நன்றாக வந்திருக்கின்றன. முட்டம் பகுதியை மிக அற்புதமாகப் பதிவாக்கியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் சித்தார்த். சுகமான காதல் கதையை சுமையாக்கியிருக்கிறது 'குங்குமப் பூவும் கொஞ்சும் புறாவும்'.

# புயலுக்குப் புற்றுநோய்



'பொப்' உலகில் புயலாக உருவெடுத்து உலகெங்கும் உள்ள மக்களைக் கவர்ந்தவர் மைக்கல் ஜக்சன். வேகமான நடனம், துள்ளலான பாடல், வித்தியாசமான அலங்காரம் என்பன இவரை இன்னும் பிரபலமாக்கின. அண்மைக் காலமாக பல்வேறு சர்ச்சைகளில் இவர் சிக்கியிருந்தார். இந்நிலையில் இசை உலகில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்திருந்தார். இவர் தன்னுடைய முக அமைப்பை மாற்றுவதற்காக அடிக்கடி 'பிளாஸ்ரிக் சேர்ஜரி' முறையை அதிகளவில் பயன்படுத்தியதால் இப்போது அவருக்கு தோல் புற்றுநோய் ஏற்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அவரது ரசிகர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# விவாக சோபன விஞ்ஞாபனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் வைகாசித்திங்கள் 29 ஆம் நாள் (11.06.2009) வியாழக்கிழமை சதுர்த்தி திதியும் உத்தராட நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபநன்னாளில் மு.ப. 10.45 மணி முதல் 12.15 மணி வரையுள்ள புத ஹோரையுடன் கூடிய சிம்ஹ லக்கின சுபமுகூர்த்த வேளையில், சுன்னாகம் ஸ்ரீ சொர்ணாம்பிகை சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேசப் பெருமான், சுன்னாகம் மயிலணி ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் மற்றும் சகல குலதெய்வங்களின் திருவருளினால்,

பருத்தித்துறை கோர்ட்டு வாசல் அம்மன் கோவில்
முன்னாள் பிரதம குரு சிவஸ்ரீ ஐ.இராமலிங்க
குருக்கள் தம்பதிகளின் பௌத்திரனும், சுன்னாகம்
ஸ்ரீ கதிரமலை சிவன்கோயில் பிரதம குரு
டாக்டர்.நா.சோமாஸ்கந்தக் குருக்கள் தம்பதிகளின்
தௌஹித்திரனும், ஜேர்மனி ஹம்
நகர் காஸ்யப் கோத்ரம்
சிவஸ்ரீ இராம.மகேசக்குருக்கள்
ஸ்ரீமதி அனுராதா தம்பதிகளின் ஏக புத்திரனுமாகிய
சிரஞ்ஜீவி

**சுகப்பிரத சர்மாவுக்கு**

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோவிலடி
முன்னாள் கல்லூரி அதிபர் பிரம்மஸ்ரீ
ப.சுவாமிநாதசர்மா தம்பதிகளின் பௌத்திரியும்,
சுன்னாகம் மயிலணி ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
முன்னாள் பிரதம குரு சிவஸ்ரீ
சி.சர்வேஸ்வரக்குருக்கள் தம்பதிகளின்
தௌஹித்திரியும், கனடா மிஸிஸாகா நகர்
ஸ்ரீவத்ஸ கோத்ரம்
பிரம்மஸ்ரீ சுவாமி.பஞ்சாட்சரசர்மா ஸ்ரீமதி
ஜானகி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்யவதி

**பாரதியை**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, Germany, Hamm நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நிகழவுள்ள திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக சமுகமளித்து மணமக்களை ஆசிர்வதிப்பதுடன், விருந்துபசார வைபவத்திலும் கலந்து மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமணம் நடைபெறும் இடம்: Ferdinand-Poggel Str.25, Hamm, Germany Tel:(49) 02381 162686**

**சமாவர்த்தனம்: 10.06.2009 புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ இ.மகேசக்குருக்கள்
ஸ்ரீமதி.அனுராதா தம்பதிகள்
Wilhelm Str.29, 59067 Hamm, Germany
Germany T.P.(49) 23814 88639
Canada T.P. (416) 786 3112

பிரம்மஸ்ரீ சு.பஞ்சாட்சரசர்மா
ஸ்ரீமதி. ஜானகி தம்பதிகள்
# 717-1625, Bloor Street
Mississauga, Ontario L4X 1S3 Canada,
T.P. (905) 624 0391

(இருவீட்டார் அழைப்பிதழ்)

## கணிதபாட சுயகற்றல் உபகரணம் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 24

மாணவர்களின் கணிதபாட அடைவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தால் தயாரிக்கப்பட்ட கணிதபாட சுயகற்றல் உபகரணங்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

கல்லூரியின் ஆசிரியர் வே.சண்முகலிங்கத்தால் ஆக்கப்பட்ட இடைநிலை மாணவர்களுக்கான இறுவெட்டும் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் லயன் வை.தியாகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.வி.மகேந்திரன், ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவன முகாமையாளர் எஸ்.நாகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர். (1)

**விற்பனைக்குண்டு**

வடமராட்சியில் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் அரைக்கும் ஆலை (GRAINDING MILL) இயந்திரங்கள் விற்பனைக்கு.
தொடர்பு: 0771171517

**விற்பனைக்கு**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: A.S.S.பாம்
தியேட்டர் வீதி, இணுவில்.

**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடா P.R. உடைய, 1977, அவிட்டநட்சத்திரம் 1 ஆம் பாதம், 27 பாவமுடைய 7 இல் செவ்வாய் (8புள்ளி) உடைய, 5' 7'' உயரமான மணமகனுக்கு மெல்லிய அழகான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: 0772209458, 0602218388

**திருமண சேவை**

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

**நோய் தீர்க்கும் யோகாசனங்கள்**

இந் நூல் வெளிவந்து விற்பனையாகிறது. ஆசிரியர் ஆ.பொ.மு.ஏரம்பமூர்த்தி
விலை ரூபா 250/-
இல.412, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
அனைத்து புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

**STUDY IN INDIA**

Brindavan College
affiliated to Bangalore University
B.Sc. Genetics / Biotech / Microbio / Comp. Science
B.B.M. Business Management
B.C.A. Computer Application
B.Com. Commerce + Computer
Co-ordinating office: 285 C-1/1, Stanley-Tilakaratne Mw. Nugegoda.
Tel: 0777-317043, 011-4580270

**BE A DOCTOR**

Colombo ads 077 244 24 25

**Nepal**
MBBS
Bachelor of Medicine / Bachelor of Surgery
Degree awarded by KATHMANDU UNIVERSITY
4 1/2 yr + 1 yr Internship (English Medium)
Approx. Rs. 780,000 per semester (for 8 Semester)

**Belarus** (Eastern Europe)
MD
Doctor of Medicine
Degree awarded by VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 year (English Medium)
JULY INTAKE
Course Fees: USD 3800 Per year

**Lithuania** (Schengen & E.U.)
MD
Bachelor of Medicine / Bachelor of Surgery
Degree awarded by KAUNAS UNIVERSITY OF MEDICINE
6 year (English Medium)
Course Fees. 5500euros per year

MBBS / MD Degree recognised by Medical Council in Sri Lanka, Maldives, USA, UK, WHO & worldwide.
Hotline : 077 3017883

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo- 06 Tel : 2586418
www.patheacademy.org



## 71 ஆவது பிறந்த தினமும் நீங்கா நினைவலையில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்

மலர்வு 23.08.1938
உதிர்வு 24.05.2008

கோப்பாயைப் பிறப்பிடமாகவும்
இளவாலை, கொல்லங் கலட்டி, நல்லூரை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**
**சண்முகநாயகம் சோமசுந்தரம்**
(சின்னராசு, சோமண்ணை)
(ஓய்வுபெற்ற நேர வீகித கணிப்பாளர்,
லங்கா சிமெந்து நிறுவனம்,
பாதுகாப்பு உத்தியோகத்தர், U.N.H.C.R)
திதி: பஞ்சமி (12.06.2009)

அன்பாலும், பண்பாலும் பரிவுடனே அரவணைத்து
அறிவுடைமை சீர்சிறப்பு அனைத்தும் அள்ளித்தந்து!
அவனியிலே வாழ்வாங்கு வாழ்ந்து, வழிகாட்டி - எம்
அருந்தவத்தால் நாமடைந்த ஐயனே! எங்கள் அப்பாவே!
ஆண்டவனாய் என்றும் எம்முள்ளத்தில் அமர்ந்து
ஆசீர்வதித்து வழிநடத்தி ஆண்டொன்று ஆனதின்று....

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:
639/6, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 18.11.1934
மறைவு 24.04.2009

**அமரர்**
**கதிர்காமு சின்னத்தம்பி**

உதிரத்தை உரமாக்கி உழைத்து
பாசத்தைப் பொழிந்து அறிவைப் பெருக்கி
உங்களை உருக்கி எங்களை உருவாக்கி
வாழ்வினில் எம்முடன் பாசவிளக்காய் ஒளிர்ந்தவரே!
ஒரு வார்த்தை கூறாது விண்ணுலகம் சென்றுவிட்டாய்?
ஒவ்வொன்றாய் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் ஓயாதய்யா
எம் மனதில் நாளும் உங்கள் நினைவுகள்....
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கும் பரிசில்கள்

## விடை தெரியுமா? -16

1. 2009 ஆண்டுக்கான இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் அகில இந்திய ரீதியில் வெற்றியீட்டிய கட்சி எது?
2. இங்கிலாந்துக் கிரிக்கெட் அணித் தலைவரின் பெயர் என்ன?
3. உலகிலேயே மிகச்சிறிய சஞ்சிகை/இதழ் எது?
4. கலை, நம்பிக்கை, பயன்பாடு என்பவற்றை உள்ளடக்கியதாக தோட்டங்களில் அமைக்கப்படும் உருவப் பொம்மை எவ்வாறு அழைக்கப்படும்?
5. மின்சாரத்தைப் பயன்படுத்தி தந்தி மூலம் செய்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 03.06.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## விடை தெரியுமா? - 14
சரியான விடைகள்

(1) 1890 ஏப்ரல் 29
(2) டானியல் டீஃபோ (3) சயிட் அஜ்மல்
(4)76 அடிகள் (5) செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

### பரிசுபெறுவோர்

01. ஓ.நிதாசன், தரம் - 8C, யா/இந்துக் கல்லூரி.
02. கி.சிவநிறைஞ்சனா, தரம் - 10, ஆ.தியாகராசா மகா வித்தியாலயம்.
03. க.சிறிதரன், தரம் - 6E, யா/இந்துக் கல்லூரி.
04. ஜெ.துவாரகா, தரம் - 9C, யா/இந்துக் கல்லூரி.
05. யோ.யசோதா, தரம் - 8B, வட இந்து மகளிர் கல்லூரி.
06.ஞா.கனிஸ்ரஸ், தரம் - 8E,சென்.பற்றிக்ஸ்.கல்லூரி.

# இறைவனைத் தேடிச்சென்ற கிளி



ஒரு அழகான மாமரம். அதில் கனிந்த பழங்கள் குலை குலையாகத் தொங்கின. கிளிகள் இனிமையாகப் பழங்கள் தின்றன. அதில் ஒரு மூக்குச் சிவந்த இளங் கிளி தன் அம்மாவைப் பார்த்துக் கேட்டது -

''அம்மா! இந்தப் பழங்கள் மிகவும் ருசியாக இருக்கின்றன நம் பசியைப் போக்குவதற்கு இப்பழங்கள் உதவுகின்றன. எப்போதும் இப்படி மாம்பழங்கள் கிடைத்தால் நமக்கு பசியும் போகும், பசிக்கு உணவு கிடைத்த மகிழ்ச்சியும் உண்டாகும். இந்த மாம்பழங்களை நமக்கு கொடுத்தது யார்? அவரை நான் காணவேண்டும்.'' என்றது.

அம்மாக்கிளி கூறியது - ''குழந்தைக் கிளியே! சின்ன வயதாக இருந்தாலும், எவ்வளவு அழகாக அறிய விரும்புகிறாய்! இறைவன் தான் மரம், செடி, கொடிகள் என்று அனைத்து உயிருள்ள, உயிரற்றவையும் படைத்திருக்கிறான்'' என்றது.

குழந்தைக் கிளி - ''அம்மா நான் இறைவனைப் பார்க்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் சொல் அம்மா!'' என்றது. ''இறைவனைப் பார்க்க விரும்பினால் தன்னலம் இல்லாமல் உதவி செய்ய வேண்டும். அதற்கு இறைவன் மனம் கசிந்து காட்சி தருவார்'' என்றது.

''அம்மா! நான் இறைவனைக் கண்டு மனம் உருகி நன்றி கூறிவிட்டு வருகிறேன்'' என்று அம்மாவிடம் விடைபெற்று. பச்சிளம் கிளி வானில் பறந்தது. அங்கே வயலில் ஒரு பெரியவர் உழுது கொண்டிருந்தார். திடீரென மயங்கி தரையிலே விழுந்தார். கிளி பறந்து கொண்டே பார்த்தது. விருட்டென்று தரையிறங்கியது. வயலில் இருந்த தண்ணீரை இறக்கைகளால் நனைத்து, அவர் முகத்தில் தெளித்தது. பெரியவர் மயக்கம் தெளிந்தார். தன்னருகில் கிளி இருப்பதைப் பார்த்தார். ''பச்சிளம் கிளியே! எனக்கு உணவு உண்ணாததால் களைப்பு வந்துவிட்டது. வீட்டில் இருந்து இன்னும் உணவு வரவில்லை. அதுதான் மயங்கி விழுந்துவிட்டேன்'' என்றார் பெரியவர்.

''பெரியவரே! நான் உங்கள் வீட்டில் சென்று செய்தியைக் கூறி உணவு கொண்டு வரச் சொல்கிறேன்'' என்று கூறிப் பறந்தது. பச்சிளம் கிளி பெரியவரின் மனைவியிடம் நடந்த விபரத்தைக் கூறியது. கேட்டதும் மனைவி விரைந்து உணவு எடுத்துக் கொண்டு வந்து பெரியவரின் பசியைப் போக்கினாள். *(தொடரும்)*

**இ.கபுநரன்,தரம் 9A ,யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.**


# மாணவர் தூரிகை




ம.துஷானி, தரம் -9E, யாழ்/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



அ.அலக்ஸ்சியா, தரம் - 8, சென்.அன்ரனிஸ், பாஷையூர்.



ச.வசீகரன், தரம் - 2, யா/வலந்தலை அ.மி.த.க.பாட



ஙி.தகாலநிதி, தரம் - 1, யா/மட்டுவில் அ.மி.த.க.பாட.



ஙி.ஷிஜானா, தரம் - 8E, யா/இந்து மகளிர் கல்லூரி.



ச.ஆதகால், தரம் - 4 B, O.L.R.



ச.விஷ்ணுகா, தரம் - 3 E, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



# எம் ஊர் கணித ஆசான்



ஓய்வு பெற்றுப் பல காலம் கடந்தாலும்
பலருக்கும் கசக்கும் கணிதத்தைக்
கரும்பைப் போல் இனிப்பாகக் கற்பிக்கும்
எம் ஊர் மதிப்புள்ள ஆசானே!
தள்ளாத வயதிலும் இளமைத் துடிப்புடன்
கொட்டும் பனியிலும் துல்லியமாய்க்
கணிதத்தைத் துலங்க வைக்கும்
துவளாத மனத்துடையான்
பையன்களின் பகிடி வதைக்கும்
பதிலடி கொடுத்தும்
பாங்காகப் பாடமதைப் புகட்டும்
எம் ஆசான்
மேலும் பலகாலம் பணியாற்ற
விஸ்வநாதா உம் பாதம்
பணிந்து வேண்டுகிறோம்.

**ப.ராகவி, தரம்-9C, யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.**

# நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்




# வெண்கட்டி



வெள்ளை நிறம் கொண்ட கட்டி வேறு நிறமும் கொண்ட கட்டி
கள்ளமில்லா நல்ல கட்டி கட்டளையைச் செய்யும் கட்டி
பள்ளிக்கூட வாத்தியாரின் பாசமதைப் பெற்ற கட்டி
என்றும் பண்பான தொழில் செய்யும் பரந்தமனம் கொண்ட கட்டி

சொல்லும் பொருளைச் சுவையாய்த் தான் எழுத
அல்லும் பகலும் அன்புடன் நீ ஆதரவாய்
உற்றார், நாட்டார், ஊரார் என்று
உன் இனமொடு எமக்காய் உயிர்விடும் சுற்றமல்லோ

அடியிலே அகலமாயும் நுனியிலே நுணுக்கமாயும்
வடிவிலே நீளமாயும் வண்ணமோ வட்டமாயும்
குடியிலே குணமொன்றாய் குவலயத்தில் அடிபட்டு தேய்வுக்கு
ஆழாகும் கூட்டம் நீரல்லவோ

பகலிரவாய்ச் சேவை செய்யும் பசுங்கட்டி[illegible] வாழி
பக்கமெல்லாம் தேய்த்துப் பயன்தருங் கட்டியே வாழி
துக்கமதை அறியாத சுடர்க் கட்டியே வாழி
சுந்தரத்தமிழுக்கு துணைநிற்கும் வெண்கட்டியே வாழி

**த.ரவிலால் விஸ்வநாத், தரம் -8, யா/இந்துக் கல்லூரி.**




இந்திரவர்மன் கூறியதைக் கேட்டு சந்திரவர்மனும் மணிமொழியும் அதிர்ச்சியடைந்தனர். ஆயினும் சந்திரவர்மன் நிலைமைக்கேற்ப தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

''மாயக்கல் தொலைந்து போனதை எண்ணிக் கவலைப்பட வேண்டாம். முதலில் இந்தக் குகையின் சுவரைத் தொட்டவாறு விரைவாக வெளியேற முயற்சிப்போம்'' என்று கூறிவிட்டு, குகையின் ஒரு புறச்சுவரை கைகளால் தடவியவாறே முன்னேறத் தொடங்கினான். அவனை இந்திரவர்மனும், மணிமொழியும் பின்தொடர்ந்தனர். சிறிது நேரம் சென்றதும் குகையின் இருள் மூவரின் கண்களுக்கும் பழக்கப்பட்டுப் போனது. அதனால் குகையின் உட்புறம் ஓரளவுக்கு அவர்களுக்குப் புலப்பட்டது. குகையினுள்ளே விநோதமான உருவங்கள் சிலைகளாகச் செய்து வைக்கப்பட்டிருப்பதை மூவரும் கண்டனர். அதில் மிக உயரமாயிருந்த ஒரு சிலையின் கண்களில் இருந்து ஒளி வீசிக்கொண்டிருந்தது. சிலையின்



உடலும் தங்கம் போல தகதக என ஜொலித்தது. ஆர்வமேலீட்டால் சிலையைத் தொட்டுப் பார்த்தான் இந்திரவர்மன். அவ்வளவுதான் அடுத்த நொடியில் அவனும் சிலையாக மாறத்தொடங்கினான். *(தொடரும்)*

# பொது அறிவு

01. பொற்கோயில் நகரம் என்று அழைக்கப்படுவது எது?
அமிர்தசரஸ்
02. ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
மேரிக்யூரி
03. இந்திய நாட்டின் பெரிய நகரம் எது?
கொல்கத்தா
04. பஞ்சதந்திரக் கதைகளை எழுதியவர் யார்?
விஷ்ணுசர்மா
05. சென்னைக்குத் குடிதண்ணீர் வழங்கும் ஏரி எது? புழலேரி.

[illegible], தரம் - 8C, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் இன்றித்....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அடங்கி வாழும் உயரிய நற்குணம் நங்கையருக்கோர் ஆபரணம். இல்வாழ் வில் அயலறியாச் செயற்பாடு பெண் களிடம் மிளிரல் வேண்டும். ஆண்களின் கவர்ச்சியை இச் செயற்பாடு மிகக் கவரும். ஆசைகளின் அளவு ஓர் எல்லையில் அமைந் தால் வாழ்க்கையளவில் அமைந்தால் நல்ல தோர் குடும்பம் உருவாகும். பேராசை பெருங் குழப்பத்தை உண்டாக்கும்.

ஒரு வீட்டுப் பாட்டியிடம் ஓர் இளம் குடும்பப் பெண் சென்று 'பாட்டி என் கணவர் என்னைத் துன்புறுத்துகிறார் என்ன செய்வேன்' என்று முறையிட் டாள். 'எப்பொழுது' என்று பாட்டி வினவ 'உண்ணும் பொழுது' என்றாள் அந்த இளம் பெண். 'பயப்படாதே அவரைத் திருத்த மருந்துண்டு. நான் தரும் மருந்தை வாயினுள் விழுங்காமல் வைத்திரு. உன் கணவன் உன் வழியில் அன்போடிருப்பார்' என்று அம் மருந் தைக் கொடுத்தார். அவ்வாறே அப் பெண் செய்த போது கலவரம் எதுவும் நிகழவில்லை. மகிழ்ந்த நங்கை பாட்டி யிடம் சென்று மகிழ்வைத் தெரிவித்த போது ''பெண்ணே நான் தந்தது மருந் தல்ல. அது தண்ணீர். அது வாய்க்குள் இருக் கும் போது உன் வாய் பேசாமை என்ற மௌனமே மருந்தாயிற்று. கணவன் உண் ணும் போது அருகிருந்து பரிமாறல் அரிவை யருக்கு அழகு. ஆடவருக்கு அது கவர்ச்சி என்ற உண்மையை அனுபவத்தில் அனுபவி'' என்று விளக்கிக் கூறினார்.

பெண்கள் உணவளிக்கும்போது தான் ஆசைகளை வெளியிடுவர். களைத்து விழுந்து வரும் கணவர் அதனால் சீறிக் குதிப்பர். வீடு ஒரே குழப்ப மயமாகும். நல்ல பெண்மணி இதற்கு மாறானவள். அறு சுவை உண்டி அமர்ந்து நின்று ஊட்டு வாள். கணவன் இனிதென உண்டலில் அகம் மிக மகிழ்வாள். இதே பாங்கில் புத்திரச் செல்வங்களும் வளரும். உணவு ஊட்டலில் நல்ல பெண் தெய்வமாகின்றாள். நல்ல குடும்பம் அமைவதற்கு நல்லாள் என்ற இல்லாள் இயல்பு நெறி ஆகின்றாள். ***

*(நன்றி:'வாழும்வழி' - சிவத்தமிழ்ச்செல்வி, செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி)*

## உயரும் விலை வாசியே!

*வெறுமையின்*
*வெற்றிடத்தை*
*வறுமை நிரப்பிக் கொண்டதால்*
*வாழ்வும் பூச்சியத்தை*
*ராச்சியமாக்கிக் கொண்டது.*

*செலவின் உச்சியினை*
*எட்டிப் பிடிப்பதற்கு*
*வரவின் வாசல்கள்*
*படிக்கற்களாகின்றன*

*அடுக்களைக்குள்*
*புகுந்துகொண்ட*
*விலைவாசியும்*
*அடுப்பினுள்*
*படுத்துறங்க*
*இடம்*
*தேடிக் கொண்டது.*

*வரிச்சுமை*
*போர்ச்சுமை*
*தினச் சுமையாக*
*அன்றாடப் பொருள்களும்*
*ஆனைவிலையாச்சு*
*பானைகளும்*
*வெறுமையாகிப் போச்சு.*

*செலவின் புள்ளிகள்*
*வரவுகளை வக்காலத்து வாங்கிச்*
*செல்லுபடி*
*யாகிப் போயின*
*தள்ளுபடி இல்லாமலே...*

*கண்டனங்களும்,*
*ஊர்வலங்களும்,*
*போராட்டங்களும்,*
*விலைவாசியினைத் தாண்டி*
*நகர்ந்து போகின்றன*
*சம்பள உயர்வினை வேண்டி...*

*விரைந்து செல்லும்*
*விலைவாசியே*
*விலங்குடைத்து*
*வெளியில் - வா*
*உன்னை வரவேற்கின்றோம்*
*விலைத் தளர்வுகளால்*
*உனக்கு மாலையிட்டு.....*

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்.**

# பொறுமையா? பொறாமையா? எது வேண்டும்...?

ஆறறிவுபடைத்த மனிதர்களுக்குள்ளே பல தரப்பட்ட பூக்கள் இருக்கின்றன. அவற்றில் சில பூக்கள் மற்றவர்களுக்கும் சிறந்த வாசத்தினையும்வளமான ஆக்க பூர்வத்தினையும் கொடுக்கின்றன. மாறாக சில பூக்களானது, மற்றவர்களுக்குத் துர் நாற்றத்தினையும் தொந்தரவுகளையும் கொடுக்கின்றன. இவ்வாறு மனிதர்களுக் குள்ளே சலிப்பு, சகிப்பு, கசப்பு, வெறுப்பு, சிரிப்பு, பொறுப்பு, தவிப்பு எனப் பல பூக்கள் மலர்கின்றன.

மற்றைய மனிதர்களின் உயர்வைப் பற்றி அல்லது அவனடைகின்ற முன்னேற் றத்தைப்பற்றி ஆழமாகச் சிந்திப்பவன் தன்னையும் மற்றவர்களையும் ஒப்பிட் டுப் பார்க்கும் போது, அவன், தான் எங்கே நிற்கின்றான், அதாவது அவன் மற்றவரை விட மேல் நிலையில் இருக்கின்றானா? அல்லது தாழ்ந்த நிலையில் நிற்கின்றானா? என்று அவன் பார்க்கும்போது, தான் கீழ் நிலையில் இருந்தால் தன்னிச் சையாகவே அவனுக்குள் மறைந்து கிடக்கும் சலிப்பு என்கின்ற பூ மலரத் தொடங்கிவிடும். அவ்வாறு அப்பூமலர்ந்ததும், மற்றவர்க ளின் வளர்ச்சி கண்டு பொறுக்க முடியாமை என்கின்ற பொறாமைத் தீ எரியத்தொடங் கும்; ஆனாலும் மற்றவர்கள் தாங்கள் முன்னேறுவதற்காக எவ்வாறான முயற்சி களை மேற்கொண்டார்கள்? எவ்வாறான எதிர்நீச்சல்களுக்கெல்லாம் உட்பட்டார் கள்? என்னென்ன தியாகங்களையெல்லாம் செய்தார்கள் எனச் சற்று யதார்த்த பூர்வ மாகச் சிந்திப்பவன்தான, தன்னை முன் னேற்றுவதற்குத் தன்னால் ஏற்பாடு செய் யப்பட்ட விடயங்கள் மற்றவர்களின் எத்தனிப்புக்களைவிட அளவு குறைந் தவை என்ற முடிவுக்கு வருகின்றபோது "சகிப்பு என்கின்ற பூ மலரத் தொடங்கும் என்றால் அது பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் என்றே கொள் ளல் வேண்டும்.

அது மாத்திரமல்ல, அவ்வாறான ஒரு தெளிவான முடிவுக்கு அவன் வரும்போது ''பொறுத்தார் அரசாள்வார் பொங்கினார் காடாள்வார்'' என்கின்ற பழம்பெரும் கூற் றுக்கமைய ஒரு அமைதியும் சாந்தியுமான நிலைமைக்கு அது அவனை இட்டுச் செல் கின்றது. பெரும்பாலானோர் எப்போதும் பொறாமையின் காரணமாக''பிறருக்கு உதவி செய்யப் பிறந்தவர்கள் உதவி செய் யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் ஆவது இருக்க வேண்டும்'' என்ற கூற்றுக்கு எதிர்மறையாக ஏதோவகையில் மற்றவர் களைப் பேச்சிலும் எழுத்திலும் ஏன் செய் கைகளிலும் கூடத் தாக்கிக்கொண்டே இருப்பார்கள். ஆனால், அப்படியானவர் கள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். அதாவது தாங்கள் மற்றவரை ஏதோ ஒரு வகையில் தாக்கும்போது வேறு ஒருவர் தங்களைத் தாக்குவார்கள் என்பதனையும், இறுதியில் பரம்பொருள் எல்லோரையும் தாக்குவான் என்பதையும் மறந்து விடுகின்றனர். இத னைத் தான் முன்னோர்கள் ''மெலியார்ர வலியார் தாக்கினால் வலியாரைத் தெய் வம் தாக்கும்'' என நாசூக்காகக் கூறியுள்ளார் கள். எது எவ்வாறு காணப்பட்டாலும், ஒரு மனிதனின் வாழ்வு மேல் ஓங்கி நிற் பதோ அல்லது கீழ் நோக்கிச் செல்வதோ எல்லாம் இறைவன் எழுதிய எழுத்தின் முறைப் படிதான் சகல நிலைகளிலும் காணப்படும். இதற்காக யாரையும் யாரும் பொறாமைப் படுவதிலோ அல்லது கோபப்படுவதிலோ எவ்வித நியாயமோ அல்லது யதார்த்தமோ இல்லை. இரண்டு நண்பர்கள், இருவருமே மிகவும் ஆழமாக ஒருவருக்காக மற்றவர் வாழ்ந்து வருகின்றபோது அவர்களுக்குள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பொறாமை என்கின்ற தீ எரிவதற்கு இடம் ஏற்படமாட் டாது. ஆனால் அவர்களில் ஒருவர் போலிக் காகத் தனது நட்பினை வளர்த்து வந்தால் நிச்சயமாகப் பொறாமை என்கின்ற அந்தத் தீ எரிவதனை ஒருபோதும் தடுக்கமுடியாது. பொதுவாக நாம் எப்போதும் பொறுமை என்கின்ற ஓடத்தினூடே கருணை என் கின்ற பலகையின் உதவியால் வாழ்க்கை என்கின்ற நதியைக் கடக்க முற்படுவோமா னால், நிச்சயமாக எப்போதும் மற்றவர் மேல் தன்னிச்சையாகவே அன்பும், பாசமும் உரு வாகும். மாறாக பொறாமை என்கின்ற ஓடத் தினைத் தெரிவு செய்து கோபம் என்கின்ற விசைப் பலகையினைப் பாவித்து வாழ்வு என்கின்ற கடலைக் கடக்க முயலும் போது, நிச்சயமாக அந்த வாழ்க்கை ஒருபோதும் திருப்தி கொடுக்காது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்றால் அது மிகை யாகாது.

********



ஆர்.ஜெயேந்திரா, செயற்பாட்டு முகாமையாளர் (வடபிராந்தியம்), இலங்கை வங்கி.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 62

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | | 10 | | | | |
| 11 | | 12 | | | 13 | | |
| | | 14 | | 15 | | | |
| | 16 | | | | | 17 | |
| 18 | | | 19 | | 20 | | |
| 21 | | | | | 22 | | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### மேலிருந்து கீழ்

1. விடயம்.
2. சுமத்தும்.
3. தோலில் ஏற்படும் நமைச்சல்.
4. அதிசயம்.
5. வழி செய்.
6. படிக்காதவன்.
8. இது ஒரு இசைவுச் சொல்.
10. ஒரு வகைப் பூச்சி.
12. வெளிச்ச வேளை.
15. ஒரு திண்பண்டம்/பலகாரம்.
16. இது மறுப்புச் சொல்.
17. தலையில் வளர்வது: மயிர் அல்ல.
18. பாவம் செய்தவன்.
19. இந்திரன் மனைவி/ தோழி.
20. ஒன்று சேர்.

### இடமிருந்து வலம்

1. ஒரு நட்சத்திரம்.
4. கூடுதலாக.
7. நாளுக்கு நாள் வளர்ந்து குட்டிபோடும்; பணத்துடன் தொடர்புடையது.
8. திறன்.
9. வணம்.
10. நாற்பொருள்.
11. அறுக்க உதவும்.
13. பொருந்தாத.
14. ஒரு நிறம்.
16 வீடு.
17. தங்கம்.
18. வெளுத்தது எல்லாம் இதுவல்ல.
19. கிராமிய விளையாட்டு.
21. நாளும், பொழுதும் ஏறிக் கோண்டிருப்பது;ஏழை வயிற்றில் அடிப்பது.
22. பதவுறுப்பில் ஒன்று.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங் கப்படும்.அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 62**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (03.06.2009) திகதிக்கு முன்னர் கிடைக் கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல. 62 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 07.06.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ,மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 60இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1)விகடகவி (5)பசு (7)பரி (8)மருமகன் (9)பலது (10)வறு (11)துயரம் (13)வன் (14)மண் (15)சரை (17)என் (18)தப்பு (20)தொப்பி (21)விலா (22)குறும்பு (23)கொடுமை

மேலிருந்து கீழ்
(1)விபத்து (2)கரி (3)கமலம் (4)விருது (5)பகவன் (6)குன்று (9)பரன் (12)யமன் (13)வரைபு (14)மண் (15)சப்பி (16)கல்லாமை (17)எஃகு (18)தப்பு (19)தவிடு (20)தொம்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 60 இற்கான சரியானவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ச.அபிராம்,**
*''முருகபதி'',*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.*

**2 ஆம் பரிசு**
**செல்வன் ஸ்ரீ லக்ஷன்,**
*இல:15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி,*
*நல்லூர் கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு**
**ஜெயக்குமாரன் ரஜிந்,**
*15 ஆம் கட்டை,*
*உடுப்பிட்டி.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1)திருமதி [illegible], இல:283, [illegible] வீதி, சுன்னாகம்.

(2)ஆ.பகீரதன், நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

(3)[illegible]ஸ்வாமி, இல:[illegible] ஏகாரைக்காட்டு லேன், வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.


(4)சி.பாலசுந்தரம், பிள்ளையார் கோயில் வீதி, கல்வளை, சண்டிலிப்பாய்.

(5) திருமதி செ.இரஞ்சிதமலர், 'சாருஜா', சிவன்கோயில் வீதி, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸே எதிர்பார்க்காத வெற்றி வந்தது எப்படி?

கனவு கூடக் கண்டிராத ஒரு வெற்றியை நடந்துமுடிந்த தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி ஈட்டியுள்ளது. ராஜீவ்காந்தி பிரதமராக இருந்து பெற்ற அதிகூடிய எண்ணிக்கையான 190 என்பதைத் தாண்டி, 206 இடங்களை சோனியாகாந்தி தலைமையிலான கட்சி தற்போது பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இது இந்தியாவில் கூட்டணிகளின் யுகம் எனக் கூறப்பட்டு வந்த நிலையில் அதை பொய்ப்பித்து தனிப்பெரும் சக்தியாக காங்கிரஸ் கட்சி


மன்மோகனுடன் சோனியா

வெற்றிபெற்றுள்ளது எனலாம்.

1996இற்குப் பிறகு இந்திய அரசியலில் ஒரே ஒரு தடவை 1999 இல் மட்டுமே கார்கில் வெற்றியை அடுத்து வாஜ்பாயின் பி.ஜே.பி. 180 என்ற எண்ணிக்கையை பெற்றது. முதன் முதலாக 1991இற்குப் பிறகு 200 என்ற இலக்கை தனி ஒரு கட்சி தாண்டியுள்ளது இம்முறையே.

காங்கிரஸின் வெற்றிக்கு தனி ஒரு காரணம் இல்லை. பல்வேறு காரணிகளின் சேர்க்கை கட்சியை கரை சேர்த்துள்ளது. ஆந்திரா, தமிழகம், மஹாராஷ்டிரா ஆகியவற்றில் முறையே சிரஞ்சீவி, விஜய்காந்த், பால் தக்கரேயின் மருமகன் ஆகியோர் எதிர்க்கட்சிகளின் வாக்குகளை பிரித்ததால் காங்கிரஸ் லாபடைந்துள்ளது தெளிவு. இல்லாவிடில் இம்மூன்று மாநிலங்களிலும் காங்கிரஸ் மண்கவ்வுவது நிச்சயமாக இருந்தது. சிரஞ்சீவியோ, விஜய்காந்தோ ஓர் ஆசனத்தைக் கூட பெறவில்லை. ஆனால், எதிரணியின் வாக்குகளை இவர்கள் பிரித்ததால் காங்கிரஸின் தோல்வி வெற்றியாக மாறியது.

காங்கிரஸ் வெல்ல இன்னொரு


விஜய்காந்த்

காரணம் மன்மோகன் ஆவார். இவர் தேர்தலில் போட்டியிடாமல் சோனியாவின் தாளத்துக்கு ஆடுபவர் என இருந்த நிலைமை மாறி தேர்தல் நெருங்க நெருங்க தேர்தலில் காங்கிரஸின் பிரதான துருப்புச்சீட்டாக இவர் மாறிய அதிசயம் நடந்தது. காரணம், பிரதமரை மையப்படுத்தி பி.ஜே.பி செய்த மலினமான பிரசாரமே. பி.ஜே.பியின் பிரதமர் வேட்பாளரான அத்வானி மன்மோகனை விட உறுதியானவர் என பி.ஜே.பி காட்ட முயன்றது. இதனால் அதுவரை மன்மோகன் சிங் குறித்து அக்கறை காட்டாத வாக்காளர்கள் அவரைப் பற்றி சீர்தூக்கிப் பார்க்கத் தொடங்கினர். மன்மோகன் நேர்மையானவரா, திறமையானவரா என்ற ஆராய்ச்சி முன்னிலை பெற்றது. ஊழலற்றவர் என்பதுடன் கல்விமான், புத்திஜீவி என்ற முத்திரையும் வாக்காளரைக் கவர்ந்தது. இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் நிறைவேறாவிடின் ராஜினாமா செய்வேன் என சோனியாவையே மன்மோகன் மிரட்டியது நினைவிருக்கலாம். தான் எடுத்த சரியான முடிவில் உறுதியாக இருப்பது அவரது குணாம்சமாகும். வேறு வழியின்றி இடதுசாரிகளை கைகழுவி விட்டு மன்மோகனது வழிக்கு சோனியா வந்தார். மன்மோகன், சோனியா சொற்படி நடப்பவர் என்ற குற்றச்சாட்டை காங்கிரஸ் இவ்வாறு எதிர்கொண்டது.

அணு ஒப்பந்தம் குறித்து நகர்ப்புற இந்தியர்கள் கொண்டிருந்த கருத்து இத்தேர்தலில் வெளிப்பட்டது. இடதுசாரிகள் இது விஷயத்தில் மன்மோகனை கவிழ்க்கப் பார்த்தது நகர்ப்புற மற்றும் மேல், மத்தியதர, படித்த இந்தியர்களுக்குப் பிடிக்கவில்லை. இதே தரப்பினருக்கு இவ்வாறான உறுதியான பிரதமரை இழிவாக அத்வானி விமர்சித்ததும் பிடிக்கவில்லை. பெரிய இந்திய நகரங்களான டெல்லி, மும்பை, கொல்கொத்தா, சென்னை முதலியவற்றில் காங்கிரஸ் பெற்ற வெற்றி இதை பறை சாற்றியது.

இவ்வாறு படித்த நகர்ப்புற இந்திய வாக்குகள் மன்மோகன் ரூபத்தில் வந்து சேர்ந்தது என்றால் மற்றொரு வழியால் முஸ்லிம் வாக்குகள் காங்கிரஸ் முகாமுக்குள் வந்து குவிந்தன. அந்த வழிதான் வருண்காந்தி.

முஸ்லிம்களை வெட்டுவேன் என அவர் பேசியதால் நாடு முழுவதும் முஸ்லிம்கள் திரண்டு பெரும்பாலும் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமே வாக்களித்துள்ளனர். சாதாரணமாக இந்தியாவின் 12 கோடி முஸ்லிம்களில் $2^1/_2$ கோடி பேர் வாழும் பெரும் மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் மாயாவதி, முலாயம், காங்கிரஸ் ஆகிய 3 கட்சிகளுக்கும் பங்கிட்டு வாக்களித்து வந்த முஸ்லிம்கள் இம்முறை ஒன்றுதிரண்டு கிட்டத்தட்ட முழு வாக்குகளையும் காங்கிரஸுக்கு வழங்கியது தெளிவாக புலப்படும் உண்மையாகும்.

1984இற்கு பின் இம்மாநிலத்தில் காங்கிரஸ் 10 என்ற எண்ணிக்கையை தாண்டி தற்போது முதல் முறையாக 21 இடங்களை பெற்றுள்ளது. இம்மாநிலத்தில் 4 ஆவது இடத்தில் இருந்துவந்த காங்கிரஸ் இத்தேர்தலில் கிட்டத்தட்ட முதலிடத்துக்கே வந்து சகலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இதற்குக் காரணம் வருண் மட்டுமல்ல அத்வானியும் கூட. அத்வானி பாபர் மசூதி இடிப்பின் பிரதான குற்றவாளியாவார். அவர் மீதான வழக்கு அல்ஹா பாத் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது. வாஜ்பாய் பிரதமராக போட்டி யிட்டிருந்தால். சரி ஏதோ பிழைத்துப் போகட்டும் என [illegible] செயற்பட்டிருக்க [illegible] அத்வானி பிரதமர் வேட்பாளர் என்றதும் வெறுண்டெழுந்த உத்தரப்பிரதேச முஸ்லிம்கள் கண்ணை மூடிக்கொண்டு காங்கிரஸை ஆதரித்ததே இவ்வெற்றிக்கு காரணமாகும்.

பீஹாரிலும் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் காங்கிரஸின் வாக்குகள் ஆறு சதவீதத்தினால் அதிகரிப்பைக் கண்டது. காலம் காலமாக இடதுசாரிகளை ஆதரித்து வந்த முஸ்லிம்கள் இம்முறை காங்கிரஸுக்கு வாக்களித்ததால் 32 வருடங்களில் ஒரு போதும் பெறாத தோல்வியை இடதுசாரிகள் பெற்றனர். மன்மோகனை இடதுசாரிகள் கவிழ்க்க முயன்றதால் முஸ்லிம்களும் கோபமடைந்தது இதற்கு காரணமாகும். தமிழகத்தில் கூட முஸ்லிம்கள் அதிகமுள்ள வேலூர், ராமநாதபுரம் தொகுதிகள் காங்கிரஸ் கூட்டணிக்கு அமோக வெற்றியைத் தந்தன. இவ்வாறு நாடுமுழுவதும் முஸ்லிம்கள் அத்வானி பிரதமராகக் கூடாது என்ற ஒரே நோக்கில் வாக்களித்ததும் கவனிக்கப்பட வேண்டும். எந்தப் பிசாசு பிரதமரானாலும் பரவாயில்லை அத்வானியை விடக் கூடாது என்ற ஆர்வம் தெளிவாகத் தெரிந்தது.

அத்வானியின் வயதும் மன்மோகனை தெரிவு செய்ய வாக்காளரைத் தூண்டியது எனலாம். 82 வயதான அத்வானியை விட 73 வயதான மன்மோகன் மேல் எனப் பல இளம் வாக்காளர்கள் எண்ணியிருக்கலாம். தவிர ராகுல் காந்தி இளம் தலைவர்களுக்கு இடம் கொடுங்கள் என பிரசாரம் செய்ததால் இளம் தலைமுறையில் பெரும்பகுதி காங்கிரஸை ஆதரித்ததும் குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸை ஆதரித்த மற்றொரு வகுப்பு வர்த்தக பெரும் பண முதலைகள். மன்மோகனின் திறந்த பொருளாதாரத்தால் ஈர்க்கப்பட்ட இவர்கள் இடதுசாரிகளின் நெருக்கடியுடன் ஆட்சி செய்வதில் மன்மோகன் பட்ட அவஸ்தையை கண்ணாரக் கண்டனர். எனவே, இடது சாரிகளின் ஆதரவின்றி மன்மோகன் தனித்து ஆட்சி நடத்த உதவ வேண்டும் என இவர்கள் உறுதிபூண்டு செயற்பட்டனர் என்று தெரிகிறது.

மேலும் காங்கிரஸ் வென்றால் மன்மோகனே பிரதமர் என தேர்தலுக்கு முன்பே சோனியாவும் ராகுலும் பிரசாரம் செய்தது பெரும் பலன்களை கட்சிக்கு ஈட்டித்தந்துள்ளது. 2004 தேர்தலில் பிரதமர் யார் என அறிவிக்காமலே கட்சி போட்டியிட்டது.

ராகுலை விட்டுவிட்டு மன்மோகனுக்காக காந்தி - நேரு குடும்பம் பிரசாரம் செய்தது தெளிவான வரவேற்புக்கு காரணமாகும். நேரு, இந்திராவுக்கு பின் தொடர்ந்து 10 வருடங்கள் ஆளும் பிரதமர், மன்மோகனே! ராஜீவுக்கே கிடையாத வாய்ப்பை, வாஜ்பாய் பெறமுடியாத வெற்றியை மன்மோகன் தனதாக்கியுள்ளார்.

முஸ்லிம்கள், வர்த்தகர்கள், இளம் தலைமுறையினர், படித்த மத்தியதரவர்க்கத்தினர் என பல்வேறு முனைகளில் காங்கிரஸுக்கு ஆதரவு வந்துள்ளதுதான் கட்சிக்கு வெற்றியைத் தந்தது எனலாம். இது தவிர மூன்றாவது அணி என புறப்பட்டோர் பிரதமர் பதவியை மட்டும் குறிவைத்துச் செயற்பட்டனர். வேறெந்த குறிக்கோளும் அவர்களுக்கு இல்லை. என்பதையும் வாக்காளர் புரிந்துகொண்டனர். இதனால் மூன்றாவது அணித்தலைவர்களான நாயுடு, தேவகவுடா, ஜெயலலிதா போன்றோர் தோல்வியை தழுவ நேர்ந்தது. இவர்களுடன் ஒப்பிட மன்மோகன் எந்நேரமும் பதவியைத் துறந்து செல்லத் தயார் என்ற உண்மையும் வாக்காளர்களுக்கு தெரிந்திருந்தது. பொருளாதார சுபீட்சம் என்ற மைல்கல்லை நோக்கியே இத்தேர்தலில் இந்தியர்கள் வாக்களித்துள்ளனர். இதனால் தான் பி.ஜே.பியின் ஆதரவாளர்களான படித்த இந்துப்பிராமணர் கணிசமானோரும் காங்கிரஸை ஆதரித்துள்ளனர். மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றிக்கு தனித்து முஸ்லிம் வாக்குகள் மட்டும் காரணம் அல்ல. அங்குள்ள பிராமணரும் பெருமளவு பி.ஜே.பியை விட்டுவிட்டு காங்கிரஸ் பக்கம் சாய்ந்து கொண்டனர்.

மன்மோகன்சிங் சீக்கியன் என்பதால் சீக்கிய மாநிலமான பஞ்சாபில் அவரை காங்கிரஸ் பிரசாரம் செய்ய வைத்தது. அவர் அசாமில் முன்பு வசித்தவர். இதனால் அங்கும் அவர் பிரசாரம் செய்தார். இவ்விரண்டு மாநிலங்களிலும் கட்சி கணிசமான வெற்றியை அறுவடை செய்தது. இவ்விரு மாநிலங்கள் தவிர வேறெந்த மாநிலத்திலும் மன்மோகன் பிரசாரம் செய்யவில்லை என்பது


ஜெயலலிதா

கவனிக்கத்தக்கது. தமிழகம் வந்த அவர் சுகவீனமுற்ற கலைஞரை பார்த்து சுகம் விசாரித்துவிட்டுப் போய்விட்டார்.

உத்தரப்பிரதேசத்தில் காங்கிரஸின் வரலாறு காணாத வெற்றிக்கு முலாயம் சிங் விட்ட தவறுகளும் பிரதான காரணமாக அமைந்தன. முலாயம் முதல்வராக இருந்தபோது பாபர் மசூதியை இடிக்காது தடுத்தவர் என்ற பெயர் அவருக்குண்டு. இதனால்தான் பாபர் மசூதி இடிப்பின் பின்னர் முஸ்லிம்கள் காங்கிரஸை விட்டு முலாயமை வெல்ல வைத்து வந்தனர். ஆனால், இந்தத் தேர்தலில் பாபர் மசூதி இடிப்பின்போது முதல்வராக இருந்த கல்யாண்சிங்குடன் முலாயம் கைகோத்ததால் காங்கிரஸ் பழம் நழுவி பாலில் விழுந்த


கருணாநிதி

கதையாகிறது. மத்திய பிரதேசத்திலும் காங்கிரஸ் தனது எண்ணிக்கையை 4 இல் இருந்து 12 ஆக உயர்த்தியது. ராஜஸ்தானில் மாபெரும் வெற்றியே கிடைத்தது. அதாவது, ஆசனங்கள் 4 இல் இருந்து 20 ஆக உயர்ந்தன. உத்தராகண்டில் (5), டில்லியில் (7) என சகல தொகுதிகளும் காங்கிரஸ் வசமாகின. காஷ்மீரில் கூட காங்கிரஸ் கூட்டணி சக்கைபோடு போட்டது பலருக்கும் வியப்பான விஷயமாகும். ஒரிசா, கர்நாடகா, பீஹார் ஆகியவற்றில் மட்டும் கட்சிக்குத் தலை குனிவு ஏற்பட்டது. ஒரிசாவில் முதல்வர் பட்நாயக் ஊழலற்ற நல்லாட்சி புரிவதால் தொடர்ந்து மூன்றாவது முறையாக காங்கிரஸை வீழ்த்தியுள்ளார். பீஹாரில் லல்லு காங்கிரஸுடன் கூட்டணியை முறித்ததால் அங்கு காங்கிரஸால் பெரிதாக சாதிக்க முடியாது போனது. மொத்தத்தில் காங்கிரஸே புரிந்துகொள்ளாத மன்மோகன் அலை இத்தேர்தலில் வீசி கட்சியை உச்சத்தில் கொண்டு விட்டுள்ளது என்பதே உண்மை.

- எஸ்.சுரேந்திரஜித் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி நீலாயதாட்சி சமேத காயரோகண சுவாமி ஆலயத் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
சுவாமி தேருக்கு எழுந்தருளிச் செல்வதையும் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*


## மேலான வீடு பெற்றாய் அம்மா

மண்ணில் 26 ✱ 05 ✱ 1931



விண்ணில் 19 ✱ 04 ✱ 2009

## திருமதி ஐயாத்துரை மகாலெட்சுமி

ஆலயங்கள் ஐந்தின் மணியோசை கேட்க
அருள் வாணி ஆலயத்தில் பூசை நேரம்
மேலவளாம் வாணிபத்தை நோக்கி நீயும்
மேலான வீடு பெற்றாய மேன்மைதானே!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(85536)

59, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி தநேந்திரன் பரிபூரணம் (பூரணக்கா)

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி தநேந்திரன் பரிபூரணம் 16.05.2009 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவக்கொழுந்து தநேந்திரனின் அன்பு மனைவியும் சந்திரவதனியின் ( செல்லா -லண்டன்) அன்புத் தாயாரும் சிவயோகனின் (லண்டன்) அன்பு மாமியும், விபூஷணியின் (லண்டன்) பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2009) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/1, புகையிரத கிழக்குலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (85537)
தகவல்,
து.சண்முகம்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 27 ✱ 06 ✱ 1927



உதிர்வு 03 ✱ 06 ✱ 2008

## அமரர் தம்பிப்பிள்ளை இராசரெத்தினம்

*திதி: 24.05.2009*

ஆண்டு ஒன்று ஓடியதே - நாம்
உங்களை மறவோம் ஐயா!
புவிதனில் வாழ்கையிலே - என்றும்
உங்கள் நினைவு நிலைத்திருக்கும் ஐயா!

"இராசகமலகிரி",
ஞானவைரவர் கோயிலடி,
நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை. (சி/558686)
குடும்பத்தினர்.


## நாடகப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம் மே 24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சைவ சமய நாடகப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முதலாம் இடத்தினை கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியும், இரண்டாம், மூன்றாம் இடங்களை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, அல்லாரை அ.த.க. பாடசாலை ஆகியனவும் பெற்றன.

போட்டியில் கலந்து கொண்ட பாடசாலைகளில் உசன் இராமநாதன் ம.வி, நாவற்குளி ம.வி, மிருசுவில் அ.த.க. பாடசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், வரணி ம.வி, கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ம.வி, குடமியன் அ.த.க.பாடசாலை ஆகியன முறையே நான்கு தொடக்கம் 11 வரையிலான இடங்களைப் பெற்றன.

(203 - 207)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 24

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு (சி.எச். ஏ) யின் அனுசரணையுடன் சிறுவர் மகிழ்வகத்தால் நடத்தப்பட்டு வந்த தகவல்தொடர்பாடல் தொழில் நுட்பக் கற்கைநெறியின் மூன்றாவது பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்புக் கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் கே.என். ஜீவகதாஸ், கரித்தாஸ் கியூடெக் சிறுவர் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அ.அஜந்தன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(203)


## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 05 ☆ 02 ☆ 1950



உதிர்வு 03 ☆ 06 ☆ 2008

அமரர்
## சின்னத்தம்பி சின்னராசா (சம்புராசா)

திதி: அமாவாசை (24.05.2009)

ஓராண்டு முடிந்தது!
எம்மை விட்டுப் பிரிந்து சென்று
நீர் வாழ்ந்த காலமெல்லாம்
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
அன்பால் அரவணைத்து
ஆசை மொழியூட்டி
மன்னு புகழ் கீர்த்தியுடன்
வாழ வைத்த தெய்வமே!
நீங்காத நினைவுகளாக
எங்கள் நெஞ்சோடு வாழுமையா
தூங்காது எம் கண்ணீர்
எம் உயிர் உள்ளவரை

செல்வா வீடியோ,
3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 25.05.1932

விண்ணில் 25.04.2009

## அமரர்-சின்னத்தம்பி துரை

(ஹட்டன் துரை, முன்னாள் வர்த்தகர்-டிக்கோயா)

**அன்பாலும் பண்பாலும் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு முப்பத்தொரு நாள்கள்
சென்றாலும் அகலவில்லை உங்கள் நினைவுகள்**

இன்று (24.05.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பிரிவால் துயருறும்:
இராசமணி (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குமரகோட்டம்,
கொண்டாவில். (சி/558687)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நந்திக்கடல் ஊடாக...!

பிரேமாவும் அவரது குடும்பத்தினரும் முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து நந்திக்கடல் ஊடாக இராணுவப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்தவர்கள்.



கண்ணிவெடிகளும், வெடிக்காத குண்டுகளும் நிறைந்த அக்கடல் பகுதி ஊடாக நீந்திக் கரை சேர முயன்ற பலர் மூழ்கி இறந்தனர்.

பிரேமாவின் பத்து வயது மகளும் தாயாரும் கடலில் மூழ்கி இறந்தவர்களில் சிலர்.

ஓமந்தைக்கு வந்தவேளை படையினர் அவரது கணவரை தனியாக அழைத்துச் சென்று விட்டனர். தான் முன்னாள் புலி உறுப்பினர் என்பதை அவர் ஏற்றுக்கொண்டதே இதற்குக் காரணம்.

''அவர் எங்கு இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு இப்போது என் மகன் மாத்திரமே இருக்கிறார்'' - என்கிறார் பிரேமா.

மெனிக்பாம் முகாமை வந்து அடைந்து 24 மணித்தியாலங்களுக்குப் பின்னரும் பிரேமாவுக்கும் அவரது 7 வயது மகனுக்கும் உணவோ வேறு எந்த வசதிகளோ வழங்கப்படவில்லை.

வெறுமனே தங்குவதற்கு கூடாரம் மாத்திரமே வழங்கப்பட்டது.



நுளம்புகள், கொசுக்கள் தொல்லை காரணமாக அந்த 7 வயதுச் சிறுவனால் நிம்மதியாக உறங்க முடியவில்லை.

பிரேமா தனது பிள்ளைகளின் நீரில் நனைந்த படங்களையும் பாடசாலை ஆவணங்களையும் நிலத்தில் விரித்து வைத்துவிட்டு கதறி அழுகிறார்.

''எனது மகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. அவர் இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கவேண்டும்'' என்கிறார் வவநாதன்.

அவரது மகனான சிறுவன் ஒருவன் சகோதரியின் படத்தை உற்றுப் பார்த்தப்படி அதிர்ச்சியால் உறைந்து போய்க் காணப்படுகின்றான்.

''எங்கும் மனித உடல்கள் காணப்பட்டன. என்னால் அதை விவரிக்க முடியாது'' என்கிறார் வவநாதன்.

''நாங்கள் தொடர்ந்து ஒரு மாத காலமாக பதுங்கு குழிகளிலேயே வாழ்ந்தோம். ஒருநாள் எனக்கு அருகில் உள்ள பதுங்கு குழி வெடித்துச் சிதறியது. மனித உடல் பாகங்கள் எங்கும் பறந்தன. சில எங்கள் பதுங்கு குழிக்குள்ளும் வந்து விழுந்தன. நாங்கள் அச்சமடைந்தோம்'' என அவர் தெரிவித்தார்.

வவநாதனின் (59) குடும்பத்தவர்கள் சிலர் ஷெல் வீச்சில் கொல்லப்பட்டனர். ஷெல் மற்றும் துப்பாக்கி ரவைகளிலிருந்து தப்புவதற்காக நிலத்தோடு ஊர்ந்து நந்திக்கடல் ஊடாக வந்து சேர்ந்ததாகவும் வவநாதன் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்ததும் அவர்களுக்கு குடிநீரும் பிஸ்கட்டுகளும் குளுக்கோஸும் வழங்கப்பட்டன. பின்னர் அவர்கள் உறவினர்களுடன் சேர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு தாங்கள் பலர் மூன்று கோப்பைகளில் ஒன்றாக உணவு உண்ட அவலத்தை அவர் விவரித்தார்.

''நாங்கள் பெரிய கல் வீட்டில் வாழ்ந்தவர்கள். எவ்வளவு தென்னை மரங்கள்; நாங்கள் அரிசியைக் கூட உற்பத்திச் செய்தோம். எல்லாவற்றையும் விட்டு விட்டு வரவேண்டியதாகி விட்டது. பேரப்பிள்ளைகளுக்காகவே அவ்வாறு செய்தோம்'' எனவும் அவர் தெரிவித்தார்.

''நலன்புரி முகாமுக்கு வந்து சேரும் வேளை அங்கு எமக்கு வழங்கப்பட்ட உணவு போதுமானதாக இருக்கவில்லை. சுத்தமானதாகவும் இருக்கவில்லை. சிலவேளை மாலை 5 மணிக்கு மதிய உணவு கிடைத்தது. இரவு 1 மணிக்கு இரவு உணவு கிடைத்தது'' என தெரிவிக்கிறார். மோதல் நடைபெறும் பகுதியில் இருந்து தப்பி வந்து மனிக்முகாமில் வாழும் கலா.

''எப்போதாவது உதவிகள் வழங்கப்படுகின்றன என்றாலும் அவை எமது கூடாரத்துக்கு வந்து சேரும்போது முடிந்துவிடுகின்றன. ஆரம்பத்தில் நாங்கள் வந்தவேளை இராணுவத்தினர் கொடுத்த பொருள்கள் எதுவும் முழுமையாக கிடைக்கவில்லை'' என அவர் தெரிவிக்கிறார்.

''இதுவரை உடைகள் எதுவும் வழங்கப்படவில்லை. கிழிந்துப்போன அழுக்கான உடைகளுடனேயே வாழுகின்றோம். மருத்துவரை பார்ப்பது என்றால் கூட நீண்ட வரிசையில் நிற்க வேண்டியிருக்கிறது. இந்த முகாமில் எல்லாமே வரிசையில் நின்றால்தான் கிடைக்கும்'' என்றும் அவர் சொன்னார்.

அசுத்தமான ஆற்றில் குளிப்பதால் தனது முகத்தில் தழும்புகள் தோன்றியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதே போன்ற கருத்தை 76 வயது நந்தினி என்ற மூதாட்டியும் தெரிவிக்கிறார்.

''என்னிடம் எதுவுமில்லை, உணவு உண்பதற்கு கோப்பைகள் கூட இல்லை. எல்லாவற்றுக்கும் நான் மற்றையவர்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது'' என்கிறார் அந்த மூதாட்டி.

''எனக்கு தேநீர் குடிக்க ஆசை. ஆனால், தேயிலை, சீனி வாங்க காசில்லை. இதனால் ஒரு தேநீர் தாருங்கள் என இங்குள்ளவர்களிடம் கெஞ்சுகிறேன், பிச்சை எடுக்கிறேன்'' என்கிறார் அவர்.



தனக்கு நீண்ட வரிசையில் நிற்பது கஷ்டம் என்று தெரிவித்த அவர் உணவுக்காக பல மணி நேரம் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது என்கிறார்.

இந்த மூதாட்டி 'கட்ராக்ட்' நோயால் பாதிக்கப்பட்டவர் என்பது பரிதாபகரமானது.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான புதிய வெற்றியில் திளைத்து இருக்கும் அதேவேளை மோதல் நடைபெற்ற பகுதிகளுக்கு செல்வதற்கு தடையற்ற அனுமதியை வழங்குமாறு ஐக்கிய நாடுகளும் ஏனைய அமைப்புகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

காயம் அடைந்தவர்களுக்கு அவசியமான உதவியை அளிப்பதற்கும் பிளவுபட்டுள்ள தேசத்தில் மறுபடியும் நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்கும் இது தேவை என்கின்றன.

யுத்தம் நடைபெற்ற பகுதிகள் பல மாதங்களாகவே நிவாரணப் பணியாளர்களுக்கு தடை செய்யப்பட்ட பகுதிகளாக விளங்குகின்றன.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு மாத்திரம் அவ்வப்போது அங்கு சென்று வந்தது. கடந்த சில மாதங்களாக இராணுவ நடவடிக்கை தீவிரமடைந்த சூழ்நிலையில் சாட்சிகளற்ற யுத்தமே அங்கு நடைபெற்று வந்தது. பத்திரிகையாளர்கள், சுயாதீன கண்காணிப்பாளர்கள், மனிதாபிமான உதவியாளர்கள் என அனைவருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

அரசாங்கம் யுத்தத்தில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்த பின்னரும் அப்பகுதிகளுக்கு செல்வதற்கு அனுமதி இல்லை. இதன் காரணமாக அங்கு சிக்குண்டுள்ள பொதுமக்கள் நிலைகுறித்து கவலை வெளியிடப்பட்டுள்ளது. அவர்களில் பலர் படுகாயமடைந்து வெளியேறுவதற்கு இயலாத நிலையில் உள்ளனர்.

''இதன் மூலம் நீங்கள் ஒரேயொரு முடிவுக்குத்தான் வரமுடியும்'' - என சுட்டிக்காட்டும் மாற்றுக்கொள்கை நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து ''அங்கு என்ன நடந்தது? என்ன நடைபெறுகின்றது? என்பதை உலகம் பார்ப்பதை அரசாங்கம் விரும்பவில்லை'' எனத் தெரிவிக்கின்றார்.

மேலும், ''அரசாங்கம் மனிதாபிமானப் பணியாளர்களையும் சிவில் அமைப்புகளையும் துரோகிகள் என்ற அடிப்படையில் நோக்குவதை நிறுத்த வேண்டும். இவ்வாறு நோக்குவது மேலும் சந்தேகத்தையும், இனப் பிளவையும் உண்டுபண்ணும்'' என்கிறார்.

பொதுமக்கள் பதிவு செய்யப்படும் இடம், சோதனை இடப்படும் இடம், முகாம்கள் மற்றும் பொதுமக்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடங்கள் ஆகியவற்றில் சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிக்குமாறு சர்வதேச சமூகம் உடனடியாக வேண்டுகோள் விடுக்கவேண்டும் என மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

தற்போது நலன்புரி முகாம்களுக்கும் அனுமதி

**ஏ. ஆர்**

வழங்கப்படவில்லை என செஞ்சிலுவை சர்வதேசக் குழுபோன்ற அமைப்புகள் தெரிவிக்கின்றன. கடந்த ஒருவாரமாக வவுனியா மெனிக் முகாமுக்கு உதவிகளை வழங்குவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் ஜெனீவா பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

''நாங்கள் இந்த முகாம்களுக்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுவது குறித்து கவலை அடைத்துள்ளோம். ஏனெனில், மோதல் நடைபெற்ற பகுதிகளில் இருந்து வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த முகாம்களுக்கு சமீபத்தில் மாற்றப்பட்டுள்ளனர். அவர் களுக்கு உடனடி உதவி தேவை'' - என்கிறார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சுற்றாடல் தினத்தை ஒட்டி பசுமைப் பணியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே 24

சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சு உலக சுற்றாடல் தினத்தை ஒட்டி (ஜூன் 5) நாடளாவிய ரீதியில் பசுமை வேலைகளில் ஈடுபடுவோரை இனங் கண்டு கௌரவித்து பரிசில்களை வழங் கவுள்ளது.

ஆரோக்கியமான சுற்றாடலை 'பரா மரிப்புச் செய்யும்' வாயிலாக சுற்றாடலுடன் நட்புறவான வேலைகளை உருவாக்குவ தில் ஈடுபடுவோரே கௌரவிக்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வளிதர முகாமைத்துவம், இயற்கை வள முகாமைத்துவம், காலநிலை மாற்றம், கரையோரவள முகாமைத்துவம், காணி வள முகாமைத்துவம், நீர்வள முகாமைத்து வம், நகர அபிவிருத்தி, கைத்தொழில் அபி விருத்தி, கல்வி மற்றும் விழிப் பூட்டல் உரு வாக்கம் ஆகிய விடயங்களில் சுற்றாட லுடன் நட்புறவான தொழில்நுட்பங்கள் அல்லது நடவடிக்கைகளை பூர்வாங்கம் செய்தல் மற்றும் நிறைவேற்றல் மேம் படுத்தலுடன் தொடர்புடைய தனிநபர், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் விண் ணப்பங்பளை சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பத்தில் காணப்படும் சுற் றாடலியலில் முக்கியத்துவம் மற்றும் நன் மையில் வெளிப்பாட்டின் அளவு

* சமூகத்தில் ஏற்பட்ட குறிப்பிட்ட நன் மையின் விஸ்தீரணம் வளம் அழிவடை தலைக் குறைத்தல்
* சுற்றாடல் பிரச்சினைகளில் முக்கிய மாக இலங்கையில் குறிப்பிடலில் தாக்கம்
* வாழ்வின் தரத்தை மேம்படுத் தலில் தாக்கம்
* மனித சுகாதாரத்தில் ஒட்டு மொத்த மான அனுகூலமான தாக்கம்
* உள்ளூராட்சி மட்டத்தில் எடுக்கப் பட்ட பூர்வாங்கம் நடவடிக்கைகளும் வெற் றிகரமாக மேற்கொள்ளப்பட்டமையும்
* பூர்வாங்க அல்லது நடவடிக்கை யின் அபிவிருத்தி
* இயற்கை வளத்தின் நுகர்வு மற்றும் உற்பத்தி பொறுப்பில் சமூகப் பெறுமதி மற்றும் மனோநிலை மேம்படுத்தலை முன் னெடுப்பதில் பங்களிப்பு
* ஆரோக்கியமான சுற்றாடலை பராம ரிப்பது தொடர்பில் விண்ணப்ப தாரியின் ஒட்டுமொத்த முன்னேற்ற நடவடிக்கை ஆகிய நடைமுறைகளின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

விண்ணப்பங்களை, செயலாளர் சுற் றாடல் மற்றும் இயற்கைவள அமைச்சு, 82, சம்பத்பாய, ரஜமல்வத்தை வீதி, பத்தர முல்ல என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு அமைச்சின் செயலாளர் எம்.ஏ.ஆர்.டி. ஜெயதிலக சகல திணைக்களத் தலைவர் களுக்கும் அறிவித்துள்ளார். (1-207)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

சுழிபுரம், மே 24

ஆறுமுகம் அற்புதமலர் அறக்கட் டளைப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தி யாலயத்தில் அறக்கட்டளைத் தலைவர் த.துரைலிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் 2008ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந் தோருக்கும், 2007ஆம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்களுக்கும் பரிசில் கள் வழங்கப்படவுள்ளன. (204-28)

## குருநகரில் இன்று கண் பரிசோதனை

வண்ணை, மே 24

குருநகர், றெக்கிளமேஷன் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் ஜே/69 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டோருக்கு இன்று ஞாயிற் றுக்கிழமை இலவசமாக கண்கள் பரிசோ தித்து கண்ணாடிகள் வழங்கப்படும்.

முற்பகல் 9.30 மணி தொடக்கம் குரு நகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் மேற் படி நிகழ்வில் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-160)

# தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்காக எம்.பிக்கள் இருவர் 11 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 24

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களின் இவ்வருடத்திற்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் முதலாவது பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத் தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபி விருத்தித் திட்டங்களுக்கென நாடாளு மன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் 11லட்சத்து 35ஆயிரம் ரூபா வினை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் - மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையம், மாசேரி கிழக்கு சிவகுருநாதர் ஒழுங்கை ஆகியவற் றுக்கு மின் விநியோகத்திற்கென தலா ஒரு லட்சம் வீதமும் வரணி வடக்கு கௌரிபா லன் சைவப்பிரகாச முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் கச்சாய் வினோபா பாலர் பகல் பராமரிப்பு நிலைய கட்டட புனரமைப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும்

வரணி கந்தப்பெருமாள் சனசமூக நிலைய கட்டட மீள்நிர்மாணத்திற்கென ஒரு லட்சம் ரூபாவும் வரணி இடைக் குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தள பாடம் வழங்கவென 50 ஆயிரம் ரூபாவும்

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத் திற்கு கணனி இயந்திரம் கொள்வனவு செய்யவென 60 ஆயிரம் ரூபாவும் ஒதுக் கீடு செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் - தவசிகுளம் மகளிர் அபி விருத்திச் சங்கத்திற்கு தையல் இயந்திரங் கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும்

மீசாலை வடக்கு பூதவராயர் ஆலய திருப்பணி சபைக் கட்டட புனர் நிர்மாணப் பணிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்

தச்சன்தோப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்

கைதடி சரஸ்வதி சனசமூக நிலை யத்திற்கு குடிதண்ணீர் தொட்டி புனர் நிர் மாணிக்கவென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கைதடி - ஆவரங்கால் வீதியில் மதகு (PARAPET WALL) திருத்தத்திற்கென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக் கீடு செய்துள்ளார்.

## கூட்டுறவுநகர் திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 24

கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிறிய கூட்டுறவுநகர் திறப்புவிழா நாளை திங் கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல் லியடி பஸ்நிலையம் முன்பாக நடைபெற வுள்ளது.

சங்கத் தலைவர் த.சிதம்பரப் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழா வில், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பிரதம விருந்தினராகவும், நெல்லியடி, மக்கள் வங்கி முகாமையாளர் இரா.சிவஞான சுந்தரம்பிள்ளை, இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.கணப திப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாகவும் கலந்துகொள்வர்.

(204)

# கள்ளை போத்தலில் அடைக்கும் பணி தென்மராட்சி சங்கத்தினால் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 24

பணங்கள்ளு சீசன் ஆரம்பமானதையடுத்து சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கத்தினர் போத்தலில்கள் அடைக்கும் பணியினை ஆரம்பித்துள்ளனர்.

25ஆயிரம் போத்தல்களில் கள் அடைப் பதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பனை வெல்லம் உற்பத்தி செய் வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட் டுள்ளதாகவும், இதற்கென குறிப்பிட்ட அங் கத்தவர்கள் மூலம் பதநீர் உற்பத்தி செய்யப் பட்டு பனை வெல்லம் தயாரிக்கவுள்ள தாகவும் சங்கத்தினர் தெரிவித்தனர். (1-207)

## ஐங்கரன் திருமணசேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் U.K Citizen 42,37,34,30 வயது. கனடா Citizen 35,33 வயது. ஜேர்மன் Citizen 43,35 வயது, கொலண்ட் Citizen 36வயது, பிரான்ஸ் Citizen 39,32 வயது ஆகிய மண மகன்மார் உள்ளனர். 24 மணிநேர தொலைபேசி வசதி யுண்டு. பதிவுக் கட்டணம் இல்லை

தொலைபேசி : 00447535384166 ,00447508295863

FAX : 00442086810701, 00442086720673

## வேலை ஆள்கள் தேவை

O/L, A/L படித்த , வடமராட்சியில் பணியாற்றக் கூடிய வேலை ஆள்கள் (ஆண்கள்) தேவை.

தொடர்பு விள.இல -3903

மே/பா . உதயன்

## மணப்பெண்கள் தேவை

புங்குடுதீவு கௌரவ குடும்பம் 29 வயது, பரணி நட்சத்திரம் Msc Computer Science, Uk - PR மாப்பிள்ளைக்கு பெண் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை.

இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile Number 6099
T.P.: 2523127, 2520619

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 29 வயது, ஆயிலிய நட்சத்திரம், Msc - UK, Engineer, uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 4இல் செவ்வாய் + ராகு உள்ளது.

இது ஒரு திருமணசேவை (www.thaalee.com)
Profile Number 6028
T.P.: 2523127, 2520619

நல்லூர் இந்து கௌரவ குடும்பம் 35 வயது, பரணி நட்சத்திரம், Trading Manager ஆக இருக்கும் uk citizen மாப் பிள்ளைக்கு பெண் தேவை. 7 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்று கிரகபாவம் 72.

இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile Number 5787
T.P.: 2523127, 2520619

## 10 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



அமரர்

### இராஜகோபால் காங்கேசன்

(A/L-99 வர்த்தகப்பிரிவு மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி)

புன்னகைக்கு இதமாக: 04.01.1981

புற்றுநோய்க்கு விடையாக: 24.05.1999

மெல்ல தலை நிமிர்த்தி ஊன்றி நடை பழகி
மழலை இசைபேசி துள்ளி நீ விளையாடி
கலைகள் பல பயின்று கல்வியிலே மிளிர்கின்ற
கலங்கரை விளக்கே! எம் செல்லக் கங்கு!
இடைவழியில் எமைவிட்டு ஐயிரண்டு ஆண்டுகளாயி
எவ்வழியில் நீ சென்றாய் - இங்கே நாம்
இமைகள் மூடாது விழிகள் வழி மீது
நீ வருவாய்! வந்து மடிகளில் மீண்டும் தவழ்வாய்

*29, சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*

குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

தாவடிப் பிள்ளையார் கோயில் அரு கில் சிறிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 2537

(85544)

## திருமண சேவை

மணமக்களே! www.thaalee.com என் கிற Website இல் பல்லாயிரக் கணக்கான மண மக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாத கங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களா கவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619. Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15.

## தவறிவிட்டது

பலாலி, வசாவிளான் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி சில்வின் வேதநாயகம் என்பவரது தேசிய அடையாள அட்டை (436810296V) 18.05.2009 அன்று யாழ்ப்பாணத்திற்கும் ஆனைப் பந்திக்கும் இடையில் மினிபஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப் படைக்கவும்.

*54, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.*

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்லத்துரை

*(இளைப்பாறிய நடத்துநர், இ.போ.ச.)*

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை கடந்த 12.05.2009 அன்று விசுவமடுவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - பொன் னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் திலகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் சுப்பிரமணியம், காலஞ் சென்ற இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினம் (உரிமையாளர் - றியோ கிறீம் கவுஸ்) மற்றும் சண்முக நாதன், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, பாலசிங்கம் மற்றும் துரைச்சாமி (றியோ கபே) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ராகினி, சாரதா, ரவீந்திரன், ரவிச்சந்திரன், சசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீமுருகன், நடராசா, வாசுகி, மாலினி, இராச மலர் ஆகியோரின் அன்பு மாமனும் மதுரன், வாகீசன், றஜிதா, ரதன், கிரிசாந், ராதா, பிரசாந், விதுசன், ஜசிந்தா, மதுமிதா, வானிலா ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் விசுவமடுவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாழ்ப்பாணம்.* (85547)

தகவல்:
குடும்பத்தினர்.

நீரிழிவு நோயை கட்டுப்படுத்தவும் நீரிழிவால் ஏற்படும் உபாதைகளிலிருந்து பாதுகாக்கவும்!

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka

DIABsol

டயப்பஸோல்



குருதி குளுக்கோஸினளவை கட்டுப்படுத்துகிறது.

முக்கிய உறுப்புகளை பாதுகாக்கிறது.

நிர்ப்பீடணத்தொகுதியை வலிமையாக்கிறது.

ஏனைய மருந்துகளுடன் பாவிக்கலாம்.

யாழ்.நகர பாமசிகளில் பெறுக்கொள்ள முடியும்

தொலைபேசி இல. 021 222 2567




அனுமதி இலக்கம்: AY/MF/199/Cap/09

Bio Extracts Ads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழகத் தலைமைகளின் போக்கு

கொடூரப் போரின் உச்சவேதனைகளால் வெந்து துடித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழினத்துக்கு அயலில் 'தொப்புள் கொடி' உறவுகளின் அரசியல் போக்குக் கண்டு அழுவதா, சிரிப்பதா என்ற இரண்டுங்கெட்டான் நிலை.

யுத்தத்தில் சீரழிந்த ஈழத் தமிழர்களுக்காக எதுவும் செய்து விடாமல் 'காட்டிக் கொடுத்த' தமிழகத் தலைவர்கள், இன்று- சொற்பகாலத்திற்குள்ளேயே- தங்களுக்குக் கூடத் தாங்களே எதுவும் செய்ய இயலாதவர்களாக புதுடில்லியிடம் கைகட்டி நிற்கும் பரிதாபம் கண்டு பச்சாதாபப்படுவதைத் தவிர எமக்கு வேறு மார்க்கமில்லை.

நேற்று முன்தினம் வரையான ஐந்து ஆண்டு கால இந்திய மத்திய அரசின் ஆட்சியில் முக்கிய பங்கு வகித்தது தமிழகத்தின் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் இந்த ஐந்து ஆண்டு காலத்தில்தான் ஈழத் தமிழர்கள் மிகமோசமாக அடக்கி, ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுவதற்கு இந்திய மத்திய அரசு மறைமுகமாகப் பெருமளவில் துணைபோனது என்பது உலகறிந்த இரகசியம். அதைத் தடுக்கத் தவறி- தடுக்க இயலாமல்- அப்பெருங்குற்றத்தில் பங்காளியானது தி.மு.கவும் அதன் தலைமையும் என்பது ஈழத்தமிழரின் மனத்தாங்கல்.

அப்படித் துணை போயும் கூட தி.மு.க. தனக்குத் தன்னும் பயன்தரக் கூடிய- உருப்படியான- விடயங்கள் எதையாவது சாதித்ததா என்று பார்த்தால் தமிழகத்தில் தனது ஆட்சியைத் தக்க வைத்ததைத் தவிர அது வேறு எதையும் சாதிக்கவில்லை என்பதுதான் உண்மை.

யுத்தத்தில் சிக்குண்டு அவலப்பட்ட ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க மறுத்து, அவர்களுக்கு எதிராக சதி முயற்சியோடு செயற்பட்ட புதுடில்லி அரசுத் தலைமைக்குக் கண்ணை மூடிக் கொண்டு முண்டு கொடுத்த பெருந்தவறின் பெறுபேற்றை அனுபவிக்கும் வாய்ப்பு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் அவரது தி.மு.கவுக்கும் விரைவிலேயே கிட்டியிருக்கின்றது.

ஈழத் தமிழர்களின் பேரிழப்புக்களை முன்னிறுத்தி, இந்திய மத்திய அரசை அவ்விடயத்தில் ஒழுங்காகச் செயற்பட வைக்கத் தவறிய தி.மு.க. தலைமை, அவ்விடயத்தைப் புறந்தள்ளி விட்டு, தனது அரசியல் ஆதாயத்துக்காக, இந்தியாவின் மத்திய காங்கிரஸ் அரசைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியது. தட்டிக் கேட்க வேண்டிய விடயத்தில் அப்படிக் கேட்கத் தவறிய தி.மு.கவை, இப்போது தனது தேர்தல் வெற்றி உறுதியானதும் தூக்கி மூலையில் கடாசி விட்டது காங்கிரஸ் கட்சி.

இந்திய மத்திய அரசின் அமைச்சுகள் ஒதுக்கீட்டில் தான் போடும் பிச்சையைப் பவ்வியமாகப் பெற்றுக் கொண்டு அடங்கிப் போகுமாறு கலைஞருக்கு புதுடில்லியில் நல்ல சூடு கொடுத்து அனுப்பியிருக்கின்றார் சோனியா காந்தி.

இந்தக் கசப்பு மருந்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிறார் கலைஞர். வால் பிடிக்கும் உதிரிக் கட்சிகளின் உதவியுடன் தனது மத்திய அரசு உறுதியாக இருப்பதாக காங்கிரஸ் தலைவி எண்ணுவதால் தி.மு.கவை உதாசீனப்படுத்தி உதைத்துத்தள்ளி விட்டார் அவர். ஆனால் கலைஞராலோ எதுவும் செய்ய முடியாத நிலை. சீறிக் கொண்டு காங்கிரஸ் உறவைத் துண்டித்து விட்டால் தமிழகத்தில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் 35 பேரின் தயவில் ஆளும் தமது சிறுபான்மை ('மைனாரிட்டி') அரசு கவிழ்ந்து விடும் ஆபத்து. அதனால் இந்திய மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு என்ற- 'விழுந்தும் மீசையில் மண்படவில்லையே!' என்பது போன்ற- நிலைமையை அனுசரிக்க வேண்டிய விரக்தி நிலை கலைஞர் தரப்புக்கு.

ஈழத்தமிழர்களைக் கைவிட்டு, காங்கிரசுக்கு முண்டு கொடுத்த பாவத்திற்கு நல்ல படிப்பினைகள் இன்னும் பல அவருக்குக் காத்திருக்கின்றன.

இதேசமயம், ஈழத் தமிழர், பிரச்சினையை முன்னிறுத்தி, தமிழக மக்களின் வாக்குகளைச் சுருட்ட முயன்ற 'புரட்சித் தலைவி' ஜெயலலிதாவோ அதற்காகக் கடைசி நேரத்தில் ''தமிழீழமே ஈழத் தமிழர்களுக்கு ஒரே தீர்வு. அதைப் பெற்றுக் கொடுத்தே தீருவேன்!'' என்று சூளுரைத்து 'பல்டி' அடித்தார்.

தேர்தல் முடிந்ததும் இப்போது ஈழம் அமைக்கும் தனது உறுதிப்பாட்டைக் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசிவிட்டு ஈழத்தமிழர்களின் மறுவாழ்வு, அவர்களுக்கான கட்டுமானப் பணி, அபிவிருத்தி என்றெல்லாம் பேசுகின்றார் அவர்.

தமிழக இந்திய அரசியல் விடயங்களில் மட்டுமல்ல, ஈழத் தமிழர் விவகாரத்தை ஒட்டிய நிலைப்பாட்டிலும் கூடத் தாங்கள் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தாம் என்பதை தமிழகத்தின் பிரபல அரசியல் தலைவர்கள் பலரும் நிரூபித்து நிற்கிறார்கள் என்பதே யதார்த்தமாகும்.

# ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் விவாதிக்கப்படுவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை வரவேற்பு

நியூயோர்க், மே 24

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையினால் நாளை மறுதினம் 26 ஆம் திகதி இலங்கை விவகாரம் குறித்து ஆராயத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையை சர்வதேச மன்னிப்புச் சபை வரவேற்றுள்ளது.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பாதுகாப்பற்ற முறையில் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில் இலங்கை அரசாங்கம் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை விரைவாக வழங்குவதற்கு மனித உரிமைகள் சபை அழுத்தம் கொடுக்க வேண்டும் என மன்னிப்பு சபை யின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் சாம் சாரிபி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய தொண்டுப் பணியாளர்களையும் அனுமதிக்க அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இந்தக் கூட்டம் இலங்கையில் நீண்ட நாள்களாக அரசாங்கத்தாலும் சிறு ஆயுதக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களையும் அடக்கு முறைகளையும் சர்வதேசத்தின் முன்னால் அரகேற்றுவதற்கான சிறந்த வாய்ப்பு என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே மூடி மறைக்கப்பட்ட நிகழ்கால அனர்த்தங்கள் தொடர்பிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்தும் இதன் போது ஆராயப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சிறுபான்மை மக்கள் தமது பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் பின்பற்றுவதில் இருந்து தடுக்கப்பட்டு அதிகரித்த மனித உரிமை மீறல்களுக்கு ஆளாக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை யுத்தத்தை வெற்றி கொண்டதாக அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பிலான போர்க் குற்றங்கள் குறித்து இதன் போது ஆராயப்பட்டு அதில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை மேற்கொள்ள வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. (50)

# பத்மநாதனின் பூதவுடலுக்கு கனகரட்ணம் எம்.பி.அஞ்சலி

கொழும்பு, மே 24

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரட்ணம் நேற்று முற்பகல் காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதனின் பூதவுடலுக்கு தனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரட்ணம் ஓமந்தை நலன்புரி முகாமில் தஞ்சமடைந்திருந்த வேளை, குற்றப் புலனாய்வுத்துறையினரால் விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதனின் பூதவு டலுக்கு அஞ்சலி செலுத்தவென பொரளை ஜயரட்ன மலர்ச்சாலைக்கு சிவில் உடையினர் வாகனமொன்றில் இவரை அழைத்து வந்திருந்தனர் எனவும் அஞ்சலி செலுத்திய பின்னர் சுமார் 15 நிமிடங்கள் வரை அங்கு தங்கி யிருக்க அனுமதி வழங்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். தமது கட்சித் தலைவரான இரா. சம்பந்தனுடன் சில நிமிடங்கள் அவர் உரையாடியதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதனின் பூதவுடலுக்கு இது வரை பிரதி அமைச்சர்களான எம்.எஸ்.செல்லச்சாமி, மையோன் முஸ்தபா உட்பட பலரும் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

பத்மநாதனின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை தம்பிலுவிலில் நடைபெறவுள்ளது. (50)

# நாசிகளின் இனவதைக் கூடங்கள் போன்றே இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்கள் உள்ளன

## அமெரிக்கப் பேராசிரியர் போய்ல் குற்றச்சாட்டு

நியூயோர்க், மே 24

ஏறத்தாழ மூன்று இலட்சம் தமிழ் மக்களை நாசிகளின் இனவதை முகாம்கள் போன்ற முகாம்களில் இலங்கை அரசாங்கம் பலவந்தமாகத் தடுத்து வைத்துள்ளதாக பேராசிரியர் போய்ல் தெரிவித்துள்ளார்.

1948ஆம் ஆண்டின் இனப்படுகொலை தொடர்பான சட்டத்தின் சரத்து ஐ.ஐ.(சி) இன்படி இனப்படு கொலை நடவடிக்கைகளுக்குள் இச் செயல் உட்படுத்தக் கூடியதாகும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

பேராசிரியர் போய்ல் சர்வதேச சட்டங்களில் நிபுணத்துவம் பெற்றவர் என்பதோடு இல்லினொய்ஸ் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளருமாவர்.

வன்னியிலுள்ள இந்நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் எல்லோரும் கவனமெடுக்க வேண்டுமெனவும், தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் இந் நடவடிக்கை இனப்படுகொலையின் ஒரு அம்சம் எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போரின் போது இடம் பெற்றது போல் மீளவும் ஒரு முறை இவ்வாறு இடம்பெற இடமளிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (50)

# யாழ்.பல்கலை மாணவர்கள் நாளை விரிவுரைகளுக்கு திரும்புவர்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்.பல்கலைக்கழகத்தின் சகல மாணவர்களையும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வகுப்புக்களுக்கு சமுகமளிக்குமாறு யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இழப்புக்களால் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வன்னி மாணவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வகுப்புகளுக்கு மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் சமுகமளிக்க வில்லை.

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி வருடத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் நாளை முதல் வகுப்புக்களுக்கு சமுகமளிக்கும் படியும் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (1)




யாழ்ப்பாணம், மே 24

இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 24

கோண்டாவில் மேற்கு சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள் ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 11 | 25.05.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | பிரதமை |
| | பி.ப. 04.34 வரை |
| நட்சத்திரம்: | ரோகினி |
| | மாலை 06.11 வரை |
| சுபநேரம்: | 11.52 - 01.22 |
| ராகுகாலம்: | 07.22 - 08.52 |

# திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைக்கான அடிக்கல்லை ஆயர் ஜெமரியா நாட்டினார்

**1864 மே 4**

*1864ஆம் ஆண்டு மே மாதம் இருபத்தி நான்காம் திகதி யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைக்கு (Holy Family Convent) அடிக்கல் நாட்டப்பட்டது.*

*அப்போது யாழ்ப்பாண ஆயராக இருந்த வணக்கத்துக்குரிய கலாநிதி. செமரியா அடிக்கல்லை நாட்டினார். அடிக்கல் நாட்டு விழாவில் பெருமளவு கத்தோலிக்க மதகுருமார்கள் கலந்து கொண்டனர்.*

**சகல சமூகங்களையும் சேர்ந்த மக்கள் கலந்து சிறப்பித்தனர்**

*சகல சமூகங்களைச் சேர்ந்தவர்களும் இந்த அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் கலந்துகொண்டனர். ஆதரவற்ற யுவதிகளுக்குக் கல்வி புகட்டுவது திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையின் குறிக்கோள்களில் முதன்மையானதாகக் கருதப்பட்டது.*

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

*அதே ஆண்டு ஜூன் மாதம் விக்ரோறியா மகாராணியின் பிறந்ததினம் திருக்குடும்பகன்னியர் மடத்தில் சிறப்பான முறை யில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் கன்னிமேரியின் திருவுருவச் சிலை அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. இதையும் யாழ்.ஆயர் செமரியாவே நாட்டிவைத்தார். அப்போதைய இலங்கை ஆளுநர் சார்ள்ஸ் மெக்கார்த்தியும் இந்த அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. இந்நிகழ்விலும் பெருமளவு பொதுமக்கள் கலந்துகொண்டனர்.*

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூர் 6 விக்கெட்டுக்களினால் அபாரவெற்றி அரையிறுதியுடன் வீடு திரும்புகிறது சென்னை

DLF IPL

## இறுதிப்போட்டியில் டெக்கான் - பெங்களூர் பலப்பரீட்சை இன்று

ஜெகன்னர்ஸ் பேர்க், மே 24

பண்டே, ராவிட்டின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் சென்னை சுப்பர்கிங்ஸை வீட்டுக்கு அனுப்பி 6 விக்கெட்டுகளினால் அபார வெற்றி பெற்று டெக்கான் அணியுடனான இறுதி மோதலுக்கு தயாராகியுள்ளது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல் ருவன்ரி- 20 போட்டிகளின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நேற்றிரவு ஜெகன்னர்ஸ் பேர்க்கின் நியு வோண்டளூர்ஸ் ஸ்ரேடியத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருந்த சென்னை சுப்பர் கிங்ஸும் மூன்றவது இடத்தில் இருந்த பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர்றோயல்சலஞ்சர்ஸின் அணித் தலைவர் கும்ளே முதலில் தமது அணி களத் தடுப்பில் ஈடுபடும் எனத் தெரிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடத் தயாரான தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸின் ஆரம்ப வீரர்களாக பார்த்திவ் பட்டேலும் சாதனை வீரர் மதியூ ஹைடனும் களமிறங்கினார். தனது ஓட்ட எண்ணிக்கையை (546) அதிகரிக்க ஆரம்பித்த ஹைடன் 19 பந்துகளில் 2 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 26 ஓட்டங்களைப் பெற்று பண்டேயிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். சென்னை அணி 69 ஓட்டங்களைப் பெற்றபோது 7 பௌண்டறிகளுடன் 36 ஓட்டங்களைப் பெற்ற பட்டேல் கலிஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

மூன்றாவது விக்கெட் இணைப்பட்டமாக களமிறங்கினர் தோனியும் சுரேஸ் ரெய்னாவும் இடைவேளையின் போது சென்னை அணி 2 விக்கெட் இழப்புக்கு 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இடைவேளையின் பின்னர் மீண்டும் ஆட ஆரம்பித்தனர். அணி 104 ஓட்டங்களை பெற்ற போது சுரேஸ் ரெய்னா பிரவீன் குமாரின் பந் தில் பௌச்சரிடம் பிடிகொடுத்து பெவிலி யன் திரும்பினார்.

தொடர்ந்து மோர்கலுடன் இணைந்து நிதானமாக ஆடிய தோனி 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மோர்கலுடன் ஜக்கப் ஓரம் இணைந்தார். ஓரம் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

பெங்களூர் றோயல் சார்பில் பந்து வீசிய வினைகுமார் 2 விக்கெட்டுக்களையும், பிரவீன்குமார், கலீஸ், வான்டேர்மேர்வ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டிக் கனவுடன் இறங்கிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸின் கலிஸ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சிறப்பாக துடுப்பெடுத்தாடிய பண்டே 8 பௌண்டறிகளுடன் 47 ஓட்டங்களைப் பெற்றார் இப்போட்டியில் சிறப்பாக ஆடிய ராவிட் பெங்களூரின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இவ்வாட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 6 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது. சென்னை சார்பில் பந்து வீசிய கோனி, மோர்கல் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் டெக்கான் அணியுடன் மோதுகின்றது.

## மனிக் பாம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிக்பாம்முகாமைச்சிறப்பானதொருமுகாமாகக் காட்டிக்கொள்ள இலங்கை அதிகாரிகள் பிரயத்தனப்பட்டிருந்தனர். பான் கீ- மூனை வரவேற்கும் பெரிய பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. குழந்தைகள் கொடியசைத்து வரவேற்றனர். ஆனாலும் முகாம்கள் அளவுக்கு அதிகமாக நிரம்பி வழிந்தமை அப்பட்டமாகத் தெரிந்தது.

குறிப்பிட்ட ஓர் இடத்தில் 74 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்த எண்ணிக்கையில் பாதி எண்ணிக்கையானோர் தங்குவதற்குத் தான் அங்கு இடமுள்ளது. தற்காலிக வைத்திய கூடங்களில் போசாக்கின்மையால் வாடும் நோயாளர்கள் மீது ஈக்கள் மொய்த்திருந்ததை, அவர்கள் படுத்துக் கிடந்தமையை பான் கீ -மூன் கண்டார்.

இவற்றை எல்லாம் கண்ட அவர் தன்னாலான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

மக்களிடம் விசாரிக்கின்ற சோதனை செய்கின்ற பணிகள், முன்னாள் போராளிகளை அடையாளம் கண்டு பிடிக்கிற நிகழ்வும் கூடிய விரைவில் முடிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் தாமதமின்றித் திரும்ப வேண்டுமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும் -

அந்த மக்கள் எல்லோரும் பொறுப்புள்ள இலங்கைப் பிரஜைகளாக சமூகத் தில் ஒன்றுபடுத்தப்பட வேண்டும். இலங் கையில் சிறுபான்மையினரின் பிரச்சினை கள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும் - கூறினார்.

இந்த முகாமிலுள்ள மக்கள் அவற்றை விட்டு வெளியேறமுடியாத நிலையி லேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

முகாம்களில் உள்ளவர்களில் பாது காப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளவர்கள் யாராவது இருக்கிறார்களா என்பதனை அரசாங்கம் விசாரித்தும் சோதனை செய்யதும் வருகிறது - என்றார். (அ-7)

## அரசில் சேர்வது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகளையும் நான்கு இணையமைச்சர் பதவிகளையும் வழங்க வேண் டும் என்று தி.மு.க. கோரியிருந்தது. இதற்கு காங்கிரஸ் மறுத்ததையடுத்து வெளியில் இருந்து ஆதரவு வழங்கப் போவதாக தி.மு.க. அறிவித்திருந்தது.

எனினும், தி.மு.கவை அமைச்சரவையில் சேர்ப்பதற்கான முயற்சிகள் தொடர்வதாக காங்கிரஸ் தெரிவித்தது. இந்தப் பிரச் சினை தொடர்பாக, கட்சியின் உயர் நிலைக்குழு விவாதிக்கும் என்று தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான கருணாநிதி அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், தி.மு.க. காங்கிரஸ் இடையிலான பிரச்சினைகள் விரைவில் பேசித் தீர்க்கப்படும் என்று தமிழக காங் கிரஸின் மேலிடப் பொறுப்பாளரும் மத்திய அமைச்சருமான குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார். (அ-1)

## ஒன்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்தை எதிர்த்து அவர் நிலைநாட்டிய சாதனையை கௌரவிக்கும் முகமாக மல்வத்த மற்றும் அஸ்கிரிய பௌத்தமத பீடங்கள் ஜனாதிபதிக்கு 'விஸ்வகீர்த்தி ஸ்ரீஸ்ரீ சிங்களாதீஸ்வர' என்றகௌரவவிருதைநேற்றுவழங்கியது.

ஸ்ரீ தலதா மாளிகையின் வரலாற்றுச் சிறப்புமிக்க எண்கோண மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த விசேட நிகழ்ச் சியின் போது மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்க தேரர்கள் ஜனாதிபதி மஹிந்த வுக்கு இந்த விருதை வழங்கினர். தலதா மாளிகையில் இத்தகைய விருதைப் பெறும் முதலாவது இலங்கைத் தலைவர் ஜனாதிபதியாவார்.

ஜனாதிபதி அங்குநன்றி தெரிவித்துப் பேசும் போது - இப்போது ஒன்றுசேர்க்கப்பட்டுள்ள நாடு இனிமேல் எந்தவகையிலும் இரண்டாகப் பிளவுபட இடமளிக்கப்படமாட்டாது.

மகா சங்கங்களின் முன்னிலையில் இந்த உறுதியை வழங்குகிறேன்- என்று விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த 30 வருடங்களாக பயங்கரவாதத்துடன் காலங்களிக்க வேண்டி இருந்ததால் புத்த சாசனத்துக்காக நிறைவேற்ற வேண்டிய பல கடமைகளை நிறைவேற்ற முடியவில்லை. அந்தக் கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றி சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய பொறுப்பு எனக்கும் அரசாங்கத்துக்கும் உண்டு, போரில் வெற்றி வேண்டும் என்று எனக் குத் தொடர்ந்து தைரியம் ஊட்டியதற்காக மகா சங்கங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன் - என்று தனது நன்றி உரையில் அவர் தெரிவித்தார். (அ-7)

## அதிகாரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை இலக்குகள் குறித்து அவர் குறிப்பிடுகையில் கூறியதாவது:

எமக்கு முன்னுள்ள உடனடி விவகாரங்கள் பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுடனும் தொடர்புடையதாகும்.

இலங்கையில் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மோதல் முடிவுக்கு வந்திருப்பதால். தற்போது அங்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய தருணம் வந்துள்ளது.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்த நாட்டின் அரசமைப்புக்கு அமைய அதிகாரங்களை பரவல் செய்வதன் மூலம் பிரச்சினைக்குரிய மூலகாரணங்களை தீர்க்க முடியும் என்று நம்புகிறோம். அந்த நாட்டில் வாழும் தமிழர்களை பாதுகாப்பதற்கும் அங்கு பாதிக்கப்பட்ட தமிழர்களின் மறு வாழ்வுக்கும் இந்தியா மிக விரைந்து செயற்படும் - என்றார்.

பாகிஸ்தான் அரசு தனது நாட்டில் உள்ள பயங்கரவாத அமைப்புகளை ஒழிப்பதற்கு நம்பகரமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும். நாம் எமது அயலவர்களை மாற்ற முடியாது. ஆனால் பாகிஸ்தானுடன் அமைதிபேணுவது மிகவும் முக்கியமான தொன்றாகும்.

புதிய வெளிநாட்டு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் ஆவார். (அ-7)

## உகந்த அரசியல் தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நேற்று கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிற்பகல் 4 மணிக்கு சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் கண்டி குயீன்ஸ் ஹோட்டலில் நேற்றிரவு செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அங்கு அவர் தெரிவித்த கருத்துக்கள், தகவல்கள் வருமாறு:-

இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களும் அமைதியான வாழ்க்கையை முன் னெடுக்க அரசு உதவ வேண்டும். எல்லா மக்களும் நல்லிணக்கத்துடன் வாழும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

சிறுபான்மையின மக்களின் பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அவர்கள் மத்தியில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லையெனில் இந்த நாட்டில் முந்திய நிலையே மீண்டும் உருவாகும் என்பதனை சகலரும் மனதில் கொள்ளவேண்டும்.

அகதி முகாமில் தங்கியுள்ளவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க ஐ.நா. முகவர் அமைப்புக்கள், சர்வதேச தொண் டர் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எந்தவிததடையும் விதிக்கக்கூடாது. அந்த அமைப் புக்கள் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க வேண்டும்.

முகாம்களில் உள்ள மக்களின் தேவைகள் மிக அதிகமாக உள்ளன. அவற்றை நிறைவேற்றக் கூடிய வளங்கள் போதியளவு அரசிடம் இல்லை.

மக்களின் தேவைக்கும் அவர்களுக்கு என்ன உதவி வழங்க வேண்டும் என்பதற்கும் இடையில் பெரும் இடைவெளி காணப்படுகிறது.

உணவு, மருந்து, குடிதண்ணீர், அடிப்படை சுகாதார வசதி ஆகியன போதிய அளவு கிடைக்கவில்லை என மக்கள் என்னிடம் முறையிட்டனர்.

### போதுமான உதவிக்ள் இல்லை

இடம்பெயர்ந்த மக்களின் தேவை களை இலங்கை அரசு ஓரளவுதான் பூர்த்தி செய்து வருகின்றது. அந்த உதவி போது மானதாக இல்லை என்பதை அவதானித்தேன்.

முகாம்களில் தங்கியுள்ளவர்களில் 80 சதவீதமானவர் களை இவ்வருட முடிவுக்குள் அவர்களது சொந்த இடங் களில் மீள்குடியேற்றி விடுவோம் என்று இலங்கை அரசு என்னிடம் தெரிவித்துள்ளது.

மக்களின் மீள்குடியமர்வுக்கு சர்வதேச உதவி தேவை என ஐ.நா கருதுகிறது. மோதல் நடந்த பிரதேசங்களில் உள்ள கண்ணி வெடிகளை அகற்றத் தமது சர்வதேச பங்காளர்கள் மூலம் உதவுவோம்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை வெளிப்படையாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் -

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களை விமானம்மூலம் சென்று பார்வையிட்டேன். பெரும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருப்பதையிட்டு கவலை அடைகிறேன்.

30 வருடங்களாக தொடர்ந்த யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. இந்த யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை பார்த்தேன். அவர்களுக்கு உரிய புனர்வாழ்வுத் திட்டங்களை அரசு மேற்கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு ஐ.நா. அமைப்புக்கள் தயாராகவுள்ளன. ஏற்கனவே பல வேலைத்திட்டங்களை அந்த அமைப்புக்கள் முன்னெடுத்துள்ளன.

ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. அவற்றை அகற்ற ஐ.நா. தனது உதவிகளை வழங்கும்.

அகதிகளின் கல்வி நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான உதவிகளை வழங்க ஐ.நா. தயாராக உள்ளது - என்று தெரிவித்தார் பான் கீ மூன்.

நேற்றிரவு 11.30 மணிக்கு ஐ.நாவின் செயலாளர் நாயகம் நியூயோர்க் திரும்பினார்.

## பறந்தார்;...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. செயலாளர் நாயகம்.

மனிக்பாம் முகாம் பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர் மோதல் நடைபெற்ற பிரதே சங்களையும் ஹெலிகொப்டரில் சுற்றிப் பார்த்தார் பான்கீ - மூன்.


கடற்கரையை ஒட்டி அமைந்திருக் கின்ற அந்த யுத்த தளங்களைப் பார்க்க மேற்குலக செய்தியாளர்கள் அனுமதிக்கப் பட்டிருந்தது இதுவே முதன்முறையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-7)


தேசிய கல்வி நிறுவன B.Ed தெரிவு போட்டிப் பரீட்சைகள்

★ ஞாயிறு (இன்று): பி.ப. 1 - 5 வரை மாதிரி வினாத்தாள்.

★ மேலதிக விடயங்கள்: திங்கள் முதல் வெள்ளி வரை பி.ப. 3 - 5 வரை நடைபெறும்.

★ யாழ்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)



VACANCY

Computer Instructors

எமது நிறுவனத்திற்கு ஆண்பெண் இருபாலாரிடமிருந்தும் கணனிப் பயிற்றுவிப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கணனி அனுபவம் இல்லாத ஆர்வமுடையவர்களும் பயிற்சி அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் சுயவிபரங்களை 30.05.09 க்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

CB Computer Academy

Station Road, Kondavil. ☎ 021-4590291

கற்சுமி வெளியீடு

✱ தரம் 1,2,3,4,5, கணிதம் நுண்ணறிவு வினாத்தாள்கள்

✱ தரம் 6 - 11கணிதபாட வினாத்தாள்கள்

வெளிவந்து விட்டன

உங்கள் வழமையான முகவரிடம் பெறலாம்

கற்சுமி, நாவலர் வீதி, யாழ்

Take an easy step towards your Management Degree path

For Whom:- For senior and middle level executives in public and private sector organizations dealing with Business Management & Marketing.

(12 Months) B.Sc (Hons) in Business IT

(12 Months) HND in Business Management

(6 Months) Adv.Dip. in Business Management

(6 Months) Dip. in Business Management

புதிய பிரிவுகள் ஆரம்பம் வார நாள்:- 27-05-2009 வார இறுதி நாள்:- 30-05-2009

IDM 216, Navalar Road, Jaffna. Thavady Road, Manipay. Tel.No: 021 2229901

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா ! நீங்களும் பட்டதாரி ஆகலாம் .....

அனைத்து துறைகளிலும்

இந்தியாவில் பட்டப்படிப்பு

HINDUSTAN COLLEGE OF ARTS AND SCIENCE Affiliated To MADRAS UNIVERSITY

A/L அனைத்து துறை மாணவர்களுக்கு...

UNDER GRADUATE PROGRAMME

B.Sc. - Biochemistry,
B.Sc. - Electronics & Communication Science,
B.Sc. -Microbiology,
B.Sc.- Biotechnology,
B.Sc.- Computer Science,
B.Sc.- Information Systems Management,
B.Sc. - Electronic Media,
B.Sc. - Visual Communication)
B.Com. (General)
B.C.A
B.B.A

POST GRADUATE PROGRAMME

M.Sc. (Information Technology, Computer Science, Applied Microbiology, Biotechnology, Bioinformatics, Electronic Media)
M.A Public Relations

அனுமதிகள் வழங்கப்படுகின்றது உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள்

SONA COLLEGE OF TECHNOLOGY Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

A/L கணித துறை மாணவர்களுக்கு பொறியியல் கற்கைகள்...

COURSES OFFERED

B.E / B. Tech. Degree [Full time – 4 yrs]
B.E. - Civil Engineering
B.E. - Mechanical Engineering
B.E. - Computer science & Engineering
B.E. - Electrical & Electronics Engineering
B.E. - Electronics & Communication Engineering
B.Tech - Information Technology
B.Tech - Fashion Technology

M.E. Degree [Full time – 2yrs]
MBA - Master of Business Administration
MCA - Master of Computer Applications

ELIGIBILITY 3 PASS IN A/L

ADMISIONS ARE GIVEN IN COLOMBO & JAFFNA

V4 Educational Consultancy(Pvt)Ltd

Head Office- #7-1/1, W.A.Silva mawatha, Wellewatte, Colombo-06.

Branch- #274, Pointpedro Road, Aanaipanthi Junction, Jaffna.

Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com

T.P- 0773867257, 0775936343, 0212228374


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org